
NOVEMBER 1934 No. [illegible]

# செங்குந்த மித்திரன்

ஒன்று பட்டாலுண்டு வாழ்வே
ஒற்றுமை நீங்கிடி லனைவர்க்கும் தாழ்வே




தேர்தல் புராணம். பஞ்ச மூர்த்திகள் படலம் பார்க்கவும்.

[illegible] பி. செ. மாணிக்கவாசக முதலியார்.
[illegible]—தி. கா. சபாபதி முதலியார்.

A. JAGANNATHACHARI

208451

# நன்கொடைகள்

மணவை ச. நா. குமரகுரு முதலியார் மூலம்

ராக்கியாபாளையம் குலாபிமானி திரு. க. பழனிக்குமார முதலியார் அவர்கள் வழங்கிய நன்கொடை ரூ. 0 4 0

திருப்பூர் கதர்கடை திரு. அ. மாரப்ப முதலியார் அவர்கள் வழங்கிய நன்கொடை ரூ. 0 4 0

கோவை, சிவகிரி யடுத்த பாலமேட்டுப் புதூர் திரு. மு. சி. கருப்பண்ண முதலியார் அவர்கள் வழங்கிய நன்கொடை ரூ. 0 4 0

கோவை சிவகிரி திரு. செ. ரா. நாச்சி முதலியார் அண் கோ, (ஜவுளி) வழங்கிய நன்கொடை ரூ. 0 8 0

கோவை சிவகிரி பாலமேட்டுப் புதூர் திரு. பூ. நா. நாச்சி முத்து முதலியார் அவர்கள் வழங்கிய நன்கொடை ரூ. 0 4 0

நேரிலும், மணியார்டர் மூலமும் கிடைத்தவை

சென்னிமலை திரு. N. குப்புசாமி முதலியார் அவர்களுக்கு ஆண் குழந்தை பிறந்ததன் ஞாபகார்த்தமாக சங்கத்திற்கு வழங்கப் பெற்ற நன்கொடை ரூ. 1 0 0

மாணும்பதி திரு. அ. முருகேச முதலியார் அவர்கள் சென்ற ஆவணி௴ 27௳ செய்த கிருகப் பிரவேசத்தில் வழங்கிய நன்கொடை ரூ. 0 4 0

கருவிழுந்த நாதபுரம் A. அமிர்தலிங்க முதலியார் மூலம் கிடைத்தவை

பவ௵ ஆனி௴ 3௳ கருவிழுந்த நாதபுரம் முத்துக்குமார முதலியார் குமாரர்கள், வீரப்ப முதலியார், தங்கவேலு முதலியார் இவர்கள் விவாக முகூர்த்தத்தில் நன்கொடை வசூல் ரூ. 1 0 0

பவ௵ ஆவணி௴ 29௳ (14-9-34) நாங்கூர் மு. வைத்திலிங்க முதலியார் குமாரர் ரத்தின முதலியார்க்கு நடந்த விவாக முகூர்த்தத்தில் நன்கொடை வசூல் ரூ. 0 8 0

பவ௵ ஆவணி௴ 29௳ (14-9-34) நாங்கூர் ஆறுமுக முதலியார் குமாரர் சுப்பிரமணியனுக்கு நடந்த விவாக முகூர்த்தத்தில் நன்கொடை வசூல் ரூ. 0 8 0

ஸ்ரீமுக௵ புரட்டாசி௴ 31௳ (16-10-33)-ல் காலஞ்சென்ற கருவிழுந்த நாதபுரம் நா. அருணாசல முதலியாருக்கு 6-10-34-ல் நடந்த வருஷாப்பியத்தில் நன்கொடை வசூல் ரூ. 0 8 0

---

## பிழை திருத்தம்

சென்ற இதழில் வெளிபிட்ட முனிசிபல் தேர்தல்களில் சைதாப் பேட்டையில் தேர்ந்தெடுக்கப்பெற்ற நம்மவர்களில் ஸ்ரீ T. நடேச முதலியார் என்றிருப்பதை S. நடராஜ முதலியார் எனத் திருத்தி வாசித்துக் கொள்ளுமாறு வாசகர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

# செங்குந்தமித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின்
மாத வெளியீடு

ஆசிரியர் : பி. சே. மாணிக்கவாசக முதலியார்.

| தொகுதி—அ | யவ௵ கார்த்திகைமீ | பகுதி கக |
| --- | --- | --- |

## உள்ளடக்கம்

பத்திரிகாசிரியர் முன்னுரை ... 622
மதிப்புரை ... 630
தேர்தல் புராணம் .. 631
கனகாம்பாள்—கண்ணப்பன் ... 637
இயற்கையைத் தன் அடிப்படுத்தும் மனித வுயிரின் மாண்பு 640
இரவி மைந்தன் வள்ளன்மை ... 643
சாதுர்யவான்களின் சம்பாஷணை .. 646
அதிசயம், அற்புதம், ஆச்சரியம் ... 653
இலங்கையில் செங்குந்தர் எப்போது குடியேறினர்? ... 656
விகடத் துணுக்குகள் ... 658
ஏகாதசி விரதம் சைவர்களுக்கும் உரியதே! ... 662
செங்குந்த யாத்திரைவாசி ... 664
கதம்ப விநியோகம் ... 667
வர்த்தமானம் ... 669
ஸ்தல ஸ்தாபன தேர்தல்களில் செங்குந்தர்களின் வெற்றி 678
கிளர்ச்சி ... 681

208K51

உ

ஓம்

# பத்திரிகாசிரியர் முன்னுரை

*தொழுதுனை வாழ்த்தி வணங்குதற் கிங்குன்*
*தொண்டர்பல் லாயிரர் சூழ்ந்து நிற்கின்றோம்*
*விழிதுயில் கின்றனை யின்னுமெந் தாயே!*
*வியப்பிது காண்! பள்ளி எழுந்தருளாயே!*

—பாரதியார்

"தாயே! இன்னுமா உறக்கம். துயிலெழுங்கள். எங்கள் பேரொலி உங்கள் திருச் செவிகளிற் கேட்கவில்லையா? நாங்கள் ஊதும் வெற்றிச் சின்னங்கள் உமது காதுகளுக் கெட்டவில்லையா? எங்கள் வாழ்த்தொலிகள் அண்ட கடாகங் கிழித்துச் சென்று தேவலோகத்தையுஞ் செவிடுபடுத்துகின்றனவே. தேவர்களையும் திடுக்கிடச் செய்யும் எங்கள் ஆரவாரம் தங்களை விழித்தெழச் செய்யாத தென்னே? தாயே! எழுந்திருங்கள். இதோ, உமது புதல்வர்கள் பல்லாயிரவர் சூழ்ந்து நிற்கின்றோம். உமது திருவடிகளைப் பூசித்து வணங்கக் காத்திருக்கின்றோம். திருவருள் செய்யுங்கள்."

பாரதத் தாய் நிமிர்ந்து நோக்கினாள். உலகமே திரண்டு வந்தது போன்ற ஓர் பெருங் கூட்டம். பாரதியாரின் தேசிய கீதம் எங்கும் பரவி சப்திக்கின்றன. 'ஜே' முழக்கம் வானைப் பிளக்கின்றது. மகாத்மா காந்தி—கு—ஜே; காங்கிரஸ் மகா சபை-கு—ஜே; சத்தியமூர்த்தி-கு—ஜே; பாரத மாதா-கு-ஜே; எங்கும் 'ஜே' கோஷ்டம்; எங்கும் 'ஜெய ஜெய' முழக்கம்.

அன்னையார் தலையினைச் சாய்த்தாள். மீண்டும் கண்களை மூடினாள். உறங்குவ தொப்ப இருந்தாள்.

ஒன்றுந் தோன்றாது அனைவரும் விழித்தனர். ஒருவர் முகத்தை ஒருவர் நோக்கினர். 'ஜே' சப்தம் குறைந்தது. முகங்கள் வாடின. எல்லோருமாகச் சிறிது ஆத்திரத்துடனே,

*மதலைய ரெழுப்பவுந் தாய்துயில் வாயோ?*
*மாநிலம் பெற்றவ ளிஃதுண ராயோ?*
*குதலை மொழிக்கிரங் காதொரு தாயோ?*
*கோமகளே! பெரும் பாரதர்க் கரசே!*

என்ற பாரதியாரின் பாடலைப் பாடித் துதித்தனர்.



'பாரதி' துயி லெழுந்தாள். கூட்டத்தாரை நோக்கினாள். அவளது முகத்தில் சிறிது புன்முறுவல் பூத்தது. கண்கள் பிரகாச மடைந்தன. என்றாலும், முகக்களை மட்டும் சிறிதேனும் மாறவில்லை. வெறுப்பும், மனக்கவலையும் உள்ளத்தில் நிறைந்திருக்கிற தென்பதை அவளது பொலிவற்ற முகம் வெளிப்படுத்தியது. வெகுநேரம் வரையில் வாய் திறவாமல் அங்கிருந்தவர்களை உற்று நோக்கிய வண்ண மிருந்தாள்.

"அன்னையே! உமது மதிமுகம் இன்னும் வாடி யிருக்கின்றதே. சந்தோஷமென்பது சிறிதும் தோன்றவில்லையே. சென்ற ஒரு மாதமாக நிகழ்ந்து வந்த பெரும்போரை நினைந்து வருந்துகின்றீர்களா? அவ்வாறாயின் அந்த வருத்தத்தை ஒழித்துவிடுங்கள். கடந்த சனிக்கிழமையோடு போர் முடிந்துவிட்டது. நமக்கு மிகுந்த வெற்றியுடனே அது முடிந்திருக்கிறது. தங்களுடைய உண்மைப் புதல்வர்களே வெற்றி பெற்றிருக்கிறார்கள். நாங்க ளனைவரும் அவர்கள் பக்கமா யிருந்து எதிரிகளுடன் கடும்போர் புரிந்து வெற்றி வாகை சூட்டியிருக்கிறோம். வெற்றி என்றால் சாதாரண வெற்றி யன்று. எங்குமே கிடைக்க முடியாத அத்தகைய வெற்றி. தங்கள் உண்மைப் புதல்வர்க ளெல்லாம் ஜெயக்கொடி தாங்கியபின் தாங்கள் வருந்துவது எதற்கு?

தங்கள் அடிமைத்தளைகள் இன்னும் சில தினங்களில் தானே அற்று விழுந்து போகும். நெடுநாட்களுக்கு முன்பு தங்களை விட்டுப் பிரிந்துசென்ற சீரும் சிறப்பும் விரைவிலேயே தங்களை வலியவந்து சேரப்போகின்றன. தங்கள் புதல்வர்களுக்குள் ஏழை என்றும், பணக்காரனென்றும் இல்லாத நிலை ஏற்படப்போகிறது. தங்கள் ராட்டைக் கொடி கோட்டைக்குள் விரைவில் பறக்கப்போகின்றது. எனவே, தாங்கள் வருந்துவதொழிக."

"அருமைப் புதல்வர்களே! நீங்கள் சொல்லுவ தெல்லாம் உண்மைதான். சென்ற சனிக்கிழமை உங்கள் போர் வெற்றிகரமாக முடிந்திருக்கிற தென்பதும் உண்மையே. வெற்றி பெற்றவர்களெல்லாம் எனது நன்மையைக் கோருபவர்களே. எனது அடிமைத்தளை நீங்க, செல்வமும் சிறப்பும் என்னை வந்தடைய இராப்பகல் உழைக்கக் கூடியவர்களே. ஆனால், எப்பொழுதுஞ் சிலர்..............."

"தாயே! இனி அவர்களைப் பற்றி கவலைப் படாதீர்கள். சனிக்கிழமையோடு அவர்கள் தொலைந்து போனார்கள். வெகு

தூரத்திற்கப்பாலும் அவர்களை விரட்டி யடித்துவிட்டோம். இனி அவர்கள், பிராம்மணர்—பிராம்மண ரல்லாதார் என்ற பேச்சினால் எவரையும் ஏமாற்ற முடியாது. அவர்களது வகுப்பு வாதம் இனி எக்காலத்திலும் தலைதூக்கப் போவதில்லை. இங்கிலாந்திலும் இந்தியாவிலுமுள்ள தங்கள் எதிரிகள் கவலைப்படுமாறு செய்துவிட்டோம்''

"ஆ! என்ன கூறினீர்கள்! தேர்தல் வெற்றியும் ஒரு வெற்றியாகுமோ? இந்த வெற்றியால் எந்தத் துரும்பை அசைக்க முடியும்? என் புதல்வர்களை யெல்லாம் அடக்கி விட்டதாகவும், காங்கிரஸ் மகாசபையை ஒடுக்கிவிட்டதாகவும் வெல்லிங்டன் அடித்த தப்பட்டை பொய்யென்பதை இத் தேர்தல் வெற்றி நிரூபிக்கும்; வெள்ளையர்களின் உள்ளத்தில் அது சிறிது அச்சத்தைத் தோற்றுவிக்கும். அது தவிர, வேறு என்ன பலன் அதனால் ஏற்படப்போகிறது? மகாத்மா காந்தி போன்ற என் அன்புக்குரிய புதல்வர்க ளனைவரும் தேர்தலில் கலந்துகொள்ளவே இல்லை. அவர்களெல்லாம் வெளியி லிருக்கும்போது இவர்கள் மட்டும் சட்டசபையில் சென்று என்ன சாதிக்கப் போகிறார்கள்? அந்தோ! வீண் முயற்சி, வீண்பணச் செலவு.''

"தாயே! அப்படிச் சொல்லாதீர்கள். இதற்காகவா நாங்கள் இவ்வளவு கஷ்டப்பட்டோம்?''

**(பாரத தேவி ஒரு அசட்டுச் சிரிப்பு சிரிக்கிறாள்).**

"நீங்கள் மிகவும் பரிசுத்தமானவர்கள். நேர்மையும், சத்தியமும் நிரம்பப் பெற்றவர்கள். உங்களைப் போன்றே மற்றவர்களு மிருப்பார்களென நம்பி கஷ்டப்பட்டீர்கள். எனது புதல்வர்கள் தேர்தலில் நின்று எவ்வளவு அபசாரப் பட்டிருக்கிறார்கள் தெரியுமா? ஒருவரை யொருவர் மிகக் கேவலமாக இகழ்ந்து பேசிக்கொண்டார்கள். ஒரு மாதமாகப் பொய் மூட்டைகளைக் கற்பனை செய்து அளந்து கொட்டினார் கள். எத்தனையோ உண்மைத் தொண்டர்களை யெல்லாம் தேசத்தைக் காட்டிக்கொடுப்பவர்க ளாக்கிவிட்டார்கள். எனது விடுதலைக்காகப் பல்லாண்டுகள் பாடுபட்ட பெரிய தியாகிகளை யெல்லாம் தேசத் துரோகிக ளாக்கிவிட்டார்கள். பூரண சுதந்தரத்தை விரும்புவது காங்கிரஸ் கட்சி என்றும், அடிமைத் தனத்தை விரும்புவது ஜஸ்டிஸ் கட்சி என்றும் பறைசாற்றினார்கள். சமூகங்களுக்குள் பலவித பிளவுகளை ஏற்படுத்தினார்கள். இவை தான் தேர்தலால் ஏற்பட்ட பலன்க ளாகும்.



'அன்னையின் கை விலங்குகளை முறிப்பதற்காக, தேசவிடுதலைக்காக வாக்குச் சகாயங்கூடச் செய்ய முன் வராதவனை 'மனிதன்' என்று நாம் ஒப்புக்கொள்ள முடியுமா?' என்று எழுதியது ஒரு பத்திரிகை. 'காங்கிரசுக்குக் கொடுக்கும் ஓட்டு சுயராஜ்யத்திற்குக் கொடுக்கும் ஓட்டாகும்' என்றது வேறொரு பத்திரிகை. 'தேசீயப் போராட்டத்திற்கு ஜனங்கள் எவ்வளவு தூரம் தயாராக இருக்கிறார்க ளென்பதைத் தேர்தல் முடிவு காட்டிவிட்டது' என்றது மற்றொரு பத்திரிகை. இவைகளெல்லாம் உண்மை யாகுமா?

தேர்தலில் குறிப்பிட்ட ஒருவரை ஆதரிக்காதவர்க ளெல்லாம் மிருகங்க ளாய்விடுவார்களா? தேர்தலில் வாக் களிப்பதற்கும் சுயராஜ்யத்திற்கும் என்ன சம்பந்தம்? சட்ட சபையைக் கைப்பற்றியதும் சுயராஜ்யம் கிடைத்துவிடுமா? இன்று காங்கிரஸை ஆதரித்து வாக்களித்தவர்க ளெல்லாம் தேசீய போராட்டத்திற்குத் தயாராக இருப்பவர்களா? அகில இந்திய காங்கிரஸ் தலைவராயிருந்த ஸ்ரீ எஸ். சீனிவாசய்யங்கார், தேசீய போராட்டம் வெகு மும்முரமாய் நடந்தபோது மறைந்தவர் இன்னும் வெளிவரவில்லையே. இன்று, சர். சண்முகத்தையே தோற்கடித்து வெற்றிமாலை சூடிய சாமி வெங்கடாசலம் தேசீய போராட்டத்தில் எவ்வளவு தூரம் கலந்து கொண்டார்? இவைகளை யெல்லாம் மறைத்துப் பத்திரிகைகள் வீண் புரளிகள் செய்கின்றன. தேர்தலில் கொடுக்கும் வாக்குறுதிகளில் ஒன்றையேனும் இவர்களால் நிறைவேற்ற முடியுமா? அறிவாளிகளையும், நியாயவான்களையும், தீவிர உழைப்பாளிகளையும் வெளிக்கு வரவொட்டாது மங்கிப் போகுமாறு செய்வதைத் தவிர தேர்தல் வெற்றியால் கிடைக் கும் பயன் வேறொன்று மில்லை.

எனது மக்களனைவரும் ஒன்றுபட்டா லொழிய எனக்கு விமோசனம் ஏற்படப்போவதில்லை. வடக்கே இந்து—முஸ்லிம் பிணக்கும், தெற்கே பிராம்மணர்—பிராம்மண ரல்லாதார் பிணக்கும் என்னுடைய அடிமைத் தளையை பலப்படுத்துகின் றன. வடநாட்டுப் பிணக்கை ஒழிக்க முயற்சிகள் அடிக்கடி நடைபெறுகின்றன. தென்னாட்டு நிலைமை மகாத்மா போன்றவர்களால் உணரப்படாத வகையில் மறைத்து வைக்கப்பட்டு வருவதால் யாதொரு முயற்சியும் நடைபெறுவதற் கில்லை. அகில இந்தியத் தலைவர்கள் சிறிது முயன்றால், இந்து—முஸ் லிம் பிணக்கைவிட இதனை வெகு விரைவில் மாய்த்துவிட முடியும். ஆனால், இங்குள்ளவர்கள் இந்தப் பிணக்கை வளர்ப

பதற்கே பல சூழ்ச்சிகள் செய்து வருகிறார்கள். ஆ! இத் தகையவர்களின் முன்பு எனக்கு விடுதலையும் ஏற்படுமா!"

**(மிக்க துயரங் கலந்த சிரிப்பு அவள் முகத்தில் தோன்றியது. திடீரென மறைந்து விட்டாள்.)**

அங்கிருந்த தேசபக்தர்க ளெல்லாம் அவளைக் காணாது வருந்தினர். அவள் சொன்ன ஒவ்வொரு வார்த்தையினைப் பற்றியும் யோசிக்கத் தொடங்கினர்.

"ஆம். அவள் சொன்னவை முற்றும் உண்மையே. இந்தியா சட்டசபையில் இவர்கள் சிலர் சென்றுவிட்டதால் என்ன பயன் ஏற்படும்? நியமன அங்கத்தவர்களும், முஸ்லிம்களும் ஒன்று சேர்ந்தாலே மெஜாரிடி உண்டாகிறது. இதற்குமேல் வைசராயின் சர்வாதிகாரம் இருக்கிறது. தேர்தல் போராட்டத்தால் சாமர்த்தியசாலிகள், சிறந்த அறிவாளிகள் வெளிக்கு வராமற் போக நேர்வதும் உண்மையே. ஸ்ரீ சத்தியமூர்த்திக்குக் காங்கிரஸ் ஆதரவு இல்லையாயின் அவருக்கு எவ்வளவு ஓட்டுகள் கிடைத்திருக்கும்? இதனை தினமணியும் 'ஸ்ரீ ராமசாமி முதலியாருக்குக் கிடைத்த ஓட்டுகளில் பெரும்பான்மை அவருடைய தனிப்பட்ட தாட்சன்யத்திற்குக் கிடைத்தவை என்று சொல்ல வேண்டுமே ஒழிய, அவர் கட்சிக்காகக் கிடைத்தவை என்று சொல்ல முடியாது. ஆனால், ஸ்ரீ சத்தியமூர்த்திக்குக் கிடைத்த ஓட்டுகள் ஒவ்வொன்றும் காங்கிரசுக்காகவே கிடைத்தவை. அவருடைய தனிப்பட்ட ஓதாவில் கிடைத்தவை யன்று' எனத் தெளிவாய் இரு அபேட்சகர்களது தாரதம்மியங்களையும் எடுத்துக்காட்டி இருக்கிறது. வர்த்தகத் தொகுதியில் வெற்றி பெற்றோருக்கும், தோல்வி யுற்றோருக்குமுள்ள வித்தியாசத்தை யாவரு மறிவர். அந்தோ! கட்சிப் பிணக்கால் நாட்டுக்கு நேரும் கெடுதிகள் எவ்வளவு?" என்று வருந்தியவாறு அனைவரும் பிரிந்து சென்றனர்.

இந்த நடவடிக்கைகளில் கலந்திருந்த நமது மித்திரனுக்குக் கிளம்பிய உற்சாகம் சொல்ல முடியாது. ஓரே ஓட்டமாய் ஓடிவந்தான். பேனாவும் கையுமாய் உட்கார்ந்தான். கீழ்க்கண்ட செய்தியை உங்களுக்காக எழுதி அனுப்பியிருக்கிறான். இதனை நன்றாக ஊன்றிப் படியுங்கள்.

"நமது தேசம் மிக விசாலமானது. முப்பத்தைந்து கோடி மக்களை யுடையது. இவர்க ளனைவரையும் ஒரே கையில் அடக்கிவிடுவ தென்பது மிகவும் அருமையாகும். என்றாலும் தலைவர்கள், அறிவாளிகள், தியாகிகள் ஏன் ஒன்றுபடக்



கூடாது. முஸ்லிம் தலைவர்களே! பிராம்மணரல்லாதாரது தலைவர்களே! நீங்கள் காங்கிரஸ் மகாசபையில் சேர்வதற்குச் சற்றும் தயங்காதீர்கள். பாரதி தேவியின் அழைப்புக்குச் செவி சாயுங்கள். தேச விடுதலைப் போராட்டத்தில் பிரதம படையின் தளபதிகளாய்ச் சென்று வெற்றி கொள்ளுங்கள். அந்தப் படையிலுள்ள வேஷதாரிகளை—ஆஷாடபூதிகளை விரட்டி யடியுங்கள். அறிவுடை மணிகள் மங்கிப்போகாது தேச முழுதும் ஒளி வீசுமாறு செய்யுங்கள். மலைப் பிஞ்சுகளும், மண்ணாங்கட்டிகளும் இடத்தை அடைத்துக் கொள்ளாதவாறு செய்யுங்கள். தென்னாட்டில், சத்தியசீலரான மகாத்மாவின் பெயரால் தீமைகள்—அக்கிரமங்கள் நடவாது பார்த்துக் கொள்ளுங்கள். புனிதமான காங்கிரஸுக்குப் பழி பாவங்கள் சேராது கவனித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு இன்று நேர்ந்துள்ள தோல்வி ஒரு நல்ல பாடத்தைக் கற்பித்திருக்கிறது. ஒன்று, மேற்சொன்னபடி நீங்கள் காங்கிரஸில் சேரவேண்டும். அல்லது உங்கள் கொள்கைகளை மாற்றி, இந்திய மாதாவின்—பாரத மக்களின் விடுதலைக்கேற்ப அமைத்துக்கொண்டு உங்கள் கட்சியை ஒழுங்குபடுத்த வேண்டும். கட்சித் தலைவர்களிடத்திலுள்ள பொறாமைக் குணத்தையும், துரோக சிந்தையையும் அறவே அகற்றவேண்டும். சுயநலம் பிடித்த—பணத் தாசையில் மூழ்கிய தலைவர்களைக் களைந்தெறிந்து கட்சியைப் புனிதப்படுத்த வேண்டும். கட்சியின் முயற்சி முற்றும் பாரத ஜனங்களின்—ஏழை மக்களின் துன்பங்களைத் துடைப்பனவாகவே இருக்கவேண்டும். உங்கள் கட்சியை அகில இந்தியக் கட்சியாக்கி காங்கிரஸ் கட்சியோடு ஒத்து நடக்குமாறு செய்தல்வேண்டும். பொருளாதார சம்பந்தமாய் காங்கிரஸ் நிறைவேற்றும் தீர்மானங்களை யெல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். சுதேசியத்தையும், கதரபிவிருத்தியையும் மனப்பூர்வமாய் ஆதரிக்கவேண்டும். சுதேசிக் கண்காட்சிகளை கட்சியின் சார்பில் பல ஊர்களிலும் நடத்தி உங்கள் அபிமானத்தை வெளிப்படுத்த வேண்டும்.

மற்ற காலங்களிலெல்லாம் கும்பகர்ண நித்திரை செய்துவிட்டுத் தேர்தலில் மட்டும் ஆரவாரஞ் செய்கின்ற வழக்கத்தை விட்டொழித்து, சதா பிரசாரம் நடத்தியபடி இருக்கவேண்டும். கட்சியில் பணக்காரர்கள் மட்டும் ஸ்தானம் வகிக்கின்ற தீய வழக்கத்தினை மாற்றி, சகல மக்களும் உழைப்பினால்—முயற்சியினால் அங்கம் வகிக்கத் தக்கவாறு திட்டங்களை ஏற்படுத்தி, உங்கள் கட்சி பணக்காரர் கட்சி—ஜமீன்தாரர் கட்சி—ராஜாக்கள் கட்சி என்று ஏற்பட்டுள்ள பெயரை மாற்ற வேண்டும்.

இந்த இரண்டு வகைகளில் ஒன்றைப் பின்பற்ற வில்லையாயின் நீங்கள் தேசத்தை மட்டும் கெடுத்தவர்க ளாகமாட்டீர்கள். உங்களைப் பின்பற்றும் ஏழை மக்களையும் துன்பத்திற் குள்ளாக்கிய பெரும்பழி உங்களைச் சேரும். இப்பொழுதே தென்னாட்டில் உங்களால் ஏற்பட்ட உணர்ச்சியினால், பிராம்மண அதிகாரிகளிடம் பிராம்மண ரல்லாதார் படும்பாடு கொஞ்சமன்று. உங்கள் கொள்கை முற்றும் தூயனவா யிருந்து, அவைகளைத் தீவிரமாய்ப் பரவச் செய்வதற்குப் பல பிரசாரகர்களும், பத்திரிகைகளும் உங்கள் கையில் இருக்குமானால் நீங்கள் தனித்து நின்று தேசீயப் போராட்டத்தில் பங்கு கொள்ளலாம். இல்லையேல் காங்கிரஸில் சேர்ந்து உங்கள் கடமையைச் செய்ய முன் வாருங்கள். இந்த இரண்டில் நீங்கள் விரும்புவது எது?"

## செங்குந்தர் சமூகமும், திருநெல்வேலி நகரமும்

செங்குந்தர் சமூகமானது, தென்னிந்தியாவில் மட்டும் 6½ இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கட் தொகுதியினை யுடைய ஒரு பெரும் சமூகமாகும். தமிழ் நாட்டிலுள்ள முக்கிய நகரங்களிலெல்லாம் இச்சமூகத்தவர்கள் பெருந் தொகையினராக வசித்து வருகிறார்கள். அவ்வாறு அவர்கள் அதிக தொகையினராய் வாழ்ந்து வரும் நகரங்களுள் திருநெல்வேலியும் ஒன்றாகும். அங்கு, செங்குந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சுமார் ஆறாயிரம் பேர்கள் வரையில் இருப்பதாக ஜனக் கணிதத்திலிருந்து நாம் அறிகின்றோம். இவர்களில் நல்ல கீர்த்தியும், அந்தஸ்தும் வாய்ந்தவர்களும், செல்வமும், செல்வாக்கும் நிரம்பப் பெற்றவர்களும் அநேகர் இருக்கிறார்கள். பிரபல வர்த்தகர்களாய்ப் பெருமதிப் பெய்தியவர்களும் பலருண்டு. இத்தகைய ஒரு பெருஞ் சமூகத்திலிருந்து, அவ்வூர் பென்ச் கோர்ட்டிற்கு அங்கத்தினராய், இது வரையில் எவரும் நியமிக்கப் பெறாதிருந்தது ஒரு பெருங் குறையேயாகும்.

கௌரவ மிக்க ஒரு பெருஞ் சமூகத்தவர்களின் மனதில் நெடு நாட்களாக மனக் கசப்பை விளைத்து வந்த இக்குறையினை, தற்போது **திருநெல்வேலி ஜில்லா கலெக்டராக இருக்கும் ஸ்ரீ, இராம ராவ் அவர்களும், டிவிஷனல் ஆபீஸராக இருக்கும் ஸ்ரீ, ஜேம்ஸ் அவர்களும்** இன்று களைந்துவிட்டமை கேட்டு அளவு கடந்த மகிழ்ச்சி யடைகிறோம். சமீபத்தில் திருநெல்வேலி நகர பென்ச் கோர்ட்டில் ஏற்பட்ட காலி ஸ்தானத்திற்கு **திரு. வ. வீ. ச. வீ. சண்முக முதலியா ரவர்களை** அங்கத்தினராக நியமித்திருப்பது பெரிதும் போற்றத் தக்கதாகும்.



திரு. முதலியா ரவர்கள் தொன்றுதொட்டு பெருமை மிக்க ஓர் பெருங் குடும்பத்தைச் சேர்ந்தவர். பிரபல வர்த்தகர். கடந்த ஒன்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து பஞ்சாயத்துக் கோர்ட் அங்கத்தினராயிருந்து பொது நலத் தொண்டு புரிந்து வந்தவர். அவரது தந்தையாரும் பல ஆண்டுகளாகப் பஞ்சாயத்துக் கோர்ட்டு அங்கத்தினராகப் பொது மக்களால் தெரிவு செய்யப்பெற்று கௌரவிக்கப்படுபவர். தொண்ணூற்றைந்து ஆண்டுகளின் முன்பு இவர்களது முன்னோர்களில் சண்முக தரகன் என்பார் சவுக்கைதாரராக அரசாங்கத்தாரால் நியமிக்கப்பெற்று நன்கு மதிக்கப்பட்டுள்ளார். திருநெல்வேலியில் மிகுந்த கண்ணியமும் பெருமதிப்பும் வாய்ந்த இக்குடும்பத்தி லிருந்து ஒருவரை முதன்முதலாக கௌரவ மாஜிஸ்ட்ரேட்டாக நியமித்து செங்குந்தர்களின் நீண்டநாளைய குறையினைப் போக்கிய பெருமை அந்த ஜில்லாவின் தற்போதைய கலெக்டர் அவர்களுக்கும், டிவிஷனல் ஆபீசர் அவர்களுக்குமே உரியதாகும். இவர்களுக்கு இந்தியா முழுதுமுள்ள செங்குந்தர்களின் சார்பாகவும், அவர்களின் தலைச் சங்கமா யிருக்கிற தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பாகவும் எமது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, திருநெல்வேலி நகரத்தில் பெருமக்களாய் வாழ்கின்ற செங்குந்த சமூகத்தவருள் ஒருவர், எக்காலத்தும் இடைவிடாது திரு. சண்முக முதலியாரவர்களைத் தொடர்ந்து அங்கம் வகிக்கத் தகுந்தபடி ஒரு ஸ்தானத்தை ஒதுக்கிவைத்து உபகரிக்குமாறு வேண்டுகிறோம். இதுபற்றி, 6·10-34-ந் தேதியில், செங்குந்த குலகுரு சுவாமிகள் தலைமையில் அவ்வூரில் கூடிய ஓர் பெருங்கூட்டத்தில், ஒரு தீர்மானமும் நிறைவேற்றப் பெற்றிருப்பதை மற்றோரிடத்தில் குறிப்பிட்டிருக்கிறோம்.

திரு. முதலியாரவர்கள் நியமனம் செய்யப்பெறும் விஷயத்தில் மிகுதியும் ஆர்வங்காட்டி, பலவகையிலும் முயன்று வெற்றிபெறச் செய்தது பென்ச் கோர்ட் தலைவராக இப்பொழுதிருக்கின்ற **ஸ்ரீ எஸ். ஆர். கிருஷ்ணய்யர் அவர்களே** யாவார்கள். இவர்கள் செய்த இவ்வுபகாரத்தினை செங்குந்த மகாஜனங்கள் மறவாது நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளனர்.

திரு. முதலியாரவர்கள் தமக்குக் கிடைத்துள்ள இப்பதவியில் பொதுமக்களின் மதிப்புக்குப் பாத்திரராய் நேர்மையுடன் நடந்து கொள்ளுவார்களென்று நம்புகின்றோம். எமது மனமார்ந்த வாழ்த்து அவர்களுக்கு உரியதாகுக.

# மதிப்புரை

## திருக்குறள் நாட் குறிப்பு (டெயிரி)

தமிழ் வேத மெனப்படுவது திருக்குறள். அது, படிப்பவ ருள்ளத்தைப் பிணைத்துத் தீ நெறியிற் செல்லவொட்டாது தடுக்கும் அரிய சக்தி வாய்ந்ததோர் தெய்வீக நூல். அதனை மக்களாவார் ஒவ்வொருவருந் தவறாது படிக்கவேண்டு மென்பது, அதனைப் பல மொழிகளில் பல நாட்டவரும் மொழி பெயர்த்துப் படித்துப் பயனடைந்து வருவதொன்றினாலேயே நன்கு விளங்கும். இப்பெரு நூலின் கண்ணுள்ள 1330 குறள்களையும் ஒருங்கே படித்துணர்தல் பலருக்கு இயலாதென்பதை அறிந்து, நாள் ஒன்றுக்கு ஒரு குறளாக ஓர் ஆண்டிற்கு 365 குறள்கள் வீதம், 4 ஆண்டுகளில் நூல் முழுதும் கருத்துரையுடன் சுலபமாகப் படித்து முடிக்குமாறு 1933-ம் ஆண்டு நாட்குறிப் (Diary) பின்கண், முதல் 365 குறள் பாக்களைத் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்டனர்.

இப்போது 1935-ம் ஆண்டு நாட்குறிப்பின் கண் அடுத்த 365 குறள்களை வெளியிட்டிருக்கின்றனர். இதன் முதற்பகுதியில் திதி நட்சத்திர யோகங்கள் முதலிய யாவும் அடங்கிய பஞ்சாங்கமும், விடுமுறை நாட்கள், பெரியார் குருபூசை நாட்கள், வட்டி அட்டவணை முதலிய பல விபரங்களும் குறிக்கப்பெற் றிருக்கின்றன. இது ஏனைய டெயிரிகளைப் போல் ஒரே ஆண்டிற்குப் பயன்படுவதா யிராமல் எக்காலத்திலும் திருக்குறள் நூலைப்போல் பயன்படக் கூடியதாகும்.

டெயிரியாகவும், திருக்குறளாகவும் விளங்குகின்ற இத்திருக்குறள் நாட்குறிப்பைத் தமிழராவார் ஒவ்வொருவரும் வாங்கிப் பயனடைவார்களென எண்ணுகிறோம்.

இதன் விலை அணு ஐந்து.

நமது செங்குந்த மித்திரன் ஆபீசிலும், சென்னை, பவழக்காரத் தெருவிலுள்ள தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திலும் கிடைக்கும்.

---

## ஏஜண்டுகள் தேவை

செங்குந்த மித்திரனை விற்பனை செய்வதற்கு முக்கியமான நகரங்களி லெல்லாம் ஏஜண்டுகள் நியமிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஏஜண்டு நிபந்தனைகளுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும். டிஸம்பர் மாதம் 25-ந் தேதிக்குள் ஏஜண்டுகளாய் இருக்க விரும்புகின்றவர்கள் மனுச் செய்துகொள்ள வேண்டும்.

# தேர்தல் புராணம்

## ஓட்டர் மகாத்மியம்

(கச்சியடிகள் இயற்றியது)

### நாட்டுப் படலம்

உலக மாக்குநல் லயன்றிரு வுகந்தருள் மாலும்
அலகி லாவுயிர் சாய்த்திடு மரனுமா கேசன்
இலையி ரெண்டெனு தின்கழ லீந்தொளிர் சிவனுங்
குலைந டுக்குறச் செய்திறை கொண்டுயர் நாடு.

இம் மண்ணுலகத்தையும், அதிலுள்ள அண்ட சராசரங்களையுப்
ஓயாது படைக்குந் தொழிலினை யுடைய பிரம்மனும், செல்வந் தந்த
உயிர்களைக் காத்தருளுகின்ற மகாவிஷ்ணுவும், அழிக்குந் தொழிலே
னுகிய உருத்திரனும், உயிர்களின் இன்பதுன்பத்தைப் புசிப்பிக்கின்
மஹேஸ்வரனும், சிவனும் சீவனும் இரண்டென்னுத இன்பநிலை வழா
கும் தேவாதி தேவனுகிய சதாசிவனும் தன்னைக் கண்டவளவில்
குலை நடுங்கி 'தெரியாது உமது எல்லையை மிதித்துவிட்டோம்
இதோ போய்விடுகிறோம்' என வாய்விட்டுக் கதறியோடுமாறு செய்
தால் தலைமை நாடெனப் பலராலும் போற்றப்படும் நாடு ஒன்றுண்டு
அந்நாட்டில் தேர்தல் அபேட்சகர்கள் சதா சல சல வென இறைந்து
கொண்டிருப்பார்க ளாதலால் அதற்குச் சல சல நாடு என்று பெயர்

அந் நாட்டில் சத்தியம் தலைகாட்டக் கூடாதென்பது அர
ஆணை. பொய்ம்மையே பேசிப் புறம்புறந் திரியும் புழுத்தலை
புலையர்களுக்கே அங்கு மதிப்புங் கௌரவமு முண்டு. அவர்கள் ஆ
ரம் அரங்குகள் ஏறலாம். உண்மையாளர் உள்ளே பதுங்கிக்கிடக்
வேண்டியதுதான்.

### நகரப் படலம்


சீரும் சிறப்பு மிக்க இந்நாட்டுக்கு முனிசிபல் நகரம் என்பதே
தலைநகர். இங்கு பகற்கொள்ளையும், பகிரங்கக் கொள்ளையும் தாரா
மாய் நடத்தலாம். அவ்வாறு நடத்துவோர்களுக்கே பல பட்டங்க
வழங்கப்படுவது வழக்கம். பொய்யர்களுக்கும், வாய் வீச்சுக்கார
களுக்குமே இங்கு எல்லாச் சிறப்புகளு முண்டு. மற்றவர்கள் ஏமாந்
இளிச்சவாயர்கள்தான். ஆனாலும், மேற்குறித்த சிறப்புக ளுடை
வர்களெல்லாம் ஒவ்வோர் சமயத்தில் இந்த இளிச்சவாயர்களிடத்தி
தலை வணங்குமாறு செய்வதும், பெரிய செல்வந்தர்களை ஒரே நாளி
அல்லது ஒரே மணி நேரத்தில் பரம தரித்திரர்களாக்கி விடுவது
இந்நகரத்திற்குரிய முக்கிய சிறப்புக்களாகும்.

## பஞ்சமூர்த்திகள் படலம்

'பஞ்சமூர்த்திகள்' என்ற சொல்லைக் கேட்டதும் பிரம்மா முதலிய பஞ்சமூர்த்திகள் என நினைத்துக்கொள்ளாதீர்கள். அவர்கள் தான் இந்நகரத்தைக் கண்டதும் குலைநடுக்கங் கொள்பவர்களாயிற்றே. சலசல நாட்டுக்கே கடவுள் வேறு. நீதியும் நியமமும் வேறு. சாதாரண தருமத்திற்கு அவை முற்றும் மாறுபட்டவை.

குடி, கூத்தி, சூதாட்டங்களே இந்நாட்டுத் திரிமூர்த்திகள். ஒரு ஆளுக்கு மேல் மற்றொரு ஆளை சிருஷ்டிக்கும் சக்தி வாய்ந்தது குடி. சிலநாள் வரை உயிர்களுக்கு போகபோக்கியந் தந்து இரட்சிப்பது கூத்தி. போலீஸ் எமனார் கையில் உயிர்களைப் பிடித்துத் தந்து சிறையுலகம் சேர்ப்பிப்பது சூது. இம்முத்தொழில்களும் செவ்வையாகவே நடந்து வந்ததாயினும், தங்களாட்சியில் அகப்படாத சிலரையும் இத் திரிமூர்த்திகள் வசப்படுத்த எண்ணி, தங்கள் தேவாதி தேவனாகிய தேர்தல் மூர்த்தியிடஞ் சென்று முறையிட்டார்கள்.

தேர்தல் மூர்த்தியார் இதைக் கேட்டதும் உருத்தெழுந்தார். 'அப்படிப்பட்ட மிண்டர்களும் இந்த இருபதாம் நூற்றாண்டில் இருக்கிறார்களா? இதோ வந்து அவர்கள் கொட்டத்தை நாமே அடக்கி விடுகிறோம். நீங்கள் சீக்கிரமாகச் செல்லுங்கள்' என ஆக்ஞாபித்தார். குதிரைப் பந்தய மூர்த்தியையுங் கூட்டிக்கொண்டு தேர்தல் மூர்த்தியார் முனிசிபல் நகரம் எழுந்தருளினார்.






இப்பஞ்ச மூர்த்திகளின் ஆட்சி முனிசிபல் நகரத்தில் வெகு ஜரூராய் நடந்துவருகின்றது. இவர்களின் திருவருட் சோதி வீசப் பெற்றோரனைவரும்,

"பற்றெலாந் துறந்தேன் தேர்தலாம் மூர்த்தி
பரவுறு தந்தையுந் தாயு
மற்றுள சுற்றம் யாவையுந் துறந்தேன்
மன்னவ மகிழ்ந்தெனக் கருளாய்'

எனப்பாடிப் பாடிப் பரவச மடைவர். செல்வத்திலேயே பிறந்து செல்வத்திலேயே வளர்ந்த சீமான்களெல்லாம் தமது செல்வ மனைத்தையும் ஏழை வாக்காளர்களுக்கு—தரித்திர ஓட்டர்களுக்கு வீசி இறைத்து விட்டுத் தஞ்சமெனத் தேர்தல் மூர்த்தியின் திருவடி சேர்வர். செல்வ வான்கள் மட்டுமா? சாதாரண குடும்பிகள், சொற்ப முதலுள்ளவர்கள், எளிய வர்த்தகர்களாகிய பலரும் செல்வந்தர்களைப் பின்பற்றி கடன் வாங்கியேனும் ஓட்டர்களுக்கு உபகாரஞ்செய்யத் துணிவார்கள். உயிர்த்தோழர் அல்லது குடும்ப நட்பினரா யிருந்தாலும், எங்கே அவர்கள் தேர்தல் மூர்த்தியின் திருவருளுக்கு இலக்காகி விடுகிறார்களோவெனப் பயந்து தேர்தல் தினத்தன்று அவர்களுக்கு ஓலையனுப்பி (வாரண்டு பிறப்பித்து) காராக்கிரகம் கொண்டு சேர்க்கும் பரம புண்ணியாத்மாக்களும் உண்டு. தேர்தல் மூர்த்தி இவர்களனைவரையும் எப்படித் தன் வழிப் படுத்துகிறார் தெரியுமா?

அவரிடத்தில் ஓட்டர் சுவாமிகளாகிற கணநாதர்கள் பல்லாயிரக் கணக்காக இருக்கிறார்கள். அவர்களில் சிலர் சென்று, "ஏனையா பயப்படுகிறீர்கள். நாங்கள் இருக்கிறோம். ஒரு கஷ்டமும் உங்களுக்கு வேண்டியதில்லை. எல்லாம் நாங்களே பார்த்துக் கொள்ளுகிறோம். நீங்கள் வீட்டிலேயே இருங்கள். பணப்பெட்டிமீது கையைக்கூட வைக்கவேண்டாம். நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் அரைக்கடுதாசி—ஒரே ஒரு மனு 'தேர்தல் மூர்த்தியாரே! உங்கள் திருவருளுக்குப் பாத்திரமாகக் காத்துக்கொண் டிருக்கிறோம்' என்று மட்டும் எழுதிக் கொடுங்கள். மற்றது எங்கள் பாரம்" எனச் சொல்லுவார்கள். பின்பு, நீங்களோ நானோ ஐயாவைத் தடுக்கவே முடியாது. 'கால் வைத்துவிட்டேன். இனி என்னவாயினும் சரி. கால்மட்டு மன்று; தொடை, இடுப்பு, மார்பு, கழுத்து அதற்குமேல் தலைவரை போனாலும் சரி. தேர்தல் மூர்த்தியின் திருவருள் நோக்கத்தினின்றும் விலகேன், விலகேன், முக்காலும் விலகேன்" என சூளுறவு செய்வர். தேர்தல் மூர்த்தியின் திருவிளையாடலை எவரே சொல்லவல்லார்!

அவரது தீயசெயல் பரவாதிருக்க வேண்டுமானால்—அவரது அதிகாரம் அழிய வேண்டுமானால் ஓட்டர் சுவாமிகளை அவரிடமிருந்து பிரித்துவிடவேண்டும். சுய புத்தியும், நல்லறிவும், உலகானுபவமும், ஒற்றுமை யுணர்ச்சியும் ஓட்டர் சுவாமிகளுக்கு ஏற்படுமாறு

செய்யவேண்டும். தேர்தல் மூர்த்தியின் திருவிளையாடல்களுக்கு இடந்தருவதால் தங்களுக்கும், தமது சமூகத்திற்கும், நாட்டுக்கும் நேரக்கூடிய கஷ்டங்களை அவர்கள் அறியுமாறு செய்யவேண்டும். அவ்வாறு செய்துவிட்டால் தேர்தல் மூர்த்தியாரின் வீராப்பு அடங்கும். தனது தீத்தொழிலை மறந்து அவரே உடனிருந்து மக்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்வார். அபேட்சகர்களது பொய்யும் புனைசுருட்டும் மாய்ந்து போகும். பகற்கொள்ளையும் பகிரங்கக் கொள்ளையும் ஒழியும். வம்பர்களின் ஆட்சி வீழும். முன்னேறிச் சென்றவர்கள் தம்மைப் பின்பற்றி வருவோர்களை தலையெடுக்க வொட்டாது பள்ளத்திலேயே ஆழ்த்திவரும் கொடுமை அகலும். பண வருவாயையோ செல்வாக்கையோ கருதாது தம்மாலியன்ற வரையில் உண்மையாய்த் தேசத்தொண்டு ஆற்றவேண்டுமென்ற ஆர்வத்தோடு தேர்தலில் நிற்போர் வெற்றிமாலை சூடுவர். வெகு காலமாய்த் தேர்தலைக் கண்ணெடுத்தும் பாராது ஒதுங்கி நிற்கும் செங்குந்த சமூகத்தவர்களைப் போன்றவர்கள் தைரியமாய்த் தேர்தலில் போட்டியிட முடியும். அவ்வாறு ஏற்படும் நாள் எந்நாளோ?

## குலத்துரோகிகள் படலம்

சென்ற ஒரு மாதமாக முனிசிபல் நகரத்தில் தேர்தல் மூர்த்தியின் திருவிழா மிக ஆடம்பரமாக நடந்து வருகின்றது. அதில் நடந்த—நடக்கின்ற அற்புதங்களை நினைக்கும்போது அவற்றிற்குத் தனித்தனி புராணங்கள் செய்யவேண்டுமென்றே தோன்றுகிறது. இரண்டொன்றை மட்டும் வாசகர்கள் மாதிரி பார்ப்பதற்காகக் கீழே தருகிறோம்.

மிக்க தொன்மையும் பெருமையுமுடைய ஒரு பெரிய நகரம். ஒரே சமூகத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் அவ்வூரில் வசித்துவருகிறார்கள். அவர்களில் ஒருவர் தேர்தலுக்கு நின்றார். அவர் வருவதா என்பது அந்த சமூகத் தலைவரது எண்ணம். அந்த எண்ணம் அவருக்கு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அது அவரது பிறவிக் குணம். தன் இனத்தவர் (தன்னைத் தவிர) வேறு எவரும் எந்தப் பதவியும் வகிக்கக் கூடாதென்பதே அவருடைய கருத்து. பேச்சளவிலோ 'இந்தத் தேர்தலில் யாருக்கும் நான் உதவி புரிய மாட்டேன். யார் வந்தாலும் எனக்கு ஒன்றுதான்' எனக் கூறுவார். உள்ளுக்குள் ளிருந்தபடியே தன்னாலும் தன் பரிஜனத்தாலும் இன அபேட்சகருக்கு எவ்வளவு இடைஞ்சல் செய்ய முடியுமோ அவ்வளவும் செய்து, பிற இனத்து அபேட்சகருக்கு உதவி செய்வார். அது அவரோடு பிறந்த குணமாதலின் அவரைப்பற்றி நாம் கவலைப்படவில்லை.

இந்தத் தேர்தல் அபேட்சகர் எந்த வார்டில் நின்றாரோ அந்த வார்டு முழுவதும் அவர் இனத்தைச் சேர்ந்தவர்களே. அங்குள்ள பெரியதனக்காரர்கள்—அந்த அபேட்சகரின் ஜாதி இரத்தம் உடம்பில் ஓடிக்கொண்டிருப்பதாகச் சொல்லிக் கொள்ளும் பெரியதனக்காரர்கள் ஒன்று கூடினார்கள். எதற்காகத் தெரியுமா? தன் இனத்து



**அபேட்சகரை ஆதரிப்பதற்காக வல்ல; வேற்றினத்துப் போட்டி அபேட்சகரை வெற்றியுறச் செய்வதற்காகவே.**

இதைக் காட்டிலும் அந்த சமூகத்திற்கு வேறு இழிவு என்ன வேண்டும்? இவர்களைக் காட்டிலும் சமூக கோடரிக்காம்புகள் வேறு யார் இருக்கக்கூடும்? பிறர் தங்களை என்ன நினைப்பார்களென்ற எண்ணமின்றி, கொஞ்சமாவது தன் மானமின்றி நடந்துகொண்ட அற்பத்தனத்திற்காக இவர்களுக்குத் தக்கபாடம் ஆண்டவனால் கற்பிக்கப்பட்டுவிட்டது.

இவர்கள் பிற இனத்து அபேட்சகரிடம் சென்று எண்ணூறு ரூபாய் கொடுத்தால் எல்லா ஓட்டுகளையும் அவருக்குத் திருப்பிவிடுவதாகக் கூறினராம். அந்த அபேட்சகர் உடனே இவர்களை எடை போட்டுவிட்டார். 'குலத்துரோகிகளாகிய இவர்கள் நம்மை என் ஏமாற்ற மாட்டார்கள்' என்று எண்ணினார். எனவே, தான் தேர்தலில் தோல்வியுற்றால் தன்னிடம் பெற்ற தொகையினைத் திருப்பித் தந்துவிடுவதாக உறுதி செய்து தரவேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார். சென்ற மேதாவிகளும், தங்குதடையின்றி சம்மதித்து உறுதிசெய்து கொடுத்துத் தொகையைப் பெற்றுக்கொண்டார்கள்.

'தெய்வம் நின்று கொல்லும்' என்பார்கள். ஆனால், இந்த அநியாயத்தைத் தெய்வத்தாலும் பொறுக்க முடியவில்லை போலும். இவர்கள் பிரயத்தனமெல்லாம் வீணாக—தலைவரின் ரகசிய முயற்சிகளெல்லாம் மாய்ந்தொழிய பிற இனத்தவர் தோற்கும்படி ஆண்டவன் அருள் புரிந்தான். அந்தோ! இப்போது குலத்துரோகிகளெல்லாம் திருதிருவென்று விழிக்கிறார்களாம். தாங்கள் பெற்ற ரூபாயைத் திருப்பித் தருவது எப்படி? வாங்கிவந்த தொகை பெட்டியில் இல்லையே. ஒரு ரூபாயும் அரை ரூபாயுமாக அப்பொழுதே பங்குபோட்டுத் தீர்ந்துவிட்டதே. பாவம், இந்த சம்பவத்திலிருந்தாவது இவர்கள் நல்ல பாடம் கற்றுக்கொண்டு இனி குலத்தைக் காட்டிக்கொடாதிருப்பார்களாக.

இது ஒரு தேர்தல் விநோதம். இந்த ஒன்றோடு நிறுத்திவிட என் மனம் இசையவில்லை. இன்னொரு விநோத அனுபவத்தையும் கீழே தருகிறேன்.

ஒரு ஊரில் சமீபத்தில் யூனியன் போர்டு தேர்தல் நடைபெற்றது. அதில் ஒருவர் அபேட்சகராக நின்றார். அவரினத்தவரில் அங்கு இரண்டு கட்சிகள் உண்டு. அபேட்சகர் சிறிய கட்சியைச் சேர்ந்தவர். எனவே பெரிய கட்சியின் ஆதரவை அவர் நியாயமாய் எதிர்பார்ப்பதற்கில்லை. ஆனால், அந்த ஊரில் அப்படி நடக்கவில்லை. அது ஒரு விநோதமான—ஏறுமாறான ஊராகவே இருக்கவேண்டும். அபேட்சகர் சிறிய கட்சியைச் சேர்ந்தவராக இருந்தும் அந்தக் கட்சியினர் அவரைத் துரோகம் செய்துவிட்டார்கள். அவர்கள் வேறினத்தவரை நிற்கவைத்து வேலை செய்தார்கள். பெரிய கட்சிக்காரர்களோ குலாபிமானம் நிறைந்தவர்களாய், சிறிதேனும்

கட்சி வித்தியாசம் பாராட்டாமல் சிறிய கட்சியைச் சேர்ந்தவருக்கே தங்கள் ஓட்டுகளைக்கொடுத்து அவரை வெற்றிமாலை சூடுமாறு செய்தனர். ஊரில் கட்சிப் பிளவு இருக்கும்போது தம் கட்சியைச் சேர்ந்த ஒருவர்பெறும் வெற்றி, தம் கட்சி வெற்றி என்பதை யுணராமல் அவருக்குத் தாங்களே போட்டியை உண்டாக்கிய மேதாவிகளின் அறிவை என்னென்று சொல்வது! இவர்களின் அறியாமை ஒழிந்து என்றுதான் இவர்கள் சீர்படுவார்களோ?

குறிப்பு:—மேலே காட்டியுள்ள இரு சம்பவங்களிலும் குலத்துரோகம் செய்தவர்கள் எந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களென அறிந்துகொள்ள நீங்கள் ஆசைப்படுவீர்கள். பொருமைக்குணமும், தன் மானத்தைப் பணத்திற்காக விற்கும் தாழ்ந்த குணமும், தன்னைச் சேர்ந்தவர்களையும் தமதினத்தவர்களையும் காட்டிக் கொடுக்கும் தீய தன்மையும் நிறைந்த பலர் பிறந்து வாழும் துர்ப்பாக்கியம் பெற்ற நமது செங்குந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களே என்பதை இங்கு மிக்க வருத்தத்துடன் குறிப்பிடவேண்டி யிருக்கிறது. (தொடரும்)

---

# ஒரு நல்ல சந்தர்ப்பம்

இலங்கையிலும் இந்தியாவிலும் வசிக்கும் செங்குந்தர்களிடையே நெருங்கிய சம்பந்தம் கற்பிக்க வேண்டுமென்பது எமது நெடுநாளைய அவா. அதற்கு இப்போது தக்க சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. இலங்கை, மட்டக்களப்பில் வசித்து வருகிற திரு. சி. குமாரசாமி முதலியா ரவர்கள் இந்தியாவிலிருந்து ஒரு மகனை ஸ்வீகாரம் ஏற்றுக்கொள்ள அவாவுகின்றனர். அவர்களுக் கிருந்த ஒரே மகன் நான்கு மாதங்களின்முன் இவ்வுலகினின்றும் பிரிந்து சென்றான். வேறு மக்கட்பேறில்லை. முதலியா ரவர்கள் செல்வமும் சீர்த்தியு மிக்கவர். கல்வி யறிவு நிரம்பியவர். நற்குணங்க ளனைத்தும் ஒருங்கே திரண்டுவந்த உருவனையார். நாம் இலங்கை சென்றபோது அவரது இல்லத்தில் பல பகல் தங்கி அவரதும், அவரது அருமை மனைவியாரதும் குணங்களைக் கண்டு மகிழ்ந்தோம். அவர்களுக்கு ஒரு மகனை ஸ்வீகாரமாக உதவ நேர்பவர்கள் பெரும் பாக்கியசாலிகளே யாவர்.

நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் நிரம்பிய அழகிய ஆண் மகன் ஒருவனை ஸ்வீகாரமாக அனுப்பி, இருநாடுகளுக்குமிடையே நெருங்கிய உறவு கற்பிக்குமாறு இந்தியாவிலுள்ள செங்குந்தர்களை வற்புறுத்தி வேண்டுகிறோம். மிக்க ஏழைக் குடும்பத்திலிருந்து அளிக்கப்படினும் ஏற்றுக்கொள்ளப்படும்.

மற்ற விவரங்களுக்கு செங்குந்த மித்திரன் ஆசிரியருக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும். (ஆசிரியர்)

# "கனகாம்பாள்—கண்ணப்பன்"
## அல்லது
# காதல் முறிவின் விளைவு

சேலம் A. N. ஸ்வாமி

*"காதல், காதல், காதல்,*
*காதற் போயிற் காதற் போயிற்*
*சாதல் சாதல் சாதல்."*

விஜயபுரமென்பது தென்னாட்டில் சிறப்புற்ற ஒரு சிறு நகரம். அதில் வர்த்தகர் வரதப்ப முதலியார் தம் மனைவியோடும், தம் ஏகபுத்திரி கனகாம்பாளோடும் குடும்பம் நடத்திவந்தார். கனகாம்பாள் தன் இயற்பெயரையொப்ப பொன்போன்ற மேனியும், சிறந்த வசீகரமும், உயர்ந்த அறிவும் படைத்த ஒரு பெண்மணி. சிறு வயதிலிருந்து பள்ளிக்குச் சென்று நன்றாகப் பயின்று கல்வியிலும் தேர்ச்சி பெற்றிருந்தாள். பள்ளிப் பருவத்தி லிருந்தே அவளுக்கும், கண்ணப்பனுக்கும் மிகுந்த நேசமுண்டு. கண்ணப்பன் கனகத்தின் ஒரு சாலை மாணவன்; விஜயபுரத்திற்கு அடுத்த கிராமத்துக் கந்தசாமி முதலியாரின் புத்திரன். அவன் சிறந்த அழகும், உயர்ந்த அறிவும் அமையப் பெற்றவன்; படிப்பில் மிகப் பற்றுகொண்டவன். இவ்விரு இள நேயர்களும் மிக நெருங்கிப் பழகி வந்தார்கள். கண்ணப்பன் அடிக்கடிக் கனகத்தைத் தேடி அவள் வீட்டிற்கு வருவான். அவன் வந்தபொழுதெல்லாம் கனகம் படிப்பைப்பற்றியும், இன்னும் பல்வேறு விஷயங்களைப்பற்றியும் அவனுடன் நெடு நேரம் உரையாடுவள். கண்ணப்பன் அடிக்கடி இனிய கீதங்களை யமைத்துக்கொண்டு வருவான்; கனகம் அவற்றைத் தன் சுவை மிகுந்த குரலில் அழகாகப் பாடிக் காட்டுவாள். கனகம் நளவெண்பா, இராமாயணம், பாரதம் முதலியவற்றிலிருந்து கவிகளைப் படித்துக் காட்டி அவற்றிற்குப் பொருள் சொல்லும்படி அவனைக் கேட்பாள்; அவனும் அவற்றிற்கு வெகு அழகாகப் பொருள் சொல்லுவான். இவ்வாறு ஆண்டுகள் சில கழிந்தன.

ஒரு நாள் கண்ணப்பன் கனகத்துடன் நெடு நேரம் உரையாடிக் கொண்டிருந்த பின்னர் சற்று நேரம் மௌனமாக விருந்துவிட்டு, மெதுவாக 'கனகம்' என்றான்.

கனகம்: "என்ன, இப்பொழுதுதான் என் பெயரைத் தெரிந்து கொண்டீரோ?" என்று வேடிக்கையாகக் கேட்டாள்.

கண்ண: "இல்லை, ஒரு சந்தேகம்" என்று சற்று இழுப்பாகச் சொன்னான்.

கனக: "என்ன சந்தேகம்?"

கண்ண: "நீ எப்போதும் என்னை யிப்படியே நேசிப்பாயோ?"

கனக: "அதிலென்ன ஆக்ஷேபனை. என் உயிருள்ளளவும் உம்மை நேசிப்பேன். உமக்காக என் உயிரையும் கொடுப்பேன்."

கண்ண: "ஆனால் இப்பொழுதைய முறையில்தான்போலும்."

கனக: "மற்றெம்முறையில் நேசிக்க வேண்டும்?"

கண்ண: "இம்முறையில் நாம் நேசித்தால் நெடுங் காலம் கூடியிருக்க முடியுமோ?"

கனக: "என் முடியாது?"

கண்ண: "இதை நீ யறியாய்."

கனக: "பின்னெம்முறையில் நேசிக்கவேண்டு மென்கிறீர்."

கண்ண: "கணவன்—மனைவி" என்ற முறையில்தான்.

இதைக் கேட்டதும் கனகம் வெட்கத்தால் தலை கவிழ்த்துக் கொண்டாள். வெகு நேரம் கண்ணப்பன் விடை யாதும் பெறவில்லை. பின் மெதுவாக அவள் தன் தலையை நிமிர்த்தினாள்; கண்ணப்பன் அதன்பின் அங்கிருக்க விரும்பாமல் விடை பெற்றுக்கொண்டு தன்னிடம் போய்விட்டான்.

இது விஷயம் நடந்து மூன்று மாதங்கள் கழிந்தன. தன் மேற்படிப்புக்காக கண்ணப்பன் மதராஸ் போக நேர்ந்தது. அவளைப் பிரிவதில் ஒரு புறம் சஞ்சலமும், கல்வியைப் பெறுவதில் மற்றொரு புறம் விருப்பமும் கொண்டு அவன் தவித்தான். கடைசியாகப் படிப்பின் ஆர்வத்தால் மதராஸ் போய்ச் சேர்ந்தான். அவன் அங்கு இருக்கும் பொழுது வாரத்திற்கொரு முறை கனகத்தினிடமிருந்து கடிதம் வரப்பெறுவன். தன் படிப்பை முடித்துக்கொண்டு தனதூர் திரும்பியதும் கனகத்தை மணக்க அவன் எண்ணியிருந்தான்.

ஆனால், அந்த எண்ணத்தில் அவனது துரதிருஷ்டங்கள் மண்ணைப் போட்டன. திடீரென கனகத்தினிட மிருந்துவந்த கடிதமொன்று அவனை நிலைகலங்கச் செய்துவிட்டது. கடிதத்தில், கருப்பண்ண முதலியார் என்பவர் பெருந்தொகை கொடுப்பதாகச் சொல்லித் தன்னை அவருக்கு மணம் செய்விக்கும்படி தன் தந்தையை வற்புறுத்துவ தாகவும், பொருள் நசைமிகுந்த தன் தந்தையும் அதற்கொருவேளை உடன்படலா மென்றும் கனகம் குறிப்பிட்டிருந்தாள். கருப்பண்ண முதலியார் அறுபது வயதேசென்ற பால்யர்; இதற்கு முன் இருமுறை மணந்து, தனது கொடுமையால் மனைவிகளை இழந்தவர்; ஆனால் பெரிய தனவந்தர். இந்த விஷயம் கண்ணப்பனுக்குக் கனவாகத் தென்பட்டது. கனகம் கருப்பண்ண முதலியாரை மணப்பது இயற்கைக்கு முற்றிலும் மாறுபட்டதாக அவனுக்குத் தோன்றியது.

கடிதம் கிடைத்ததினமே அவன் சென்னையைவிட்டு விஜயபுரத்திற்குப் பயணப்பட எண்ணினனாயினும் அச்சமயம் பரீட்சை நடந்துவந்ததால் அது முடிந்ததும் செல்லுவதெனத் தீர்மானித்தான்.



ஒற்றுமையற்ற மணத்தால் கனகம் பிணைக்கப் படுவதை எப்படியாவது தடுத்துவிட வேண்டுமென்பதே அவனது ஆசை. பரீட்சைகள் இரண்டு வாரத்தில் முடிவுற்றன. மறுதினமே விஜயபுரத்திற்கு ரயிலேறினன். ஆனால், அவனது முயற்சி வெற்றி பெற முடியாதபடி தெய்வம் தடுத்துவிட்டது. கண்ணப்பன் விஜயபுரம் போய்ச் சேர்ந்ததற்கு முன்தினமே கனகாம்பாளுக்கும் கருப்பண்ண முதலியாருக்கும் திருமணம் நடந்துவிட்டதால் மனமுடைந்த அவள், அன்றிரவே பாஷாணம் உண்டு உயிரை விட்டுவிட்டாள். விஜயபுரம் வந்ததும் இதைச் செவியுற்றுக் கண்ணப்பன் இடியேறுண்ட நாகமாயினன். திடீரென ஏற்பட்ட பெருந்துக்கம் அவனைப் பைத்தியத்தில் கொண்டு சேர்த்தது. ஆறு தினங்கள் வரை அவன் யார் கண்ணிலும் அகப்படவில்லை.

ஆருவதுதினம். தினசரிகளில் கீழ்க்கண்ட விஷயம் காணப்பட்டது.

## கனகாம்பாள் தற்கொலை

## சவக்குழியில் காதலன் பிணம்

விஜயபுரம்,
10—11—'34.

விஜயபுரம் வரதப்ப முதலியாரின் ஏகபுத்திரி கனகாம்பாள் தன் காதலனை மணக்கவொட்டாது தடைசெய்யப்பட்டு, கருப்பண்ண முதலியார் என்ற கிழவருக்குப் பலவந்தமாக விவாகம் செய்விக்கப்பட்டதின் பயனாய் விஷமுண்டு இறந்தாள். அவளது காதலன், கண்ணப்பனென்பவன் அவளிறந்ததால் பித்துகொண்டு அவளது சவக்குழியின் பேரிலேயே பிணமாகக்கிடந் தெடுக்கப்பட்டான்.

இதனைப் படித்த விஜயபுர மக்கள் அனைவரும் ஓர் பெரு மாறுதலை அடைந்து விட்டனர். அவர்கள் "கேவலம் பணத்தை விரும்பியும், இதா சமூகக் கட்டுப்பாடுகளுக்குப் பயந்தும் நமது மக்களின் வாழ்நாளை நாசமாக்குவது மிகவும் கொடுமையாகும். இக்கோர சம்பவம் நமக்கெல்லாம் ஓர் படிப்பினையைக் கற்பித்ததாக" எனக் கூறி, அன்றுமுதல் தம்பதிகளின் அபிப்பிராய மில்லாத் திருமணத்தை எவ்வித காரணத்தைக் கொண்டும் தமது மக்களுக்குச் செய்வதை அறவே நீக்கிவிட்டனர். மற்றைய நகரத்தார்களும் ஏன் அவர்களைப் பின்பற்றக் கூடாது?

# இயற்கையைத் தன் அடிப்படுத்தும் மனித வுயிரின் மாண்பு

[M. கந்தசாமி, மாணவன், ஔவைத் தமிழகம், திருவத்திபுரம்.]

(சென்ற இதழ், 578-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி, காற்று என்பது கண்ணுக்குப் புலனாகாது, செய்கையால் தன் உண்மை தோன்றநிற்கும் பொருள். இஃது இல்லையாயின் ஓரறிவுயிர் முதலிய எல்லா உயிர்களும் உயிர்வாழ்தல் முடியாது. மேற்கூறிய நீரில்லாவிடினும் உயிர்கள் ஒரு நாள் வரையில் வாழலாம்; காற்றில்லாவிடில் ஒரு கணநேரமும் உயிர்வாழ்த லரிது. சுருங்கக் கூறின், உயிர்நிலைக்குக் காற்றே ஆதாரமாம் என்பது பொருந்தும். வற்றாத கடலும், கலங்காத மலையும் அலைந்து கலங்கி முறைமுறையே பேரோலமிட் டலையவும், சிறு சிறு துகளாகி மணலும் பரலுமாய்ப் பரவவும் செய்ய வல்லது இக் காற்றெனின், இதனாற்றல் அறிந் துரைக்கும் அளவினதாகுமா? இத்துணைப் பேராற்றல் படைத்ததாயினும், இது செல்லுதற்கு முடியாத நிலையும் வானத்தில் உண்டு. அந்நிலையில் இதற்குச் செல்லுந் தகுதியில்லாமையுணர்ந்த மனிதவுயிர், தன்னோடு கொண்டுசெல்லும் தகுதி பெற்றமையின், இது மனிதவுயிருக் கடங்கிய தென்பது புலனாம். மேருமலையின் முடிகாணச் சென்ற மேனாட்டு (Himalayan expedition in 1921) மக்கள், அங்குக் காற்றுக்குச் செல்லும்தகுதி யில்லாமை கண்டு, சிறு சிறு குழாய்களிற் கொண்டுபோன செய்தி நாம் அறிந்ததே யாகும். தன்னாற் கொண்டுபோகப்படும் சிறுமை யுடைய தாயினும், இதனைச் சும்மா விடாது மனிதவுயிர் இன்று வானவிமானம் (Aearo-plans, Zepplins etc.,) கொண்டு இதன் தலைமேல் நின்று நடன மிடுவது போல, வான வீதியில் உலாவி வருகின்றது. காற்றாடி (Wind Mill) கொண்டு நீர் இறைத்தலும், மாவரைத்தலும், மின்சார சக்தி (Electrical Works) தொகுத்தலும் நாம் அறிந்ததாகும்.

இக் காற்றாடிகளால் நாட்டில் (Holland) தேங்கியிருக்கும் தண்ணீரை வெளிப்படுத்துகின்றனர். பண்டைக் காலத்து, மக்கள் தம் மரக்கலங்களை யியக்குதற்கு இக் காற்றினையே ஏவல் கொண்டனர். வங்கங்கள் பாய்களால் ஓட்டப்பட்டன. காற்றடிக்கும்போது பாயினை விரித்தவுடன் அக் காற்று பாய்மரத்தில் மோதிக் கப்பலை நகரும்படிச் செய்யும். இது,



காற்றைத் தன்னடிப்படுத்தியதனா லன்றோ? (This is the immediate advantage of the Trade Winds) இன்று செல்வம் சிறக்க, கல்வி பெருக, கைத்தொழிலில்மிக்குற்று ஓங்கும் ஐக்கியத்திற் குறைவிடமான அமெரிக்கா நாடு, மனிதவுயிரால் கண்டுபிடிக்கப்பட்டது. பல்லாயிர மைல்களுக் கப்பா லிருக்கும் மக்கள் பாடும் பாட்டும், பேசும் பேச்சும், நாம் இன்று கேட்குமாறு அப்பாட்டினையும், அப்பேச்சினையும் கொணர்ந்து காட்டுமாறு, காற்றினை (Radio, Broad Castings etc.,) ஏவிக் கண்டு, கேட்டு மகிழ்வது நம்முயிரல்லவா? கடல்வயிறு துருவும், முழுகுமணியும், (Diving bell) வானவீதி பாயும் புகைக்கூடும் காற்று நமக்குப் புரியும் தொண்டின் பயனேயாகும்.

இனி தீயாவது, ஒளியும் வெப்பமுமுடைய பொருள். இது காற்றிலிருந்து தோன்றிற்று என்று நம் நாட்டு நூல்கள் கூறும். ஆதியில் இது, நெருப்புருண்டையாகிய ஞாயிற்றிலிருந்தே தோன்றியதென்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இதனால், உயிர்கள் நின்று நிலவுதற்கு ஆதாரமாகிய நிலத்திற்கு முதற்காரணம் நெருப் பென்பது விளங்கும். நெருப்பின் உடைமை இரண்டனுள் ஒளி கட்புலனாகும் பொருளாகும். இயற்கையின் அழகினைக் கண்டு மகிழ்தற்கு ஏதுவாவது இவ்வொளி. அழகென்னும் இன்பக்காரணப்பொருட்குச் சிறப்புத் தருவன பலவகை வண்ணங்களேயாம் (Colours). நீல வானத்தின் நேர்மையும், அந்திவானத்தின் பொன்னிறமும், நறுமணங் கமழும் புதுமலர் வண்ணமும் ஒளியினால் உண்டாயினவே. இத்தகைய ஒளிகள் சென்று தேய்ந் திறுதலும், செல்லாமையுமாகிய இரு வகைக் குற்ற முடையனவாம். அருகில் தோன்றும் 'ஒளி, சேய்மையிற் செல்லச் செல்லக் கதிரளவு சுருங்கிக் கண்ணுக்குப் புலனாகாது போதலை யாவரு'மறிவர்; இது சென்று தேய்ந் திறுதல். இரவுக் காலத்தில் ஒளி கிடையாது. இது செல்லாமை. இந் நிலையில் ஆற்றலின்றி மழுங்கும் ஒளியினை மிகுவித்துச் சேய்மைக்கண் ணுள்ள பொருள் அண்மையில் தோன்றச்செய்யும் கண்ணாடிகளும், இருணிறைந்த இரவுப்பொழுதினைப் பகலாக்கும் பேரொளி விளக்கும் (Serch light, torch light) மனிதவுயிர் அமைத்த மாண்புடைக் கருவிகளாம். நீரும் நெருப்பும் பல வகையாகப் பிரிக்கப்பட்டுப் பயன்பட்டது போல, ஒளியும் ஏழு வகையாகப் பிரிக்கப்படுகின்றது. ஒளிவிசேடமாகிய எக்ஸ்ரேஸ் (X Rays) என்னும் ஒளியைக்கொண்டு உடலின் உட்புறத்தி லிருக்கும் உறுப்புகளைக் காண்டற்கு மனிதவுயிர் அதை உபயோகித்துக் கொள்ளு

கிறது. பல வகை ஒளிகள் நோய்வாய்ப்பட்ட உயிரைக் காப்பாற்றுதற்கு மருந்தாகப் பயன்படுகின்றன. பண்டை நாளில் இன்றிருக்கும் நெருப்புக்குச்சிகள் இல்லை. அக்காலத்தவர், ஒளி வீசும் கிரணத்தைக்கொண்டு கண்ணாடியின்மேல் விழச் செய்து அக் கண்ணாடியின்கீழ்ப் பஞ்சைப் பிடிப்பார்கள்; அஞ்ஞான்று அவ்வொளியின்கண் நெருப்புத் தோன்றி பஞ்சியைப் பற்றும். அதனால் வேண்டுவன செய்துகொள்ளுவர்.

இனி, வெம்மையைக் கொண்டும் தனக்கு வேண்டிய காரியங்களை மனிதவுயிர் செய்துகொள்ளுகின்றது. வெம்மை உயிர் உடலில் நிற்றற்குரிய உயிர்க்காற்றாய்ப் பயன்படுதலும், நெருப்புக்காற்றாய் நீர்க்காற்றோடு கூடி நீரை உண்டுபண்ணுதலும், காற்றினை இயங்கச் செய்தலும், வண்ணவேறுபாடு பயத்தலும் ஆகிய செயல்களைச் செய்யும் இயல்பினை யுடையது. இவ்வியல்பறிந்தே, பனியால் நனைந்து குளிரால் உறைந்து செயலற்றொழியும் உயிர்களைச் செம்மை செய்தற்கும், பிறவற்றிற்கும் மனிதன் பயன்படுத்துகின்றான். கூடாதவற்றைக் கூட்டுவித்தலும், நெகிழாதவற்றை நெகிழ்வித்தலும், உருகாதவற்றை உருகுவித்தலும், விரவிக் கலவாதவற்றை விரவிக் கலப்பித்தலும் முதலிய தொண்டு புரியுமாறு ஏவல் கொள்ளுவதேயன்றி நிலம், நீர், காற்று ஆகிய மூன்றையும் ஆட்கொள்ளும் மக்களுயிர்க்கு வேண்டும் கருவி செய்துகோடற்கும், தீயாகிய தன்னை வரையறுத்து ஏவல் கோடற்குரிய கருவி (Thermometer) அமைத்தற்கும் பயன் கொள்ளுவதும் ஆகிய எல்லாம் வல்லது மனிதவுயிர் என்பது துணியப்படும். இதனாலன்றோ "அரியவென்றாகாத வில்லை" உன அருந்தமிழ்க் குறளும், Nothing is greater than Man என்ற ஆங்கிலப் பழமொழியும் எழுந்தன.

---

**மாகாண புத்தகசாலை**

**எல்லாப் புத்தகங்களும் விலைக்குக் கிடைக்கும்**

வேண்டியவற்றிற்கு எழுதுங்கள்

விலாசம்:—

151, பவழக்காரத் தெரு சென்னை.

# இரவி மைந்தன் வள்ளன்மை

[ச. கந்தையா, கரவெட்டி.]

(சென்ற இதழ், 591-ம் பக்கத் தொடர்ச்சி)

பதினேழா நாட்போரிலே, மாயன் சூழ்ச்சியால், பாந்தட்பகளி பற்குனனை வதைக்கத் தவறிற்று. கிருஷ்ணன் அர்ச்சுனனை ஊக்கப்படுத்தி கர்ணன்மேல் பாணப்பிரயோகம் செய்யும்படி யேவினான். இரு திறத்தினரும் சலிப்பின்றிச் சமரிளைத்தனர். சிறிது நேரத்துள் கர்ணன் சேனைகள் அடியுண்டு சின்னாபின்ன மாயின. அமர்க்களம் அல்லோல கல்லோலப்பட்டது. கர்ணன் மெய்யெலாம் ஊறுபட்டு இரத்தம் பீறிட்டோடிற்று. பிணங்கள் மலைபோற் றிகழ்ந்தன. இரத்தவெள்ளம் கரைபுரண்டோடிற்று. குற்றுயிருடன் கீழே மணிமுடி சாய வீழ்ந்துகிடந்தான் அங்கர்கோன். அற்றைப் போழ்தில் அன்னவன் செய்த தருமமே ஓர் தெய்வ உருவுடன் தேர்மீதிவர்ந்து பற்குனனோடமரிளைத்தது. அத்தரும தேவதையை வேறலரிதென வுணர்ந்த கண்ணன், அதை ஒழிப்பான்வேண்டி, ஆயுதங்களை அவனிமீது வீசி நிராயுதனாய் நிற்கும்படி பற்குனனைப் பணித்துத் தான் ஒரு முதிய தபோதனர் வேடம் புனைந்து, குற்றுயிரோடு கிடந்த அங்கதேய வேந்தனை அணுகி,

“தாண்டிய தரங்கக் கருங்கட லுடுத்த
தரணியிற் றளர்ந்தவர் தமக்கு
வேண்டிய தருதி நீயெனக் கேட்டேன்
மேருவி னிடைத்தவம் பூண்டேன்
ஈண்டிய வறுமைப் பெருந்துய ருழந்தேன்
இயைந்ததொன் றிக்கணத் தளிப்பாய்
தாண்டிய கவனத் துரகதத் தடந்தேர்ச்
சுடர்தரத் தோன்றிய தோன்றால்”

“யான் மேருமாமலைக்கண் தங்கித் தவ மியற்றுபவன். தளர்ந்தோர் அவாவும் பொருளெலாம் நீ தருவதாய்க் கேள்வியுற்றேன். ஈண்டு வருத்திய வறுமையால் இரப்பான் விரும்பி ஈங்கு வந்தேன். தினகரன் சிறுவ! நான் விழைந்து கேட்பவற்றை இற்றே மகிழ்ந்தளிக்குக!” என வேண்டினான்.

இரதத்தின்மேல் விழுந்து கிடக்கும் கர்ணன் அதனை இரு செவிக் கமுதென ஏற்று,

"நன்றென நகைத்து தரத்தகு பொருள் நீ
நவில்கென நான்மறை யவனும்
ஒன்றிய படிநின் புண்ணிய மனைத்தும்
உதவுகென் றனுமுள மகிழ்ந்தான்"


"நான் கொடுக்கக் கூடியனவற்றை நீர் கேட்குதி!" எனவேண்ட, அத் தபோதனன், "உனது புண்ணியங்களனைத்தையும் எனக் களிப்பாயாக" என நவின்றான். அதுபோதில் மகிழ்வு மிக்கூர மன்னனை கர்ணன் "ஆவியோ நிலையிற் கலங்கி விட்டது. உயிர் தரிப்பது அசாத்தியம்போ லிருக்கிறது. பாவியேன், தாங்கள் வேண்டுவதறிந்து கொடுக்கவல்ல நிலையிலிருந்த போது வந்தீரல்லீர். எனினும், நான் செய்த புண்ணியங்களை எல்லாம் பங்கயத்தவனினும் பெரியனை நுமக்கு ஈகிறேன்" என ஈந்தான். இதனை,

"ஆவியோ நிலையிற் கலங்கிய தியாக்கை
அகத்ததோ புறத்ததோ வறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலா நயக்கும்
பக்குவந் தன்னில்வந் திலையால்
ஓவிலா தியான்செய் புண்ணிய மனைத்தும்
உதவினேன் கொள்கநீ யுனக்குப்
பூவில்வா முயனும் நிகரல னென்றால்
புண்ணிய மிதனினும் பெரிதோ"

என்னும் செய்யுள் விளக்கிக் காட்டுகிறது. இவ்வண்ணம் புண்ணிய மனைத்தையு மீந்த கர்ணனை, கண்ணன் மீண்டும் விளித்து "ஜலங்கொண்டு தாரைவார்த் தளிப்பி னேற்கத் தடையின்று" எனச் செப்பினன். என்னவே, அவ்வீரவேந்தன் மார்பிடை மாண்டிருந்த அம்பொன்றை இழுக்கவே அதினின்றும குருதி குபீரெனப் பாய்ந்தது. அக்குருதியையே நீராகக்கொண்டு தாரைவார்த் தீய்ந்தான். இச்சம்பவம்


"என்னமுன் மொழிந்து கரங்குவித் திறைஞ்ச
விறைஞ்சலர்க் கெழிலியே றனையான்
கன்னனை யுவகைக் கருத்தினு னோக்கிக்
கைப்புன லுடன்தரு கென்ன
அன்னவ னிதயத் தம்பின்வா யம்பால்
அளித்தலு மங்கையா லேற்றான்
முன்னமோ ரவுணன் செங்கைநீ ரேற்று
மூவுல கமுமுடன் கவர்ந்தோன்"

என்பதால் உணர்த்தப்படுகிறது. அங்ஙனம் புண்ணியதானம் பெற்ற கண்ணன், கர்ணனை நோக்கி "நீ விழைந்து நிற்கும் வரங்களைக் கேட்பின் அவற்றை உனக் களித்திடவல்லேன்.



திரு. S. P. பொன்னுசாமி முதலியார் அவர்கள்

இவர், சென்ற மாதம் நடைபெற்ற சேலம் நகரசபைத் தேர்தலில் போட்டியின்றி மூன்று முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.



திரு. வ. வீ. ச. வீ. சண்முக முதலியார் அவர்கள்

இவர், திருநெல்வேலி பெஞ்சு கோர்ட்டில் செங்குந்தர்களுள் முதன்மையாக கௌரவ மாஜிஸ்ட்ரேட்டாக நியமனம் செய்யப்பெற்றுள்ளார்.



பம்பாய் காங்கிரஸ் பெண் தொண்டர் படையினர் [illegible] சபைக்கு அணிவகுத்துச் செல்லுகின்றனர். இத்தொண்டர்படையின் முகாமை [illegible] அமைத்தனர். [எஸ். பி.]



விரைவிற் கேட்குதி" எனப் பணித்தான். அப்போது சூரன் மாமதலை "துன்பத்தைக் கொடுக்கின்ற பழவினை காரணமாக இன்னும் பிறவிக ளெனக் கிருந்தாலும், அவ்வப் பிறவிக டோறும் இரப்போர்க்கு 'இல்லை' என்று சொல்லாத இதயத்தை எனக்களித்தாற் போதுமானது" என வேட்டான். அவ்விதம் வேட்டு நின்ற வீரவேந்தனை கண்ணன் தமது தாமரை மலர் போன்ற கைகளால் மார்புறத் தழுவி, கண்களான மலர்களி லிருந்து கருணையாகிய கண்ணீர் சிந்தி, "வேந்தே! நீ எத்தனை பிறவி எடுப்பினும் அவ்வப் பிறவிக டோறும் வள்ளன்மையும், அதை நடத்துவதற்கான பெருநிதியும் பெற்று, இறுதியில் முத்தியாகிய பேரின்பத்தையு மடைவாயாக" என வாழ்த்தி வரமளித்துச் சென்றனன்.

மைத்துன னுரைத்த வாய்மைகேட் டையன் மனமல ருகந்துகந்தவனை
கைத்தல மலரால் மார்புறத் தழுவி கண்மலர்க் கருணைநீ ராட்டி
எத்தனை பிறவி எடுக்கினு மவற்று ளீகையுஞ் செல்வமு மெய்தி
முத்தியும் பெறுதி முடிவிலென் றுரைத்தான்மூவருமொருவனுமூர்த்தி.

இதனாலேயே, இடைபெழு வள்ளல்களு ளொருவனாக இம்மன்னன் மதிக்கப்படுகிறான். தர்மமே அம்மன்னன் விழையுந் தனிப்பொரு ளென்பது மேற்காட்டிய சம்பவங்களால் உள்ளங்கை நெல்லிக்கனிபோ லுணரக்கிடக்கிறது.

என்னே, இரவிமைந்தன் வள்ளன்மை!


## விளம்பர விகிதம்

5000-க்கு மேற்பட்ட சந்தாதாரர்களை யுடையதும், இந்தியா முழுவதும் மட்டுமன்றி இலங்கை, இரங்கூன், பினங்கு, தென்னாப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளிலும் சென்றுலவுவதுமாகிய உயர்ந்த தமிழ் மாதப்பத்திரிகை 'செங்குந்த மித்திர'னில் உடனே உங்கள் வியாபாரத்தைப்பற்றி விளம்பரஞ் செய்யுங்கள்

ஒரு தடவைக்கு முழுப்பக்கம் ரூ. 10
அரைப்பக்கம் ரூ. 5 கால்பக்கம் ரூ. 3

செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
பவழக்காரத் தெரு, சென்னை.

# சாதுர்யவான்களின் சம்பாஷணை

## (மகான் டால்ஸ் டாய்)

[ஈ. வே. சோ. கோவை]

ஒரு நாள், ஒரு செல்வவந்தர் வீட்டில் பல விருந்தாளிகள் கூடியிருந்தனர். விருந்தின்போது, அவர்களிடையே வாழ்க்கையைப் பற்றி ஒரு ஆழ்ந்த விவாதம் எழுந்தது.

அவர்கள் பலரும், அங்கு குழுமி யிருந்தவர்களைப் பற்றியும், விருந்திற்கு வராதவர்கள் பலரைப் பற்றியும் யோசிக்கவும், தர்க்கம் செய்யவும் ஆரம்பித்தார்கள். முடிவில் ஒருவராவது நிம்மதியான நேரிய வாழ்க்கை நடத்துவதாகக் காணவில்லை. ஒவ்வொருவரும் தமது நிலையைப்பற்றி குறைகூறினர். தாங்கள் ஒரு தூய்மையான மனித வாழ்வை நடத்துவதில்லை என்றும், மிகவும் சுயநல வாழ்க்கை நடத்துவதாயும், இந்திரிய சுகபோகங்களில் ஈடுபட்டு இருப்பதாகவும், தங்களையும் தங்கள் குடும்பத்தார்களையும் தவிர மற்ற அயலார் அல்லது அக்கம்பக்கத்தவர்களைப் பற்றி கவலைப்படுவதில்லை என்றும், தெய்வ சிந்தனை சிறிதேனும் தங்களிடம் கிடையாதென்றும் கூறிக் கொண்டனர்.

அச்சமயம் உணர்ச்சி ததும்பிய ஓர் இளைஞன், மிக்க மனோவெழுச்சியுடன் "அவ்வாறாயின், நாம் என் இத்தகைய தவறான வாழ்க்கை நடத்துகிறோம்? நாமே குறைகூறும்படியான, சரியென ஒத்துக்கொள்ளாத காரியங்களை நாம் ஏன் செய்கிறோம்? நமது வாழ்வின்மீது ஓங்கி எழும் குறைகளை அடக்க நமக்கே சக்தியில்லையா? நமது ஆடம்பர வாழ்வும், சோம்பலும், பயங்கொள்ளித்தனமும், முக்கியமாக நமது கர்வமும், நமது சகோதர மக்களிடமிருந்து நாம் பிரிந்து நிற்றலும் நமது அழிவிற்கே காரணங்களாவன என்பது நமக்கு நன்கு தெரிகின்றது. முக்கியஸ்தர்களாகவும், செல்வச் சீமான்களாகவும் இருப்பதற்காக நாம் உண்மையில் மனிதனுக்கு இன்பமளிப்பவைகளை எல்லாம் தள்ளிவிட வேண்டியவர்களாகிறோம். சோம்பல் வாழ்வை மேற்கொண்டு திடதேகமற்ற நோயாளிகளாகிறோம். பலவித இந்திரிய அனுபோகங்களை அளவுக்குமீறி அநுபவித்துக் கடைசியில், வாழ்க்கையில் ருசியும் ஆர்வமும் அற்றுப்போய், சலிப்பும் வெறுப்புங் கொண்டவர்களாய் மடிகிறோம். இவ்வளவும் ஏன்? நமது வாழ்க்கை இருக்கவேண்டிய முறை தவறி இருப்பதால்தான்.

ஏன் இங்ஙனம் வாழவேண்டும்? ஏன் நமது வாணாளை இவ்விதம் பாழ்படுத்தவேண்டும்? நமக்குக் கடவுள் அளித்துள்ள நலன்



களையும் சௌகரியங்களையும் வீணாய் ஏன் அழிக்கவேண்டும்? இதுவரை நடத்திவந்த வாழ்க்கை முறையை நான் அடியோடு நிறுத்திவிடத் தீர்மானித்துள்ளேன். நான் இப்போது ஆரம்பித்துள்ள நூல் ஆராய்ச்சிகளையும் நிறுத்திவிடுகிறேன். அத்தகைய ஆராய்ச்சியின் முடிவென்ன? நாம் அனைவரும் இங்கு குறைகூறிக் கொண்டிருந்த—மனத்திருப்தி யளிக்காத—துன்பம் நல்கும் வாழ்க்கை நிலைமைக்குத்தான் அந்த ஆராய்ச்சி நம்மைக் கொண்டுபோய்ச் சேர்க்கின்றது. என் சொத்துக்களைத் துறந்துவிட்டு, நாட்டின் ஏழை மக்களோடு சென்று வாழப்போகின்றேன். அவர்களுடன் உழைக்கப்போகிறேன். அவர்கள்கூட நானும் தேகத்தினால் பாடுபட அறிந்துகொள்வேன். எனது நூலாராய்ச்சியோ, நாகரீக அறிவோ ஏழை மக்களுக்கு அவசியமானால் அதை அவர்களுடன் பகிர்ந்துகொள்கிறேன். நேருக்கு நேராக அவர்களுடன் கூடி வாழ்ந்து, அவர்களுடைய ரத்த சம்பந்தமுள்ள சோதரனாக வாழ்க்கை நடத்தியே அவைகளை அவர்களிடையே புகுத்துவேன்.........ஆம். நான் என் மனதில் உறுதி பூண்டுவிட்டேன்" எனச் சொல்லி, அங்கு வந்திருந்த தன் தகப்பனாரை, அவர் அபிப்பிராயம் என்னவென்று கேட்பதுபோல் திரும்பிப் பார்த்துத் தன் பேச்சை முடித்தான்.

அவன் தகப்பனார் கூறியதாவது:-"உனது இலட்சியமும் நோக்கமும் மிகவும் தகுதியானவையே. ஆனால், ஆழ்ந்த யோசனையற்ற மூடத்தனமான ஆசையாக இருக்கின்றது. வாழ்க்கையின் உண்மை நிலை அறியாததால் உனக்கு அவை எல்லாம் வெகு சுலபமான காரியங்களாகத் தோன்றுகின்றன. எல்லோருக்கும் உனது அபிப்பிராயங்களும் திட்டமும் எவ்வளவு அழகானவை, மேன்மையானவை என்ற ஆச்சரியத்தை விளைப்பது உண்மைதான். ஆனால் காரியத்தில், நடைமுறையில் அவற்றை அப்பியசித்துக் காண்பித்தல் மிகவும் கஷ்டமாகவும், தொந்தரவாகவும் இருக்கும். ஏற்கெனவே அமைந்துள்ள வாழ்க்கை முறையை அநுசரித்து மற்றவர்களைப்போல் வாழ்க்கை நடத்துவதே கஷ்ட சாத்தியமாக இருக்கிறது. அதனைப் புதிய முறையில் மாற்றிக்கொண்டு அதன்படி ஒழுகி வருவதென்றால் அது மிகக் கடினமான காரியம். அத்தகைய புதிய வாழ்க்கை முறைகளை வரையறுத்து நடந்து காட்டுவது மகான்களால்தான் முடியும். பூரணமான தேக மனோ வளர்ச்சி பெற்ற, திடம்பெற்ற, மனிதனால் அடையக்கூடிய அறிவு, ஆராய்ச்சி, அனுபவம், ஆற்றல் முதலியவற்றை முழுவதும் அடைந்துள்ள உயர் மக்களால்தான் அத்தகைய மாறுதல்களைச் செய்யமுடியும். உனக்கு இங்ஙனம், புதிய ஒழுக்கத்தைக் கைக்கொள்வது சுலபமாகத் தோன்றுவதெல்லாம் வாழ்க்கையின் உண்மை அனுபவம் உனக்கு இல்லாமையாலும், உன் இளமையின் அவசர புத்தியாலும், கர்வத்தாலுமே யாகும். இளையோருடைய பதட்டமான உள்ளக் கிளர்ச்சிகளை எங்களைப்போன்ற முதியவர்களே சாந்தப்படுத்தவேண்டி யிருக்கிறது. உங்களை, நாங்கள் எங்கள் அனுபவத்தின் அறிவால் நல் வழியில் நடத்திக்கொண்டு போகிறோம். எனவே, இளைஞர்கள் எங்கள் அனுபவத்தின் பலனை அடைய எங்கள்

வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் வேண்டும். நீ தீவிர முயற்சியுடன் வாழவேண்டிய காலம் உன் முன் நிற்கிறது. தற்போது தேகத்திலும் அறிவிலும் வளர்ச்சியும் ஒழுங்கும் அடைந்து வருகிறாய். உனது கல்வி யறிவையும், உலக அநுபவத்தினையும் கூடியவரை நிறையப் பெற்றுக்கொள். உனது சொந்த அபிப்பிராயங்களையும், ஆழ்ந்த கருத்துக்களையும் ஆராய்ச்சியின்மேல் நிச்சயித்து சுதந்திர புருஷனாகி விடு. அடிப்படையான—தீவிரமான—நிச்சயமான கொள்கைகளைக் கொண்டவனாகிவிட்ட பின்னர், உனது புதிய வாழ்க்கை முறைகளைக் கைக்கொள். அதுவும் உனது பலத்தில்—திடபுத்தியில் உனக்குப் பூரண நம்பிக்கை யிருந்தால் மட்டும் செய்யலாம். ஆனால், இப்போது உனது நன்மைக்காகவென்றே உன்னை நடத்துவிப்போருக்கு நீ அடங்கி நடக்கவேண்டும். புதிய ஒழுக்க முறைகளை உன்னிஷ்டப்படி நீயே கைக்கொள்ளல் கூடாது.”

இளைஞன் பதிலொன்றும் கூறவில்லை. மற்றும் அங்கிருந்த பெரியோர் பலரும் அவன் தந்தை கூறியவற்றை ஒப்புக்கொண்டு அவற்றை ஆமோதித்தனர்.

நடுத்தர வயதுள்ள இல்லறவாசி ஒருவன் இளைஞனுடைய தந்தையைப் பார்த்துச் சொன்னதாவது: “ஐய, நீர் சொல்வது சரிதான். வாழ்க்கையின் அனுபவம் அற்ற நமது இளைஞன் புதுமுறை வாழ்வு நடத்துவதில் பல தவறுதல்களைச் செய்யலாம். அவனுடைய கொள்கைகள் மனத்தில் தீர்மானமாக உருவகப்படாமல் இருக்கலாம். ஆனால் ஒரு விஷயத்தில் நாம் அனைவரும் ஏகோபித்த அபிப்பிராயமுடையோராக இருக்கிறோம். அதாவது, தற்போதைய நமது வாழ்முறை நம்மனைவருக்கும் மனச்சாட்சிக்கு விரோதமானதாகவும், நமக்கு சந்துஷ்டியையோ மனமகிழ்ச்சியையோ அளிக்காததாகவும் உள்ளது என்பதே. ஆகையால் நமது இளைஞனுடைய முறையில் வாழ்க்கை நடத்தும் உத்தேசம்போற்றத் தக்கதென ஒப்புக்கொள்ளாதிருக்க முடியாது.

இளைஞன் தனது ஆராய்ச்சியின்படி புதுமுறை வாழ்க்கையை இலட்சியமாக மேற்கொள்ளலாம். ஆனால், நானோ இளைஞன் அல்ல என்னைப்பற்றி என் சொந்த அனுபவத்தை ஒட்டி நான் பேசப்போகிறேன். இன்றைய நமது சம்பாஷணையைக் கேட்டதும் எனது மனத்திலும் அதேமாதிரியான எண்ணங்களே எழுந்தன. நான் தற்போது நடத்தும் வாழ்க்கை அளவற்ற ஆசையினையும், துஷ்ட எண்ணங்களையும் தருவதா யிருக்கின்றது. அனைவருடைய அனுபவமும் ஆராய்ச்சியும் அம்முடிவையே காட்டுகின்றன. ஆகையால், ‘நான் ஏன் நிம்மதியற்ற—சங்கடமான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன்? எதை எதிர்பார்த்து இந்த மனதிற்குப் பொருந்தாத வாழ்க்கையினை மேற்கொண்டிருக்கிறேன்?’ என்ற சங்கை எழுகிறது. நாம் காலைமுதல் இரவுவரை பாடுபடுகிறோம். பெண்டு பிள்ளைகளுக்காக பல கஷ்டநஷ்டங்களுக்குட்பட்டு அவதிப்படுகிறோம். இதன் முடிவு என்ன? நாமும் நமது மனைவி மக்களனைவரும் விலங்கு நீர்மையான—நேர்மை



யும் தூய்மையும் அற்ற வாழ்க்கையை நடத்திக்கொண்டு போவது தானே! நாம் அரும்பாடுபட்டு குடும்ப சம்ரக்ஷணைக்கு உழைப்பதால் நமது குடும்பத்தினர் சந்தோஷமான—திருப்தியுள்ள நிலைமையினை அடைவதாகக் காண்கின்றோ மில்லை. இதைப் பார்த்துப்பார்த்து என் மனமும் சில சமயங்களில் ஒருவித முடிவை அடைவதுண்டு. இந்த இளைஞன் கூறியபடி வாழ்க்கை முறையை அடியோடு மாற்றிக் கொண்டு அவன் உத்தேசித்தபடியே செய்யவேண்டும். பெண்டு பிள்ளைகளைப்பற்றி வீணே கவலைப்பட்டு, பந்தபாசங்களில் சிக்கியிருப்பதை அறுத்துவிட்டு, ஆத்ம விடுதலையை நாடி உழைக்க வேண்டும் என்பதே என் முடிவாகும்” என்று படபடப்பாகக் கூறினான்.

இங்ஙனம் இந்த விவாகமான மனிதன் கூறி முடித்ததும் முடிக்காததுமா யிருக்கும்போதே அங்கே யிருந்த பெண்கள் அனைவரும் (அவன் மனைவியுள்பட) அவனைக் குறை கூறத் தொடங்கினர். வயது சென்ற ஒரு ஸ்திரீ சொல்லியதாவது:—

“இவைகளைப்பற்றி முன்பே நீ யோசித் திருக்கவேண்டும். தற்போது ஏரில் பூட்டிய மாடுபோன் றிருக்கும் நீ, உழைத்துத்தான் ஆகவேண்டும். குடும்பத்தை சவரக்ஷணை செய்வதில் கஷ்டமுண்டாகும் போதெல்லாம் உன்னைப்போலவே ஒவ்வொரு மனிதனும் தான் தப்பித்துக்கொண்டு பொறுப்பற்றவனாக இருக்க விரும்பலாம். இவையெல்லாம் ஏமாற்றலும், அற்பத்தனமும் ஆகும். இது சரியன்று. ஒரு மனிதன் குடும்பமுடையவனாயிருப்பின் அவன் தெய்வீகமான தூய்மையான வாழ்க்கை நடத்துபவனாக இருக்கவேண்டும். ஒரு இல்லறவாசிக்குக் குறிப்பான கடமைகள் பல உள்ளன. அவைகளைப் பூர்த்தி செய்யாமல் அவன் இருத்தலாகாது. உனது குடும்பம் சௌகர்யமாக அமைக்கப்பட்டிருந்தால் அதன் விஷயம் வேறு. அப்போது நீ உனது இஷ்டப்படி உனக்காக என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம். ஆனால் யாருக்கும் தமது குடும்பத்திற்குத் தீங்கு விளைவிக்க உரிமையில்லை.”

ஆனால், அந்தக் குடும்பஸ்தன் இவ்வபிப்பிராயங்களை ஒப்புக கொள்ளவில்லை. அவன் சொல்லியதாவது:—

“நான் எனது குடும்பத்தைத் துறந்துவிட விரும்பவில்லை. நான் முக்கியமாக—முடிவாகச் சொல்லுவது என்னவென்றால், நாம் நமது குடும்பத்தையும், குழந்தைகளையும் ஆடம்பர சுகபோக வாழ்க்கை முறையில் வைத்திருத்தல் அவசியமன்று. நாம் இது வரை பேசிக்கொண் டிருந்தபடி அவர்களது சுய இன்ப நுகர்ச்சியையே விரும்பும்படி கற்பித்தல் சரியல்ல. ஆனால் அவர்களைப் பயிற்றுவிக்கும் முறையில் சிறு பிராயத்திலிருந்தே, எழ்மை, உழைப்பு, பரோபகாரம், மற்ற மனிதர் யாவருடனும் சகோதர பாவத்துடன் வாழும் பழக்கம் முதலியவை நன்கு படியும்படியாக வளர்த்தல் வேண்டும். இங்ஙனமாவதற்கு செல்வத்தையும், பெருமையினையும் துறந்து தியாகம் செய்ய வேண்டுவது மிக அவசியமேயாகும்.”

அதைக் கேட்ட அவனது மனைவி சிறிது கோபத்துடன் எதிர்த்துக் கூறியதாவது :—

"நீயே தூய்மையான வாழ்க்கை அனுஷ்டிக்காமல் இருக்கும்போது மற்றவர் வாழ்முறையில் புகுந்து இம்சித்தல் சரியாகாது. நீ சிறு வயதிலிருந்து இது வரை உனது ஆசைப்படியே வாழ்ந்து வந்துவிட்டாய். அப்படியிருக்க உன் குடும்பத்தாரையும், குழந்தைகளையும் துன்புறுத்த இப்போது ஏன் துணிகிறாய். அவர்கள் அமைதியாக வளர்ந்து அவர்களிஷ்டப்படி நடந்துகொள்ளட்டும். அவர்களைக் கட்டாயப்படுத்த வேண்டாம் !"

அவள் புருஷன் பேசாமல் மௌனியானான். ஆனால் அவனை ஆதரித்து அங்குள்ள வயது சென்ற பெரியவன் ஒருவன் பேசலானான்.

"ஒரு குடும்பஸ்தன் தன் குடும்பத்தாரை சாதாரணமாக ஆடம்பர வாழ்க்கையில் பழக்கம் செய்துவிட்டு திடீரென அவர்களது சுக போகங்கள் அனைத்தையும் விலக்கிவிடல் முடியாதது என நாம் ஒப்புக்கொள்வோம். குழந்தைகளை மேற்கல்விக்கு அனுப்பி யிருந்தால் அதை நடுவில் நிறுத்தி விடுவதைவிட பூர்த்திசெய்ய விடுவதே மேலாகும். மற்றும் அக்குழந்தைகள் கல்வி கற்றபின் வயதடைந்ததும் தங்களுக்கு எது சிறந்தது என்று தெரிகிறதோ அவ்வழியையே தாங்களாக மேற்கொள்வர். ஆதலால் ஒரு குடும்பஸ்தன் தன் வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ளுதல் மிகக் கஷ்டம் அல்லது அசாத்தியம் என்று நான் ஒப்புக்கொள்கிறேன் ஆனால் வயோதிகரான எங்களுக்குத் தெளிவாக கடவுள் ஆக்ஞை இருக்கிறது. என்னைப்பற்றி மட்டும் நான் சொல்கிறேன். பொருப்பு இல்லாதவனாக இப்போது நான் வாழ்கிறேன். உண்மையைச் சொல்வதானால் வயிற்றை நிரப்புவதற்காகவே நான் வாழ்கிறேன். சாப்பிடுவது, குடிப்பது, சுகமாகத் தூங்குவது இவைகளைத் தவிர வேறொன்றும் நான் செய்வதில்லை. இவைகள் என் மனதிற்கும் பழக்கத்திற்கும் முற்றிலும் ஒவ்வாத வெறுப்பானவைகளா யிருக்கின்றன. ஆகையால் இத்தகைய வாழ்வை விட்டு, எனது சொத்தைப் பகிர்ந்து கொடுத்துவிட்டு எனது எஞ்சிய வாணாளை கடவுள் ஆக்ஞைப்படி தூய்மையாக நடத்தவேண்டிய காலம் எனக்கு வந்துள்ளது என்றான்."

ஆனால், அங்கிருந்த அவனது மருமகளும் பௌத்திரியும், குமாரனும் அவன் அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ளவில்லை. அவர்கள் அனைவரும் அவன் உத்தேசித்த வாழ்க்கை மாறுதலை எதிர்த்தனர்.

அவன் குமாரன் கூறியதாவது :—

"நீங்கள் சொல்வது சரியன்று. மிகவும் கஷ்டப்பட்டு உங்கள் காலத்தில் பாடுபட்டுள்ளீர். தற்போது தாங்கள் இளைப்பாறுதல் தங்கள் உரிமையாகும். தங்களைத் தாங்களே துன்பப்படுத்திக் கொள்ள தங்களுக்கு அதிகாரம் கிடையாது. மேலும் அறுபது வருடகாலமாக இவ்வாழ்க்கையில் பழக்கப்பட்டு இப்போது மாற்றுவது



முடியாத காரியம். பிரயோஜன மில்லாமல் இம்சைப்படுத்திக் கொள்வீர்களே தவிர வேறொன்றும் ஆகாது."

அவன் மருகியும், "ஆம், ஆம் வாழ்க்கை முறையை தற்போது மாற்றிக்கொண்டால், வறுமையில் அகப்பட்டு, கஷ்டநிலைமையடைந்து, மனசந்துஷ்டி யிழந்துவிடுவீர்கள். சுகமின்றி வேறு கெட்ட காரியங்களைச் செய்தாலும் செய்வீர்கள்." என்றாள்.

அக்கிழவன் காலத்திய மற்றொரு கிழவன் இதைக் கேட்டுச் சொல்லியதாவது :—

"ஆமாம். நாம் ஏன் வாழ்க்கை முறையை மாற்றவேண்டும். எனக்கும் உனக்கும் ஆயுள் இன்னும் 2 நாட்களோ ! 3 நாட்களோ ! அதற்குள் நாம் ஏன் புதுவாழ்வைத் துவக்கவேண்டும் ?"

இதுவரையில் பேசாமலேயே கவனித்துக்கொண்டு உட்கார்ந்திருந்த விருந்தினர் ஒருவர் கூறியதாவது:—

"பெரிய ஆச்சரியம்! நாம் எல்லோரும் தூய்மையான வாழ்க்கை நடத்தவேண்டும் என்கிறோம். அதில் ஆசையும் கொள்கிறோம். தற்போதைய வாழ்க்கை முறை கேவலமான மிருக வாழ்க்கை யென்றும், அதனால் தேகமும் மனமும் ஆத்மாவும் அவதிப்படுகின்றன என்றும் ஒப்புக்கொள்கிறோம். ஆனால் காரியத்தில் நடத்தையில், புதுமுறையை—தூய்மையான, தெய்வீக வாழ்க்கையை மேற்கொண்டு நடப்பது என்பதானால் பெரிய ஆக்ஷேபனைகளும் சந்தேக சமாதானங்களும் வந்துவிடுகின்றன. குழந்தைகளை எளிய—பரிசுத்தமான அன்பு வாழ்க்கைக்கு, தற்போதைய ஆடம்பர—சோம்பலான பழக்கவழக்கங்களி லிருந்து மாற்றுவது கடினமாம். ஒரு இல்வாழ்வோன் தன் மனைவி மக்களைத் திருப்பி புதுவாழ் முறையில் செலுத்தக் கூடாதாம். பழையபடியே விட்டு இருக்கவேண்டுமாம். வயது சென்றவர்களோ புது வாழ்க்கை ஆரம்பிக்க இயலாதாம். பழைய முறை வழக்கமாகிப் போய்விட்டதும் தவிர இன்னும் இரண்டு ஒரு நாட்கள்தான் ஜீவித்திருக்கப் போகிறார்களாம்.

இதன் முடிவு என்ன என்று பார்த்தால் ஒருவராலும் தூய்மையான வாழ்க்கை நடத்தமுடியாது. ஆனால் பரிசுத்த வாழ்க்கையைப் பற்றி யாவரும் சிலாகித்துப் பேசுவது சாத்தியம் என்பதே !"

மகான் - டால்ஸ்டாய்.

குறிப்பு :—

இந்த சம்பாஷணையைப் பற்றிச் சிந்திக்குங்கால் ஒவ்வொருவரும் தூய வாழ்க்கை முறையை கைக்கொள்ள அவாவுள்ளவராகவே யிருப்பினும், தற்போதுள்ள சமூக, குடும்ப அமைப்பு என்னும் இயந்திர வேகத்தில் சிக்குண்டு இருப்பதால், தனித்தனியாக சிறுவரோ, வாலிபரோ, முதியவரோ புதுமுறையை அநுஷ்டிப்பது கடினமாகத் தெரிகிறது. ஒவ்வொரு துறையிலும் ஏற்படும் தடைகளுக்கும்

இடையூறு இன்னல்களுக்கும் துணிந்து தியாகத்திற்குத் தயாரான மக்கள் செய்து காட்டும் வழக்கங்களே உலகத்தில் நடந்து வரக் கூடும். ஆனால், அத்தகைய சிறிய தொகையினருடைய தியாகத் தால் வழிகாட்டத்தான் முடியுமே ஒழிய பூரண சமூக சீர்திருத்தம் ஏற்படுத்திவிட முடியாது.

அம்மாறுதலுக்கு ஒரே அடியாக பெரும்புரட்சி ஏற்பட்டு சமூக குடும்பங்களின் பிரதி அங்கத்தினரும் தூய வாழ்க்கை முறையை ஏககாலத்தில் கைக்கொள்ளும்படி செய்தால்தான் வெற்றிகரமாக முடியும்.

இம்மாதிரி புரட்சி ஏற்படும்படி செய்ய அறிஞர்களும் பெரியார் களும் முயற்சி செய்யவேண்டும்.

இவ் விஷயத்தைப்பற்றி செங்குந்த மகாத்மா உயர்திரு. ஆ. வே. முத்தையா முதலியார் போன்ற அறிவிலும், அநுபவத்திலும் மிக் கோர் அபிப்பிராயங் கூறி என்போன்ற இளைஞர்களுக்கு நல்வழி காட்டவேண்டும் என பெரிதும் விழைகின்றேன். சு. வே. சோ.

உலகப் பிரசித்திபெற்ற

**வனமூலிகை ஆனந்த கல்ப காபி தூள்**

பல தேசங்களில் வசிக்கக்கூடிய நமது அருமை சகோதரர் கள் சகோதரிகள், சங்கீதக் கச்சேரி செய்கிறவர்கள், சிறுவர் சிறுமிகள், குழந்தைகள், வயோதிகர்கள், பலயீனமானவர்கள், அதிக உழைப்புள்ளவர்கள், உத்தியோகஸ்தர்கள் யாவரும் எக்காலத்திலும் உபயோகிக்கக்கூடியது. திரேகத்திற்கு அழ கையும், புஷ்டியையும் தரும். யாதொரு கெடுதியும் செய்யாது.

இந்த காப்பித்தூளை உபயோகிப்பவர்களுக்கு மதுமேகம், நீரிழிவு, அதிதாகம், நாக்குவறட்சி, அஸ்திசுரம், பித்தமயக்கம், திரேக வெளுப்பு, இருமல், மல பந்தம், பசியின்மை தாது நஷ்டம், பலஹீனம், கைகால் அசதி, ஞாபகசக்தி குறைவு இன் னும் பல துர் வியாதிகளை நீக்கி தாதுவிருத்தியையும், ரத்த விருத்தியையும், போகவிருத்தியையும், சந்தான விருத்தியையும், நீண்ட ஆயுளையும் உண்டாக்குமென்பதில் சந்தேகமில்லை. இதை உபயோகித்தால் நரைத்த ரோமங்கள் கருத்து வளருவதும் தவிர, தேக காந்தியும் உண்டாகும். இது அநேகரால் நன்கு மதிக்கப்பட்ட மருந்து. 40 வேளை 20 நாள் வரக்கூடியது டப்பி 1-க்கு ரூபா 1.

(தபால் பாக்கிங் சிலவு வேறு).

விலாசம்:— தி. இராஜகோபால் முதலியார்,
பழைய மாம்பலம், சைதாப்பேட்டை.

# அதிசயம், அற்புதம், ஆச்சரியம்

## இங்கிலாந்திலுள்ள வீடு அமெரிக்கா போகிறது

இங்கிலாந்தில் அரசுபுரிந்த எட்டாவது ஹென்றி மன்னரின் மனைவிகளில் ஒருவரான அண்டொலின் வசித்துவந்த வீட்டை அமெரிக்கக் குபேரரான ஹென்றிபோர்டு விலைக்கு வாங்கியிருக் கிறார். அந்தவீட்டை அப்படியே பெயர்த்தெடுத்து அமெரிக்காவுக்குக் கொண்டுபோக அவர் எண்ணி யிருக்கிறாராம்.

## ஒரே முட்டையில் இரு குஞ்சுகள்

முஸோரியில் டுபேலோ என்னு மிடத்தில், ஒரு கோழி முட்டை யிட்டுக் குஞ்சு பொரித்தபோது ஒரு முட்டையில் இரண்டு குஞ்சுகள் பொரித்தன. இரண்டும் சுகமே வளர்ந்து வருகின்றன.

## அபூர்வ மரங்கள்

ஆப்பிரிக்காவின் கீழ்க்கரையிலுள்ள பீடபூமி யொன்றில் சில விநோத மரங்க ளிருக்கின்றன. அம்மரங்களின் அடிபாகத்தின் குறுக் களவு 4 அடி இருந்தும், அவை ஒருஅடி உயரத்திற்குமேல் வளர்வ தில்லையாம். ஒவ்வொரு மரத்திலும் இரண்டே இலைகள் உண்டு. ஒவ் வொரு இலையும் இரண்டடி அகல மிருக்கிறது.

## மூக்கை விழுங்கும் பெண்

சிலர் நாக்கைக்கொண்டு மூக்கைத் தொடச் சொல்வதுண்டு.



அது எல்லாராலும்முடிவதில்லை. சிலருக்குமட்டும் அது பழக்கமா யிருக்கிறது. ஆனால், சிகாகோ உலகக் காட்சியில் பலவித அபூர்வ பிராணிகளையும், மனித ரையும், பொருள்களையும் வைத் திருக்கிறார்கள். இந்தக் காட்சி யில் மார்காட் ஹெய்ஸ் என் னும் பெண் நாக்கைக்கொண்டு மூக்கைத் தொடுவது மன்றி அடியோடு மூக்கையே வாய்க் குள் விழுங்கி விடுகிறாள். இவள் உதடுகளும் மூக்கும் ரப்பரோ என்று சந்தேகிக்க வேண்டி இருக்கிறது. படத்தில், அவளுடைய மூக்கு, வாய்க்குள் இருப்பதைப் பாருங்கள்.

## ஆகாரங்களின் அழிவு

தற்கால உலகம் ஒரு விந்தையானது. மக்களின் புத்தி தற் போதுள்ள பொருளாதார மந்தத்தினால் தடுமாறி விட்டதென்றே

நினைக்கவேண்டி யிருக்கிறது. பல தேசங்களில் ஆகாரப் பொருள்கள் கிடைக்காமல் தவிக்கிறபோது, சில கொழுப்பேறிய நாடுகள் பொருளாதார அபிவிருத்தி செய்வதற்காக உற்பத்தியான ஆகாரப் பொருள்களை கடலில் எறிந்தும், நெருப்பிட்டுக் கொளுத்தியும் அழித்து, மிகுதியுள்ள பொருள்களுக்கு அதிக கிராக்கி ஏற்படுமாறு செய்துள்ளன. கீழே உள்ளதைப் பாருங்கள்.

கானடா தேசம் பார்லி அரிசியை விறகுக்குப் பதிலாகச் சுட்டு எரித்தது.

பிரேசில் தேசத்தில் 6 மாத காலத்திற்குள் 77,50,000 மூட்டை காப்பிக் கொட்டையை கடலில் வீசி இறைத்துப் பாழ்படுத்தியது.

நியூயார்க் நகரம் பழங்களனைத்தையும் அழுக வைத்து நாசமாக்கியது.

அமெரிக்கா ஆறு லட்சம் பசுக்களைக் கொன்று பால் விலையை உயர்த்தி யிருக்கிறது.

ஸ்பெயின் தேசம் கடந்த ஆகஸ்டு மாதத்தில் 15 லட்சம் ஆரஞ்சுப் பழங்களை அழுக வைத்தது.

இலங்கையில் ஏழு கோடி ஐம்பது லட்சம் ராத்தல் தேயிலை அழிவு செய்யப்பட்டது.

சில்லி தேசம் 2,25,000 ஆடுகளைக் கொன்று புதைத்துவிட்டது.

அமெரிக்கா 62 லட்சம் பன்றிகளையும், 2,20,000 மிருகங்களையும் கொன்று புதைத்துவிட்டு மாமிச விலையை உயர்த்தி யிருக்கிறது.

இதுவன்றியும், அமெரிக்கா இவ்வருடத்தில் 2 கோடி ஏக்கர் தான்ய விளை நிலங்களையும், 15 லட்சம் ஏக்கர் பருத்தி விளை நிலங்களையும் பயிரிடாமல் தரிசாக்கியும், ஏகிப்து 3 வருடத்திற்குப் பருத்திப் பயிரிடுவதை நிறுத்தி வைத்தும் அவற்றின் விலைகளை உயர்த்த முயற்சிக்கின்றன. என்னே, காலத்தின் கோலம்!

## படத்தில் பிடிபடா வெளிச்சம்

பிரானே ஆஸ்பத்திரியில் அன்னா மொனாரோ என்பவள் க்ஷய ரோக சிகிச்சைக்கு வந்திருக்கிறாள். அப்பெண்ணிடம் தோன்றும் நீலநிறக் கதிர்களை வீசும் ஒரு வெளிச்சத்தை பலவகையில் படம் பிடிக்க முயன்றும் படத்தில் பிடிபடவில்லையாம்.

## மலை நகர்கின்றது

அயர்லாந்து தேசத்தில் மேயோவுக்கும், சிலிக்கோவுக்கு மிடையிலுள்ள ஆக்ஸ் மலை, ஒரு இரவில் இரண்டு மைல் தூரம் நகர்ந்து வந்திருக்கிறது. இதனால் பாறைகள் நொறுங்கிய சத்தம் பல மைல் தூரம் கேட்டதாம். ஆடுமாடுகளும், விளை நிலங்களும் ஏராளமாக



அழிந்துவிட்டன. அதிகாரிகள் இதனைப் பார்வையிட்டு, இன்னும் அது நகரக் கூடுமெனத் தெரிந்து அங்குள்ளவர்களுக்கு எச்சரிக்கை செய்துள்ளார்களாம்.

## இரு கைகளால் எழுதுகிறாள்



இந்தப் பெண்ணைப் பாருங்கள். இவள் பெயர் டொரதி ஜே. நஸ்டாம் என்பது. இவள் இளம் வயதிலேயே இரு கைகளாலும் அழகாக எழுதக் கற்றுக் கொண்டாள். ஒருவர் பேசுவதை இருகைகளாலும் வெகு வேகமாய் எழுதுகிறாள். ஒரு கையால் ஒரு வரியை எழுதினால், மற்றொரு கையால் மற்றொரு வரியை எழுதி முடித்துவிடுகிறாள். இவளது மூளையும் வெகு சாமர்த்தியமாய் இரு கைகளுக்கும் ஓயாது வேலை தருகிறது. எனவே இவள் ஒருவரது பிரசங்கத்தை ஒரு எழுத்துவிடாமல் எழுதிவிடக் கூடுமாம்.

## நெருப்பு மீன்கள்

சமுத்திரத்தில் எத்தனையோ வகையான மீன்கள் இருக்கின்றன. அதில் நெருப்புமீன் என்பது ஒன்று. இந்த மீன் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் காலத்தில் இதன் அழகும் போக்கும் அதிக விசித்திரமாக இருக்கிறது. அப்போது இதன் நிறம் நெருப்புப்போல் தகதகவென மாறி ஜொலித்துக்கொண் டிருக்கும். குஞ்சுகள் பெரிதாக இதன் நெருப்பு நிறமும் மாறிக்கொண்டே வந்து கடைசியில் நீர் பூத்த நெருப்புபோல் சாம்பல் நிறமாக மாறிவிடுகிறது.

---

# விநோத நேசன்

**(தமிழ் ஹாஸ்ய மாதாந்திரச் சஞ்சிகை)**

பிரதி இங்கிலிஷ் மாதம் 5-ம் தேதி வெளிவரும்

**தனிப்பிரதி அணா 1. வருட சந்தா அணா 12.**

**"விநோத நேசன்" ஆபீஸ்,**
**திருவல்லிக்கேணி, சென்னை.**

# இலங்கையில் செங்குந்தர்கள் எப்போது குடியேறினர்?

(மா. அ. கனகசபை முதலியார்)

(சென்ற இதழ், 594-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு நிகழ்ந்த பிறகு, ஒரு நாள் அரசன் 'என் நண்பனாகிய இவன் என்னிடத்து வைத்துள்ள அன்பை எல்லா வகையிலும் காட்டியுள்ளான். நன்றியின் அளவறிந்து அதற்குத் தக நடப்போர் வெகு சிலரே என்றாலும் நான் இவனுக்குச் செய்ய வேண்டியவற்றைச் செய்து இப்போது என் கடனைத் தீர்த்துக்கொள்ளவேண்டும்' என்று எண்ணி, மந்திராலோசனை சபை கூட்டி 'இந்த என் நண்பனது வீரச் செயல்களனைத்தையும் நீங்களே நேரில் கண்டிருக்கிறீர்கள். முன் உதவி செய்தவனுக்குப் பின் உதவி செய்ய வேண்டியது மேலோர்களின் கடனாம் என்பதை யுன்னி, அவன் பயன் பெறக் கூடிய முறையில் உதவி செய்ய வேண்டியது இப்போது என்னுடைய கடனாகும்' என்று கூறினான். மந்திரிகள் எல்லோரும் 'மாட்சிமை தங்கிய மகாராஜாவின் விருப்பமே எங்களுடைய விருப்பம்' எனப் பதிலிறுத்தனர்.

அரசன், மானவம்மனுக்கு ஒரு சேனையைத் தந்து, அதற்குத் தேவையான எல்லாவற்றையும் உதவி, அவன் நாட்டிற்குச் சென்று இராஜ்யத்தைக் கைக்கொள்ளுமாறு உத்தரவிட்டான். மானவம்மன் சேனையோடு புறப்பட்டபோது அரசன் தன் சொந்த மகனை விட்டுப் பிரிவதுபோலவே ஆறாத் துயரங்கொண்டு அழுதான்.

மானவம்மன் சேனையோடு கப்பலேறிக் கடல் கடந்து இலங்கையடைந்து நாட்டைப் பற்ற ஆரம்பித்தான். இதைக் கேள்வியுற்ற **ததோபதிசன்** தலை நகரை விட்டோடிவிட்டான். மானவம்மன் நகரத்திற்குள் பிரவேசித்து அதையும் கைப்பற்றி மகுடம் சூட்டிக்கொள்ளாது ஒரு சிறு சேனையோடு ஓடிப்போன அரசனைப் பின் தொடர்ந்து சென்றான். ஆயினும் முற்றும் அவனைத் தொடர்ந்து செல்லவில்லை. ஏனெனில் அவன் தலை நகரில் விட்டுவிட்டுப் போன தமிழ்ப் படை வீரர்கள் 'மானவம்மன் கொடிய நோய்வாய்ப்பட்டான்' என்ற பொய் வதந்தியை நம்பி சிதறியோடிவிட்டனர். ததொபுதிசன் இச்செய்தியைக் கேட்டு ஒரு பெருஞ்சேனையைத் திரட்டி மானவம்மன் மீது போர் செய்யத் தொடங்கினான். மானவம்மன் தன்னோடிருந்த சிறு சேனையோடு பகைவனை எதிர்க்க அஞ்சி மறுபடியும் இந்தியாவிற்குச் சென்று தன் நண்பனை இன்னொரு முறை தன் ராஜ்யத்தைக் கைப்பற்றக் கூடிய ஒரு பெருஞ்சேனையைத் தருமாறு கேட்க வேண்டுமென்று தீர்மானித்து, காஞ்சீபுரத்திற்குப் போய் நரசிம்மவர்மனைக்கண்டு இரண்டாமுறை அவன் சேனையில் உத்தியோகம் பெற்று இலங்கையில் நான்கு அரசர்கள் மாறின அவ்வளவு காலம் வரையில் இருந்து வந்தான்.



நரசிம்மவர்மன் ஒருநாள் 'புகழையே பெரிதாக மதித்த இவன் தன்னுடைய இராஜ்ஜியத்தைப் பெறலாம்' என்ற எண்ணத்தோடு தன் வாழ்நாளின் பெரும்பாகத்தை எனக்காக உழைத்தே கழித்திருக்கிறான். சீக்கிரத்தில் இவன் கிழவனாய் விடுவான். அவன் கவலையுற்றிருப்பதைப் பார்த்துக்கொண்டு நான் எப்படிச் சுகமாய் அரசாட்சி செய்யக்கூடும். நிச்சயமாய் இம்முறை என்னுடைய சேனையை அனுப்பி இராஜ்ஜியத்தைப் பெறச் செய்வேன்' என்று எண்ணித் தன் சேனையைத் திரட்டி அதை யுத்தத்திற்குத் தகுதியாக்கி, மானவம்மனுக்கு வேண்டியவற்றை யெல்லாம் கொடுத்து, அச்சேனையோடு துறைமுகம் வரையில் தானும் சென்றான். அங்கு இதற்கெனவே அழகாக அலங்கரிக்கப் பெற்றிருந்த கப்பல்கள், பண்டங்கள் நிறையப்பெற்று வரிசை வரிசையாக மிகுந்த காம்பீர தோற்றமுடையனவாய் நின்றுகொண்டிருந்தன. துறையை (மகாபலிபுரம்) அணுகிய அரசன், தன் படைத்தலைவர்களைப் பார்த்து, எல்லோரும் கப்பலேறி மானவம்மனோடு போகவேண்டுமென்று உத்தரவிட்டான். ஆனால், அவர்கள் தங்கள் அரசனை விட்டுப்பிரிந்து அவ்வாறு செல்வதற்குச் சம்மத மில்லாதவர்களாகத் தோன்றினர்.

நரசிம்மவர்மன் ஆழ்ந்து யோசித்து ஒரு தந்திரம் செய்தான். தன்னுடைய படைத் தலைவர் காணாதபடி மறைவா யிருந்துகொண்டு தனக்குரிய எல்லாப் பரிவாரங்களையும், இராஜ சின்னங்களையும், தான் பூண்டிருந்த ஆபரணங்களையும் மானவம்மனுக்குக் கொடுத்து, அவனை இரகசியமாக தனக்குரிய **கொற்றமுரசோடு** கப்பலுக்கு அனுப்பினான். மானவம்மன் அரசன் ஆணைப்படியே கப்பலேறிக் **கொற்றமுரசை** முழக்கினான். படைவீரர் தங்களை அழைப்பது அரசனே என எண்ணி, அரசனைத் தனியேவிட்டு கப்பலேறினார்கள். மானவம்மன் சேனையோடும், போர்க் கருவிகளோடும் பிரயாணமானான். அம்மரக் கலங்களின் கூட்டமானது கடலில் மிதக்கும் ஒரு நகரத்தைப் போன்றிருந்தது. மானவம்மன் சில நாட்களில் இலங்கைக் கரையையடைந்து, சேனைகளை இளைப்பாற வைத்து யுத்தத்தை ஆரம்பித்து வடநாட்டை செயித்து, குடிகளை அடக்கிப் பிறகு வெல்லுதற்கரிய பெரும்படையோடு தலைநகரை நோக்கிச் சென்றான். **போத்தகுற்றன்** இதையறிந்து பெருஞ்சேனையோடு வந்து எதிர்த்தான். இரு சேனைகளும் கரைபுரண்டு வரும் இரு பெருங் கடல்களேபோன்று கைகலந்து போராடின. மானவம்மன் கவசமணிந்து யானைமீதேறித் தன் வீரர்களை நடத்தி, **போத்தகுற்றனும்** அரசனாகிய **ஹத்ததத்தனும்** செலுத்திவந்த சேனைகளைப் பிளந்து சின்னாபின்னமாக்கி எல்லாப் பக்கங்களிலும் சிதறியோடச் செய்தான். அரசன் போர்க்களத்தினின்றும் புறமுதுகு காட்டி யோடுகையில் சில நாட்டுமக்கள் அவனைப் பிடித்து சிரச்சேதம் செய்து மானவம்மனிடம் கொண்டுவந்து கொடுத்தனர்.

மானவம்மன் தன் குடைநிழலில் மன்னுயிரனைத்தையும் தன்னுயிர்போல் காத்துவந்தான். அளவிறந்த நன்மைகளைச் செய்தான்.

(தொடரும்)

# விகடத் துணுக்குகள்

பாபஞ் செய்தவர்:—ஓய் சித்திரகுப்தரே! நான் சிவத்தொண்டு செய்ததாக கணக்கு ஒப்புவித்தாயே. எப்பொழுது செய்தேன்?

சித்திரகுப்தர்:—நீர் ஒரு தடவை வெற்றிலைப் பாக்குப் போட்டுக் கொண்டபொழுது உமது கையிலிருந்த மிகுந்த சுண்ணும்பை ஒரு சிவன் கோவில் மதிலில் தடவினீர்; அதனுல் அங்கே இருந்த சிறு துவாரம் அடைபட்டு விட்டது. அந்த சிவத்தொண்டுதான்.

—T. E. G. கோதண்டபாணி, கோடவாசல்.

* * *

நீதிபதி:—உனக்கென்ன வயது?

சாட்சி:—இருபத்தைந்து.

நீதிபதி:—உண்மையைச் சொல். போன வருஷத்தில்கூட இதே வயதுதான் சொன்னுய்.

சாட்சி:—ஆமாம். நான் ஒரு தடவை சொன்ன உண்மையை மாற்றி வேறு பொய் சொல்லுகிற வழக்கம் என்னிடம் கிடையாதுங்கோ.

—K. காசி, புதுவை.

* * *

தந்தை:—(பள்ளியினின்று திரும்பிய தன் மகனைப் பார்த்து) ஏண்டா இவ்வளவு சேரங்கழித்து வருகிருய்?

மகன்:—ஒரு கிழவி ஒரு அணுவைத் தொலைத்து விட்டாள்.

தந்தை:—அவள் தொலைத்தால் உனக்கு ஏன் நேரமாயிற்று?

மகன்:—அவள் போகும்வரையில் அதன்மீது நான் காலை வைத்திருந்தேன்.

—A. தம்பிரான், திருவத்திபுரம்.

* * *

டாக்டர்:—என்ன ஐயா! உடம்பு கொஞ்சம் குணமாகி யிருப்பதுபோல் தோன்றுகிறது.

நோயாளி:—ஆம், மருந்து புட்டியின்மேல் எழுதி யிருந்தபடியே செய்தேன்.

டாக்டர்:—எதோ மருந்து புட்டியைக் காட்டும். அதில் நான் என்ன எழுதி யிருந்தேன்?

நோயாளி:—அதோ இருக்கிறது பாரும். 'புட்டியை இறுக மூடிக் குளிர்ந்த இடத்தில் வை' என்றுதான் எழுதியிருக்கிறது.

புட்டியில் மருந்து சிறிதும் செலவாகாமல் இருந்ததைப் பார்த்து டாக்டர் வந்தவழியே திரும்பிவிட்டார்.

—எஸ். எஸ். கந்தையா, கரவெட்டி.



பழைய வேலைக்காரன்:—இப்போ ரெண்டு நாளா வேலை யில்லாமல் பட்டினிங்கோ. தங்களையே தஞ்சமாக வந்திருக்கேன். ஏதாவது உதவி செய்யனும், சாமி.

எஜமானன்:—நல்ல சமயத்தில் வந்தாய். இந்த விறகைப் பிளக்க நானும் ஒரு ஆளைப் பார்த்துக்கொண் டிருக்கிறேன்.

ப. வேலைக்காரன்:—அந்த ஆள் எங்கிருக்கிருன் சொல்லுங்க. இதோ போய்க் கூட்டிக்கொண்டு வருகிறேன்.

—போ. சிவராமலிங்கம், காரவை.

* * *

பையன்:—என்ன அப்பா! கல்லைக் குத்தினுல் கைக்கு நோகுமா? கல்லுக்கு நோகுமா?

தகப்பன்:—சந்தேக மென்னடா? கைக்குதான் நோகும்.

பையன்:—போங்க அப்பா. நேற்று என்னை அடித்தீர்களே. அப்போது உங்கள் கைக்கு நொந்ததா?

—T. E. கோவிந்தராஜன், புதூர்.

* * *

மனைவி:—(ஜுரமாக இருக்கும் தன் கணவனைப் பார்த்து) இந்தப் பழங்களைக் கொஞ்சம் சாப்பிடுங்கள்.

கணவன்:—எனக்கு ஒன்றும் பிடிக்கவில்லை. என்னைத் தொந்தரவு செய்யாதே.

பையன்:—ஏனம்மா! அப்பாதான் பிடிக்கவில்லை என்கிருர்களே. ஏன் அவரைக் கஷ்டப்படுத்துகிருய்? என்னைக் கொஞ்சம் தொந்தரவு செய். நான் கஷ்டப்படவில்லை.

—A. K. குப்புசாமி முதலியார், தே. புதுப்பாளையம்.

* * *

வெள்ளையன்:—பெண்களுக்குக் கொஞ்சங்கூட சுதந்திரம் தராமல் அடிமைப்படுத்தி வைத்திருக்கும் தேசம் இந்தியா ஒன்றுதான்.

இந்தியன்:—அப்படி உளருதேயும். ஆண்களைவிட பெண்களுக்கே நாங்கள் அதிக சுதந்திரம் கொடுத்திருக்கிறேம். ஆண்கள் தரிப்பது நான்கு முழமுண்டு. பெண்கள் தரிப்பதோ பதினறு முழம் சேலை. இந்த மாதிரி நான்கு மடங்கு அதிகமான சுதந்திரம் பெண்களுக்கு வேறு எந்த நாட்டில் கொடுத்திருக்கிருர்கள்?

—*C. M. தேவன், சென்னை.

---

* பரிசுபெற்ற விகடம் அனுப்பியவர் விலாசம்:—

3-176, அய்யப்ப முதலி வீதி, சென்னை.

குப்பன் :—என்னப்பா! பந்தலில் கீற்றுங் கழியுமாமே!

சுப்பன் :—ஈரமுங் காற்றும் இருந்தால் கழியாதா?

—ச. நா. குமரகுரு, கல்லாலம்பூண்டி.

* * *

போக்கிரி :—நண்பா! நான் இறந்த பிறகு என் சமாதியின்மீது சுவர்க்க லோகத்தில் அமைதியா யிருப்பதாக எழுதி வையுங்கள்.

நண்பன் :—அப்படி எழுதுவது சரியல்ல. இந்த ஊர் தாங்கள் இறந்த பிறகு அமைதியா யிருப்பதாக எழுதிவைக்கிறோம்.

—S. G. கதிர்வேல், ஆரணி.

* * *

டாக்டர் :—பையா! உனக்குத் தலைவலி அடிக்கடி வருவதுண்டா?

பையன் :—ஆமாம். தினந்தோறும் பாடசாலையில் இங்லீஷ் பாடம் நடக்கத் தொடங்கினால் தலைவலிதான். உடனே படுத்துக் கொள்வேன். —N. கிருஷ்ணசாமி, கடலாடி.

* * *

ஒருவன் :—ஏன் ஐயா! உமது மனைவிக்கு ஆயிரம் ரூபா கிடைத்தால் நீர் என்ன செய்வீர்?

மற்றவன் :—உடனே அவள் சொல்படி சிறிதும் பிசகாமல் நடப்பதாக அவளிடம் உறுதி கூறுவேன்.

—R. வீரபத்திரன், காஞ்சிபுரம்.

* * *

தனவந்தர் :—ஜோஸ்யரே! நம் குழந்தையின் ஜாதகம் எழுதி முடித்து விட்டீரா!

ஜோஸ்யர் :—இரண்டு கிரகம் போராததா யிருக்கிறது. கொஞ்சம் நிதானித்துப் பார்க்கவேண்டும்.

தனவந்தர் :—போராம லிருந்தால் நிறைய சேர்த்து எழுதுங்கள். அதன் கிரயம் எவ்வளவு ஆனாலும் கொடுத்துவிடுகிறேன்.

—வை. கோ. இளையபெருமாள், ஆரணி.

* * *

வியாபாரி :—செட்டியாரே! 50 ரூபா கடன் வேண்டும்.

செவிட்டுச் செட்டியார் :—எனக்கு இடது காது செவிடு. வலது காதில் வந்து சொல்லுங்கள்.

வியாபாரி :—(கொஞ்சம் அதிகமாகக் கேட்க நினைத்து வலது பக்கம் வந்து) 500 ரூபா கடன் வேண்டும்.

செ. செட்டியார் :—தயவு செய்து 50 ரூபா பக்கமே வந்து விடுங்கள். —A. R. சுந்தரம், கல்கத்தா.



முதலாளி :—இரண்டு தபால் கார்டு வாங்கிவரச் சொன்னேனே எங்கே அவைகளைக் காணோம்.

வேலைக்காரன் :—அவைகளை வாங்கித் தபாலில் போட்டு விட்டேன்.

முதலாளி :—அடே கழுதை! ஏண்டா அப்படிச் செய்தாய்?

வேலைக்காரன் :—திரும்பவும் என்னைத்தானே தபாலில் போடுவதற்கு ஓடச் சொல்வீர்களென்று நினைத்து நீங்கள் சொல்லாமலே செய்துவிடுவோமென்று போட்டு வந்தேன்.

—அ. தர்மலிங்கம், சங்கரன்கோவில்.

* * *

உபாத்தியாயர் :—பிள்ளைகளே! கவனமாகக் கேளுங்கள், கழித்தல் கணக்குகளிலே இரு எண்களும் ஒரே இனமாக இருக்கவேண்டும். உதாரணமாக, 4 பேனாக்களில் 3 பென்சில்களை எடுக்க முடியாது; 10 புஸ்தகங்களில் 6 சிலேட்டுகளை எடுக்கமுடியாது. ஆனால் 4 பேனாக்களில் 3 பேனாக்களையும், 10 புஸ்தகங்களில் 6 புஸ்தகங்களையும் எடுக்க முடியும். அப்படியே மற்றவை. விளங்கினதா?

எல்லோரும் விளங்கினதுபோலக் காணப்பட்டனர். ஆனால்,

ஒரு பையன் :—சார்! 5 பசுக்களிலிருந்து 3 படி பால் எடுக்க முடியாதா!! T. வேலுப் பிள்ளை, கொளும்பு.


ஸ்ரீ லலிதா நவரத்தினம்
என்னும்
**மனையடி சாஸ்திரம்**

சௌக்கியமாகவும் சம்மதத்துடனும் வாழ விரும்புவோர் வீடு, குளம், கிணறு, தோட்டம் முதலியவைகளை சாஸ்திரப்படி ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். தமிழில் எளிய வசன நடையில் எழுதப்பட்டது.

1-ம் பாகம் விலை ரூ 1-0-0 ஷை 2-ம் பாகம் அணா 8.
குளம் கிணறு வெட்ட ஜலாசய நிர்மாண சாஸ்திரம் அணா 8.
விருக்ஷாதி சம்ரக்ஷணை சாஸ்திரம் தீபிகை அணா. 8.
கோசம்ரக்ஷணை சாஸ்திரம் விலை ரூபா. 1.
ஐந்து புஸ்தகம் சேர்த்து வாங்குபவர்களுக்கு தபால் சார்ஜ் உள்பட விலை. ரூ 3—8—0

ஆர். கோபாலய்யர்,
புலிவலம், விஜயபுரம் போஸ்ட்
தஞ்சாவூர் ஜில்லா.

# ஏகாதசி விரதம்
# சைவர்களுக்கும் உரியதே!

(வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள், கண்டாச்சிபுரம்)

ஏகாதசி யென்பது மிகவும் உத்தமமான புண்ணிய காலம். இதைப் போற்றாத புராணங்க ளில்லை. துதிக்காத தர்மநூ லில்லை. இது மாதங்களிற் றலைசிறந்ததாய்க் கருதப்படும் மார்கழி மாதத்தில், சுக்கில பக்க ஏகாதசி திதியில், பெரும்பான்மையும் வைதிக வைணவ சகோதரர்களாலும், சிறுபான்மை நமது சைவ நன்மக்களாலும் அனுஷ்டிக்கப்படுகின்றது. இதனை "வைகுண்ட ஏகாதசி" என்றும் கூறுவதுண்டு. வருஷத்தில் இருபத்தைந்து ஏகாதசி விரதங்களுள வென்றும், இவ்விருபத்தைந்தினையு மனுஷ்டிக்கப் பல வேறுபட்ட முறைகளு மனுஷ்டானங்களும் காரணங்களு மிருக்கின்றன வென்றும், இவ்வகையாக விரதாதிகளை யனுஷ்டித்துப் பேறுபெற்றோர் பலருளரென்றும், இது தமது சமயத்தவர்களுக்கே மிக வுரிமை யுடையதென்றும், இத் திதிகளில் உபவாஸமிருந்து அச்சுதனை யன்புடனருச்சிப்போர் வைகுண்டஞ் செல்வர் என்றும் வைணவ சகோதரர்கள் கூறுகின்றனர். ஆனால், நன்கு ஆராயுமிடத்து இவ் வேகாதசி விரதம் சைவ வைணவ சமயத்தார்களாகிய இருபாலார்க்குமே சம வுரிமை யுடையதென்பதும், பேதாபேதமின்றி இதனை இவர்க ளனுஷ்டிக்கக் கடமைப்பட்டவர்க ளென்பதும் நன்கு புலனாகும்.

திருப்பாற்கடலில் தோன்றிய ஆலகால விஷத்தை சிவபெருமான் உண்டருளி ஓர் திருவிளையாடல் செய்யக் கருதி, ஒரு க்ஷணப் பொழுது ஒன்றுங் கூறாராய், உமா தேவியார் தம்மை யுபசரிக்கும்படி மௌனமாய்ச் சயனித்திருந்தனர். அது கண்ட சுரர்கள் பெருமானுக் காபத்து நேர்ந்ததென்று கருதி திருவருளை நாடி, அப்பெருமானையே வியந்து வந்தனை செய்து வழிபா டாற்றினர். அத் திதியை யான்றோர்கள் "ஏகாதசி" என்பர். அற்றைய நாள் முற்று முணவில்லாது, அன்றிரவெல்லாம் நித்திரையின்றி விழித்திருந்து பெருமானைப் பூஜித்து, மறுநாளாகிய "துவாதசியிற்" பண்ணவர்கள் பாரணஞ் செய்தனர். இதுவே சைவர்களாலும் வைணவர்களாலும் "ஏகாதசி" விரதம் எனச் சிறப்புடன் கொண்டாடப்படுகின்றது. சிவபெருமான் ஏகாதசியில் விஷமுண்டன ரென்பதனை,

"பொங்குங்கங் காதரன்கா ளம்மயின்றே யொன்றும்
புகலாம லிருந்தனனோர் கணப்பொழுது புலவோர்
அங்கவனை யிடைவிடாத ருச்சனைமுன் புரிந்த
அத்திதி "யேகாதசியாம்."



என்று கூறும் ஆகமத் திரட்டுச் செய்யுளா னறிக. ஸ்ரீ சிவபெருமானுக்கு முதலடியாரும் மும்மூர்த்திகளி லொருவருமாகிய திருமாலானவர், முதன்முதலாக, அவ்வேகாதசி திதியில் அன்ன ஆகார நித்திரையின்றி, அரனை நோக்கி விரத மனுஷ்டித்துத் துவாதசியிற் பாரணஞ் செய்தமையால், அப்பெருமானைப் பின்பற்றி, அவரது அடியார்களாகிய வைணவர்கள் இவ்வேகாதசி விரதத்தை விதிப்படி யனுஷ்டிக்கலாயினர். இதுவே நமது வைணவ சகோதரர்களுக்கு இவ்வேகாதசி" விரத முரித்தான வரலாறு. இக்காலத்து சமநோக்குடைய பல சைவர்கள் இவ்விரத மனுஷ்டித்தல் கண்கூடு. இவ்விரத மனுஷ்டிப்போர் தசமியிலும், துவாதசியிலும் ஒரு வேளை போஜனம்தான் உண்ணுதல் வேண்டும். ஏகாதசியில் அதிகாலையி லெழுந்து பிராதஸ்னானம் செய்தல் வேண்டும். நித்திய கர்மானுஷ்டானங்களை முறைப்படி விதி வழுவாது நன்கியற்றல் வேண்டும்.

சைவ சமய சீரியர்களே! சிவபெருமான் ஆலகால விஷத்தை யுண்டு, தேவர்களையு மசுரர்களையுங் காத்தருளினமையை யுணர்ந்து புனித மிகுந்த "இவ்வேகாதசி விரதத்தை" சிவனுந் திருமாலு முவக்கும் வண்ணம் விதிப்படி யனுஷ்டித்து இஷ்டகாமிய சித்தியடைந்து, முடிவில் நிரதிசயானந்த முத்திப் பேறாகிய மோக்ஷத்தை யடைய முன்வருவீர்களாக! இதற்கு நம் எல்லாம்வல்ல சிவபெருமான் றிருவருள் துணைபுரிவதாக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

**வஸந்த விகடன்**
(ஓர் உயர்தர ஹாஸ்ய மாதப் பத்திரிகை)
உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கட்டுரைகள், கதைகள், படங்கள் அடங்கியதோர் மாதப் பத்திரிகை. சந்தா ரூ. 1. தனிப்பிரதி அணா 1½. ஒவ்வொரு ஆங்கிலமீ 20-ந் தேதி வெளிவரும்.
ஏஜண்டு இல்லாத ஊர்களுக்குத் திறமை வாய்ந்த ஏஜண்டுகள் தேவை. நிபந்தனைக்கு உடனே எழுதுக.
மானேஜர், 'வஸந்த விகடன்' ஆபீஸ், மதுரை.

சுருக்கமா யில்லாத கிளைச்சங்க அறிக்கைகள் இனி கண்டிப்பாய் பிரசுரிக்கப்பட மாட்டாதென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். (ப-ர்.)

# செங்குந்த யாத்திரைவாசி

(சென்ற இதழ், 597-ம் பக்கத் தொடர்ச்சி)

நேயர்களே! யான் இதுவரையில் கூறியதிலிருந்து யோக்கியதையுள்ளவர்களை மாத்திரமே குருமார்களாக நியமிக்க வேண்டியது நம்முடைய கடமை என்று நன்கு விளங்குகிறதல்லவா? அவ்வாறு நியமிப்பதிலும் நம்மினத்தவரல்லாதவரை நியமித்தல் கூடவே கூடாது. பிற இனத்தைச் சேர்ந்த குருமார்களுக்குச் சீடர்களாயிருப்பதினாலேயே நம்மைத் தாழ்ந்தவர்களாக எண்ணுகிறார்கள். இதை நிரூபிக்கக் கூடிய உதாரணங்கள் பலவிருக்கின்றன. சில ஆண்டுகளுக்கு முன் வேறு இனத்தவரைக் குருவாகக் கொண்டிருந்த சிதம்பரத்துச் செங்குந்தர் பட்டபாட்டைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அது ஒன்றே போதிய சான்றாகும். வேளாளர், தேவாங்கர், விஸ்வகர்மர் முதலிய பல சகோதர இனத்தவர்கள் தம்மினத்தவரையே குருமார்களாக் கொண்டிருக்கிறார்கள். நம்மவர்களுள் குருமார்கள் இல்லையா என்று நீங்கள் கேட்கலாம். ஆம், அநேகர் இருக்கிறார்கள். அவர்களுள் பெரும்பாலோர் செங்குந்தர்கள் என்று இப்போது சொல்லிக்கொண்டாலும், சில ஆண்டுகளுக்குப் பின்னர் தங்களை வேறு இனத்தவரென்று சொல்லிக் கொள்ளக்கூடிய மாதிரியில் இப்போது நடந்து வருகிறார்கள். உறவினராயும் பரம்பரையாய் சைவாச்சாரமுடையவர்களாயுமுள்ளவர்கள் வீட்டில்கூட அவர்கள் சாப்பிடுவது கிடையாது. தாங்கள் ஆச்சார்யாபிஷேகம் பெற்றவர்களாகையால் சாமான்யர் வீட்டில் சாப்பிடக்கூடாது என்கிற சாக்கைச் சொல்லுகிறார்கள். இஃதுண்மையாயின் இவர்கள் சொல்லும் ஆச்சார்யாபிஷேகமே இன்னதென்று அறியாத ஸ்மார்த்த பிராமணர் ஹோட்டல்களில் பலர் பார்க்கும்படி இவர்கள் சாப்பிடலாமா? ஆச்சாரமுடையவர்கள் அவ்வாச்சாரமில்லாதவர்கள் வீட்டில் சாப்பிட மறுப்பது நியாயந்தான். தங்களைப்போன்றே ஆச்சார முடையவர்களிடத்தில் மாத்திரம் சாப்பிடுவோம் என்ற கொள்கையினை குருமார்கள் மேற்கொள்வார்களானால், ஆச்சாரமில்லாத சீடர்களும் ஆச்சாரத்தைக் கைக்கொள்வதற்கு இது ஒரு தூண்டுதலாயிருக்கும் அல்லவா? இதை விட்டுத் தங்களைப்போல் ஆச்சார்யர்களாயிருக்கிற குடும்பங்களுக்குள்ளாகவே (முறை இருக்கிறதோ இல்லையோ) பெண் கொடுத்தல் வாங்கல் செய்துகொள்ளக் கூடிய வரையில் இவர்கள் முயன்று வருகிறார்கள். முடியாத சமயங்களில் மற்றச் செங்குந்த குடும்பங்களில் சம்பந்தம் செய்கிறார்கள். ஆனால், இப்படிச் செய்யப்படும் சம்பந்தத்தைப்போல் பெண்களைக் கொடுமைப்படுத்தும் செயல், வேறில்லை எனக் கூறலாம். ஏனெனில் இவர்கள் வீட்டிற்கு வந்த பெண் மறுபடியும் தாய் வீட்டில் உண்ணலாகாது. இவர்கள் வீட்டுப் பெண் திருமணமான பிறகு இவர்கள் வீட்டுச் சமயலறையில் அதாவது தான் பிறந்த வீட்டுச் சமயலறையில்



நுழையலாகாது. இந்த நிபந்தனை அந்தப் பெண்களின் மனதை எவ்வளவு தூரம் வருந்தச் செய்யும் என்பதை யோசித்துப் பாருங்கள்.

இப்போதே ஏறக்குறைய தனி சமூகத்தவரைப்போல நடித்து வரும் இவர்களுக்குக் கொள்ளவும் கொடுக்கவும் போதிய குடும்பங்கள் ஏற்படுமானால் தங்களை ஒரு தனிச் சமூகத்தவர் என்று ஏன் சொல்லிக்கொள்ள மாட்டார்கள்? இவ்வாறே ஒரு காலத்தில் செங்குந்தர்களாயிருந்த அநேக ஆச்சார்ய குடும்பத்தவர் வேறினத்தவராக மாறியிருக்கின்றனர். இக்கூட்டத்தவர் செங்குந்தர்களைத் தந்திரமாக ஏமாற்றி வருகிறவிதம் முதலியவற்றைச் சொல்லப்புகின் பெருகும். இவ்வளவிற்கும் காரணம் நாமே, இல்லை நம் அசிரத்தையும் நம் அறியாமையுமே என்பது மிகையாகாது. எவ்வெவற்றை எவ்வெப்போது எப்படி எப்படி காலத்திற்கேற்பத் திருத்தியமைக்க வேண்டுமோ அவ்வவற்றை அவ்வப்போது அப்படி அப்படி திருத்தி அமைத்தல் நம்முடைய முக்கிய கடனாகும். சமயத்தில் கவனியாதிருந்துவிட்டுப் பின்னர் வருந்திப் பழைய கதைகளைச் சொல்லிக் காலங்கழிப்பது நம்மவர்கள் வழக்கமாயிருந்துவருகிறது. இத்தகைய அஜாக்கிரதையால் நம் சமூகம் இதுவரையில் இழந்துவிட்ட கோயில்களும், மடங்களும், சுதந்திரங்களும் எண்ணில.

சைவ சமயிகள் மிகப் பிரதானமாகக் கொண்டுள்ள ஒரு கோயிலில் பண்டைக்காலந் தொட்டு நம்மவர்கள் நடத்திவரும் ஒரு அபிஷேகக் கட்டளையானது தற்போது ஆதரவை இழந்து வருவதாகத் தெரிகிறது. அது உண்மையாயின் நமது சமூகத்திற்கு ஒரு பெரும் அபகீர்த்தியை விளைவிக்கும் என்பதில் ஐயமில்லை. மேற்கூறியவற்றால் சகோதரர்களே! நாம் சகல துறைகளிலும் காலத்திற் கேற்றவாறு சீர்திருத்தம் செய்யவேண்டியது மிகமிக அவசியமெனத் தோன்றவில்லையா!

ஆகவே நம்குல குருமார்கள் மேலே கூறியபடி கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கங்களில் மேம்பட்டவர்களாயும், நம்மோடு உண்டு உடுத்து, கொண்டு கொடுத்து வாழ்பவர்களாயும், சமூக சீர்திருத்தத்திலும், நன்மையிலும் அக்கரை யுள்ளவர்களாயும் இருத்தல் இன்றியமையாததாகும். அவர்களும் பரம்பரையாய் வரவேண்டுமென்ற நிபந்தனையுங் கூடாது. அதிகங் கூறுவானேன்! நம்முடைய பெருமை சிறுமைகளைத் தமது பெருமை சிறுமைகளாக மதிக்கும் நம்மில் ஒருவராகிய குருவே நமது நன்மையைக் கோரமுடியும். தம்மை நம்மின் வேறாக எண்ணியிருப்போர் எவ்வாறு நமது நன்மையைக் கோர இயலும்! இப்பெரிய சீர்திருத்தத்தை ஒரு சிறு கிராமத்தாராகிய நாங்கள் செய்ய இயலுமா என்று கேட்கலாம். ஆம் இயலாதுதான். சமூகத் தலைவர்கள் ஒன்றுகூடி ஆலோசித்துக் கூர்ந்த அறிவுடைய இளைஞர்களைப் பொறுக்கி எடுத்து அவர்களைத் தமிழ், சமஸ்கிருதம், தற்காலத்திற் கேற்ப ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும், ஒழுக்கத்திலும், சமயத்திலும் நன்கு பயில்வித்து, அவர்களைக்

கொண்டு ஆங்காங்குள்ள செங்குந்தர்களுக்கு சமய தீக்ஷை, திருமணம் முதலிய சடங்குகள் செய்விக்குமாறு தக்க முறையில் ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

செங்குந்தர்கள் நன்மைக்கெனவே ஏற்படுத்தப்பெற்றுள்ள தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார் இவ்விஷயத்தில் முனைந்து வேலை செய்வார்களாயின் இது வெகு சுலபத்தில் அநுஷ்டானத்திற்கு வரக்கூடுமென எண்ணுகிறேன். நம் சமூகத் தலைவர்கள் ஒன்றுகூடும் மகாநாடுகளிலும் இதைப்பற்றி யோசித்து முடிவு கட்டுவதும் மிகப் பொருத்தமானதாகும். மேற்கூறிய முறையில் கற்கும் இளைஞர்களுக்குத் தலைச்சங்கமும், செங்குந்தர் கல்விநிதிச் சபையும் உதவி செய்யக் கடமைப்பட்டுள்ளன.' என்று சொல்லி முடித்தேன்.

வாசகர்களே! மேற்கூறியவை அனைத்தும் விண்ணகர்ச் செங்குந்தர் தெருத்திண்ணை மகாநாட்டில் யான் வெளிப்படுத்திய என்னுடைய சொந்த அபிப்பிராயங்களாகும். எனக்குச் சரியெனத் தோன்றியவற்றைக் கூறினேன். இதற்குத் தலைச்சங்கமோ, மித்திரன் ஆசிரியரோ பொறுப்பாளிகள் அல்லர். இதைப் பொறுத்த மட்டில் அவர்கள் அபிப்பிராயம் இன்னதென்பதையும் யான் அறியேன். இதைக்கண்ட குருமார்களுக்கும், அவர்களிடத்து அபிமானம் வைத்துள்ள சீடர்களுக்கும் ஒருசமயம் மனத்தாங்கல் ஏற்படவும் கூடும். குற்ற மிருப்பின் அடியேனை மன்னிப்பார்களாக. விண்ணகர் தெருத்திண்ணை மகாநாட்டில் வெளியிட்ட என் அபிப்பிராயத்தை இன்று மித்திரன் மூலம் சகோதரர்கள் ஆலோசனைக்கு விடுகிறேன். பிடித்தமா யிருப்பின் அடுத்த மகாநாட்டின் ஆலோசனைக்குக் கொண்டு வருமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திண்ணை மகாநாடு இரவு 11 மணிக்குக் கலைந்தது. மறுநாட் காலையில் அவ்வூர் இளைஞர்களையும் மாலையில் வயோதிகர்களையும் தனித் தனியே சந்தித்துப் பேசினேன். ஒற்றுமை யுற்றார்கள். மறுநாள் விண்ணகரை விட்டுப் புறப்பட்டு அன்று இரவு சுமார் $11\frac{1}{2}$ மணிக்கு மண்ணகரம் சேர்ந்தேன். செங்குந்தர் தெருவிற் புகுந்தேன். ஒரே வெளிச்சமா யிருக்கிறது. பாய்களிலும், தடுக்குகளிலும், தரையிலுமாக ஆண்களும், பெண்களும் தெரு நிறைய அமர்ந்திருக்கிறார்கள். வெளியில் பலர் நின்றுகொண்டும் இருக்கிறார்கள். பெட்ரோமாக்ஸ் லைட்டுகள் எரிகின்றன. போவதற்கும் வழியில்லை. சிவசின்னங்கள் அணிந்திருந்த ஒரு பெரியார் சிவனடியாரைத் தேடிக்கொண்டு தெருவே போகிறார். உங்களுக்கு விளங்கிற்றா? தெருக் கூத்து. சிறுத்தொண்டர் நாடகம். நாலைந்து வீடுகளுக்கப்புறம் வேறொரு நாடகம் நடக்கிறது. (தொடரும்.)

# கதம்ப விநியோகம்

அமெரிக்கக் குடியரசுத் தலைவராகிய ரூஸ்வெல்ட் ஒரு சினிமாப் படக்காட்சியில் முக்கியமான ஆக்டராக நடிக்கப் போகிறாராம்.

---

ஆகஸ்டு மாதத்தில் எடுத்த கணக்குப்படி இதாலியின் ஜனத்தொகை 4,26,94,000 பேர்கள்.

---

எல்லாவற்றையும்விடப் பெரிய எரிமலை காவாயில், சிலாயா என்ற விடத்தில் இருக்கிறது. அதன் வாயின் குறுக்களவு 3 மைல்.

---

ஜெர்மனியில் மட்டும் முப்பத்தையாயிரம் கபோதிகள் இருக்கிறார்கள். அதாவது 1700 ஜெர்மானியர்களுக்கு ஒரு ஜெர்மானியன் வீதம் குருடாக இருக்கிறான்.

---

பைகாரா மின்சார திட்டத்தினால் சென்ற வருஷம் எழுபத்தாறாயிர ரூபாய் வருமானம் கிடைக்குமென எதிர்பார்த்ததற்குப் பதிலாக ஒருலக்ஷத்து முப்பத்தையாயிர ரூபாய் கிடைத்திருக்கிறது. 6,534,000 யூனிட் எதிர் பார்த்ததற்கு 9,669,203 யூனிட் மின்சாரம் செலவாகி இருக்கிறது.

---

வெட்டுக்கிளிகளின் கால்களைக்கொண்டு செய்த மாலையை சாலமன் தீவிலுள்ள சுதேசிகள் காதலுக்கு அறிகுறியாக அணிகின்றனர்.

---

ரோமாபுரியில் போப்புக்குச் சொந்தமான ஒரு புத்தகசாலையில் ஒரு பெரிய பைபில் புத்தகம் இருக்கிறது. அதன் நிறை சுமார் $\frac{1}{2}$ டன் இருக்கிறது. ஆனால் ஆக்ஸ்போர்ட் புத்தகசாலையில் உலகிலேயே மிகச் சிறியதாகிய பைபில் இருக்கிறது. அதனை ஒரு பொடிடப்பிக்குள் வைத்து மூடக்கூடுமாம்.

---

பழங்களைச் சாப்பிடுவதைவிட, அவற்றின் ரசத்தை உடம்பில் தேய்த்து உடம்பிலுள்ள துவாரத்தின் வழியாக தேகத்திற்குள் செலுத்துவதால் அதிக பலன் ஏற்படுகிறதாம். எலுமிச்சம் பழச்சாறு தேகத்தில் இறங்குவதால் பல நோய்கள் குணமாவதோடு சரீரத்தில் மினுமினுப்பும் உண்டாகுமாம்.

---

பிரிட்டனில் சென்ற வருஷத்தில் மட்டும் ஏறக்குறைய 500 சினிமாப் படங்களைக் காட்டக் கூடாதென சர்க்கார் தடை செய்திருக்கிறார்கள்.

---

கிருஸ்தவ வேதமாகிய பைபிலில் 1189 அத்தியாயங்களும், 31,173 சுலோகங்களும், 7,73,693 வார்த்தைகளும், 35,66,480 எழுத்துக்களும் இருக்கின்றனவாம்.

---

ரஷ்யாவில் தலை மயிரைக் கொண்டு ஒரு வகையான செருப்புகளைத் தைக்க முயற்சி செய்யப்படுகிறதாம்.

---

12 ரூபாய் விலையில் விற்கக்கூடிய ஜப்பான் சைகில்கள் கிழக் காப்பிரிக்காவில் ஏராளமாய் இறக்குமதி செய்யப்படுவதைக் கண்டு பிரிட்டிஷ் வர்த்தகர்கள் திகைப்படைகிறார்களாம்.

---

சென்னை மாகாணத்தில் இன்னும் 17 முனிசிபாலிடிகளுக்கு கமிஷனர்கள் நியமிக்கப்படவேண்டி யிருக்கிறதாம். இவற்றிற்கெல்லாம் விரைவில் கமிஷனர்கள் நியமிக்கப்படுவார்களாம்.

---

திருவாங்கூர் சமஸ்தான வருமானம் வருடமொன்றுக்கு 2½ கோடி ரூபாய்.


## தெய்வீக ஜோதிஷம்

உங்கள் ஜனன கால விவரம் அல்லது ஜாதக நகல் ஏதாவதொன்றை குறிப்பிடவும்; அல்லது கடிதம் எழுதும்போதுள்ள நேரமும், சுமார் வயதும் தெரிவித்தால் எதிர்காலத்தில் நடைபெறப்போகும் பலன்களை சாஸ்திரீயமாக எழுதி அனுப்புகிறோம்.

| | | |
|---|---|---|
| ஒரு வருஷம் மாதவாரி பலன் எழுத | ... ரூ. | 2-0-0 |
| 5-வருஷங்களுக்கு மாதவாரி | ... ரூ. | 7-8-0 |
| ஒரு வருஷம் வாராந்திர பலன் | ... ரூ. | 10-0-0 |
| எதிர்கால சம்பந்தமான 5-கேள்விகளுக்கு பதில் எழுத | ... ரூ. | 1-0-0 |
| மேல் ஒவ்வொரு கேள்விக்கும் | ... ரூ. | 0-4-0 |
| வி. பி. செலவு | ... ரூ. | 0-4-0 |

சென்னை ஆந்திர பத்திரிகை எழுதுவதாவது :—"இவரது ஜோதிஷத் திறமையை நாம் மனப்பூர்வமாக விஞ்ஞாபனம் செய்துகொள்ளுகிறோம்."

சென்னை சுதேசமித்திரனில் ஸ்ரீமான் மணி எழுதுவது:—"எதிர்காலத்தை அறிந்து சொன்ன இந்த ஜோதிஷருக்கு வந்தனம் செலுத்தவேண்டும்."

வெளி நாடுகளுக்கு முன் பணம் அனுப்பிப் பெறவும்.

ஹனுமத் உபாசி வி. கே. சடகோபாச்சாரியார்

ஹனுமான் ஜோதிஷ ஆபீஸ், திருத்தணி, S. இந்தியா.


# வர்த்தமானம்

## சென்னை மார்க்கட்டு நிலவரம்

16—11—34

### நூல் திநுசுகள்

| நெ. | ராத்தல் | நூல் ரகம் | விலை |
|---|---|---|---|
| 40 | 5 | டாக்கிரி | ரூ. 3- 9-0 |
| ,, | 5 | சலவை எனிடிக்கட் | ரூ. 4- 4-6 |
| ,, | 5 | சலவை நாக கன்னிகை | ரூ. 4- 8-0 |
| ,, | 10 | ஜப்பான் கலர் பந்து | இருப்பில்லை |
| ,, | 5 | மதுரை மில் | ரூ. 3- 7-0 |
| 30 | 5 | லாயல் மில் | ரூ. 2-12-0 |
| ,, | 5 | மதுரை மில் | ரூ. 2-14-0 |
| 20 | 10 | மதுரை மில் | ரூ. 4-10-0 |
| 20 | 10 | ஸ்டேன்ஸ் மில் | ரூ. 4- 9-0 |
| 20 | 10 | லாயல் மில் | ரூ. 4- 9-0 |
| 60 | 5 | சீமை எருதுகாரம் | இருப்பில்லை |
| 60 | 5 | சிகப்பு அசல் மயில் | ரூ. 9-12-0 |

### ஜவுளிகளின் விலை

| | | |
|---|---|---|
| 22 × 22 காரிகன் மல் | கிரிப்பாம்பு (பி.) | ரூ. 6- 5-6 |
| ,, ,, | ஆவரேஜ் ரகம் | ரூ. 5-10-0 |
| ,, சலவை மல் | கிரிப்பாம்பு | ரூ. 7- 4-0 |
| ,, | ஆவரேஜ் ரகம் | இருப்பில்லை |
| 1703-ம் ரெம்பர் மல் | | ரூ. 8-15-0 |
| 9000 கிளாஸ்கோ மல் | | ரூ. 9- 0-0 |

| | |
|---|---|
| சவரன் 1-க்கு | ரூ. 21-13-6 |
| வெள்ளி ரூபா எடை | ரூ. 0-11-0 |

### கப்பல் செய்திகள்

| | | | |
|---|---|---|---|
| S. S. எரின்பூரா | ரங்கூனுக்கு | 16-11-34 | காலை 10 மணி |
| S. S. எதியோப்பியா | ,, | 23-11-34 | ,, |
| S. S. ரோனா ஸ்ட்ரெயிட்ஸுக்கு | | 20-11-34 | மாலை 4 மணி |
| S. S. ரஜுலா | ,, | 4-12-34 | ,, |

---

# தமிழ் நாட்டு நடப்பு

## கோமாரபாளையம் தரும பாடசாலை

மக்கள் அடைய வேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய பேறுகளை சாதிக்கவல்லது கல்வியே என்னும் உண்மையை அறிந்து கல்வியை யாண்டும் பரப்பவேண்டும் என்ற பெருநோக்கமுடையவராய் சேலம் தாலுக்கா 64 நெ. கொமார பாளையம் செங்குந்த சகோதரர் திரு. K. கைலாச முதலியார் அவர்கள் சென்ற 12 வருஷங்களாக ஒரு எலிமென்டரி **தரும பாடசாலை** ஏற்படுத்தி சிறுவர் சிறுமிகளுக்கு இலக்கியக் கல்வியோடு கணக்கு, தொழிற்கல்வி, தோட்டவேலை, வார்ப்பட வேலை, சித்திரம், கடைக்கணக்கு, பாண்டு பத்திரம் எழுதல் முதலியவை கற்பித்து வருவதோடு இரவில் படிக்க விரும்புவோருக்கும் போதித்து வருவதாகக் கேள்விப்பட்டு மகிழ்ச்சி யடைகிறோம். திரு. முதலியார் அவர்கள் நன்முயற்சிக்கு ஆண்டவன் உடனிருந்து துணைபுரிவாராக. ஷை யார் விலாசம்: செங்குந்தம் K. கைலாச முதலியார், (குப்பண்ண முதலியார் மகன்) A. E. தரும பாடசாலை, கொமார பாளையம், மல்லூர் போஸ்டு, சேலம் ஜில்லா.

## செங்குந்த குலகுரு சுவாமிகள் திருநெல்வேலி விஜயம்

திருநெல்வேலி டவுன் செங்குந்தர் பெரிய தெரு பிரமுகர்கள் அழைப்புக் கிணங்கி 6-10-34-ல் காஞ்சீபுரம் ஸ்ரீலஸ்ரீ சிவஸ்வாமி தேசிக சுவாமிகள் திரு. வ. அ. சு. வ. சிதம்பரநாத முதலியார் அவர்கள் வீட்டிற்கு எழுந்தருளி சீடர்களுக்கு ஆசீர்வாதம் செய்து பிரசாதமளித்து, செங்குந்த பிரமுகர்கள் நிறைந்த மாபெருங் கூட்டத்தில் 'திருஞான சம்பந்தர்' என்னும் பொருள்பற்றி ஒரு பேருபந்யாசம் செய்தார்கள். அச்சமயம் ஷை பெரிய தெரு திரு. வ. வீ. ச. வீரப்ப முதலியார் குமாரர் திரு. வ. வீ. ச. வீ. சண்முக முதலியார் அவர்கள் திருநெல்வேலி டவுன் கௌரவ மாஜிஸ்ட்ரேட்டாக நியமிக்கப்பெற்றிருப்பதைப்பற்றி சுவாமிகள் பாராட்டிப் பேசி ஆசீர்வதித்தார்கள். பின்பு கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.

'சுமார் 6,000 செங்குந்தர்களுள்ள திருநெல்வேலி பெஞ்ச் கோர்ட்டில் செங்குந்த பிரதிநிதி இருக்க வேண்டியது அவசியமாகையால் எப்போதும் ஷை கோர்ட்டில் ஒரு செங்குந்த கனவானை நியமிக்க ஒரு ஸ்தானத்தை ஒதுக்கி வைக்க வேண்டுமென அதிகாரிகளைச் செங்குந்தர்களடங்கிய இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.'

## திருவத்திபுரம் ஸ்ரீ பாநுகவி மாணவர் கழக ஆறுவது ஆண்டுவிழா

கடந்த அக்டோபர் 20, 21-10-34 தேதிகளில் இக்கழகத்தின் 6-வது ஆண்டு விழா திருவோத்தூர்ப் பரிதிபுரம், திருநாவுக்கரசு மடாலயத்தில், சென்னைக் கடலகம் உயர் திருவாளர் கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

அவ்விரு நாட்களிலும் தமிழ்ப்புலவர் பலர் அரிய சொற்பொழிவு ஆற்றினார்கள். கடந்த ஆண்டுகளினும் இவ்வாண்டில் சென்னை, குற்



றாலம் முதலிய இடங்களிலிருந்து புலவர்கள் போந்து சொற்பொழிவாற்றினமை பெரிதும் பாராட்டற்பாலதே.

இக்கழகம் பிற துறைகளிலும் வளர்ச்சி யடைவதோடு இதன் சார்பில் ஓர் தமிழ்க் கல்லூரியையும் இயலச்செய்து வருவது தமிழ் மக்கட்குந் தமிழ் மொழிக்கும் பெருநன்மை பயப்பதாகும். அக் கல்லூரியையும் கழகத்தையும் தமிழ் மக்கள் ஆதரிக்குமாறு பெரிதும் வேண்டுகிறோம்.

இங்ஙனம்

K. A. ஆதிமூலன்
S. பச்சையப்ப முதலியார்
செயலாளர்கள்.

## செங்குந்தர் சைவ ஆங்கில தமிழ் வித்தியாசாலைத் திறப்பு விழா

### வெண்பா

ஆங்கிலமுஞ் செந்தமிழும் ஆராய்ந் தொருமித்து
ஓங்கும் உயர்சைவ வோர்கழகம்—பாங்கில்
பவமே விஜய தசமியே யாகும்
நவமாய்த் திறந்திட்ட நாள்.

யாழ்ப்பாணத்து நல்லூர் திருநெல்வேலி என்னுங் கிராமங்களிலுள்ள செங்குந்தர்களாற் கட்டப்பட்ட 'கந்தவாசம்' என்னும் அலங்கார மண்டபத்தில் பவ வருஷம் ஐப்பசி முதலாந் திகதி (17-10-34) விஜய தசமித்திதி கூடிய சுபமுகூர்த்தத்தில், சைவ வித்தியா விருத்திச் சங்க ஆதரவில் ஷை வித்தியாசாலைத் திறப்பு விழா இனிது நடைபெற்றது. அத்தருணம் சரஸ்வதி பூசை மிக்க ஆடம்பரங்களுடன் நடத்தப்பட்டது. பின்னர் தேவாரங்களும் சரஸ்வதி தோத்திரங்களும் ஓதப்பட்டு வித்தியாசாலை ஆரம்பமாயது. அப்போது முந்நூற்றுக் கதிகமானோர் சமுகஞ் செய்தனர். இவ்வித்தியாசாலையிற் கற்பதற்கென அன்று நூற்றைம்பது மாணவர் வரையில் வந்திருந்தனர். அவர்களுக்குச் சைவ வித்தியா விருத்திச் சங்க மானேஜர் திரு. சு. இராசரத்தினம் அத்துவக்காத் அவர்களாலும், பிரதம வித்தியாதரிசியாயிருந்து தற்போது இளைப்பாறும் திரு. சி. கந்தையா அவர்களாலும், சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்களுடைய புத்திரர் திரு. முத்துக்குமார சுவாமிப் பிள்ளை B. A. அவர்களாலும், இன்னும் இரு ஆசிரியர்களாலும் பாடஞ்சொல்லிக் கொடுக்கப்பட்டது. தலைமையாசிரியரான ஷை திரு. கு. முத்துக்குமார சுவாமிப் பிள்ளை B. A. அவர்களும், ஷை திரு. சி. கந்தையா அவர்களும் சில பிள்ளைகளுக்கு ஏடு தொடக்கினர். அதன் பின்னர் சிற்றுண்டிகள் வரிசையாக வழங்கப்பட்டுப் பின்னேரம் 2 மணி யளவில் தேவார பாராயணத்துடன் அன்றைய விழா நிறைவேறிற்று. இவ்விழாவை யிட்டு அன்று பின்னேரம் 4 மணி யளவில் செங்குந்தர் சைவ ஆங்கில தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் முந்நூற்றுக்கு மேற்பட்ட ஏழைகளுக்கு அன்னதானம் அளிக்கப்பட்டது.

இவ்வித்தியாசாலையும், இதனை ஆதரித்துவரும் சைவ வித்தியா விருத்திச் சங்கமும் மென்மேலும் ஓங்கி வளர்ந்துவர இறைவன் திருவருள் பாலிப்பாராக.

சு. இராசையா, ஆசிரியன்.

---

வடவழி மலைக்காட்டில் வதங்கி யுலர்ந்த "புல்" மாடு மேயக் கூடாதென்றும், ஆள் கொண்டுவந்தால் "வரி"யென்றும், அதற்கும், "பாசு" தருவதில்லை யென்றும், பாரஸ்ட் குத்தகைக்காரர்கள் கூறுவதால் அவ்விடத்திய குடியானவர்கள் இனிக் கால்நடைகளைக் காப்பாற்றும் விதம் இன்னதெனத் தெரியாமலும், "மழை" பெய்யாக் குறையாலும் உலர்ந்த சோளப்புல்லை அதிக விலைக்கு வாங்கி அதை அளந்து போடுகின்றார்கள். அதனால் மாடுகள் நாளுக்கு நாள் உடல்மேனியுங் குன்றுகிறது. சிலர் கள்ளித் தழையையும் கால்நடை உணவாக்குகிறார்கள்.

---

நீலகிரி, மதுரை, விசாகப்பட்டணம், செங்கற்பட்டு ஜில்லா போர்டு தேர்தல்கள் இம்மாதத்தில் நடைபெறக் கூடுமெனத் தெரிகிறது.

---

பண்டித ஜோதீச சந்திரபோஸ் முதலிய நான்கு வங்காளக் கைதிகள் சிறையில் இந்திய சர்க்கார் அனுமதிபெற்று காளிபூஜை செய்தனர். அவர்கள் 6 அடி உயரமுள்ள காளி ஒன்றைச் செய்து ரவீந்திரநாத பட்டாச்சார்ஜி என்ற புரோகிதரைக் கொண்டு நவராத்திரி முழுதும் பூஜை செய்து முடித்தபின் விக்கிரகத்தைத் தண்ணீரில் எறிந்துவிட்டனர். கைதிகள் தங்களுக்கு அளிக்கப்படும் படிச் செலவிலிருந்து 1000 ரூபா வரையில் மிச்சம் செய்து புரோகிதருக்குச் சம்பாவனை வழங்கினர்.

---

24-10-34-ந்தேதி கூடிய மைசூர் பிராம்மணரல்லாதார் கட்சிக் கூட்டத்தில் அக்கட்சியின் பெயரை மைசூர் பிரஜா பெடரேஷன் என்று மாற்றவேண்டு மென்றும், இனி கட்சியில் பிராம்மணர்களைச் சேர்த்துக் கொள்ளுவதென்றும் தீர்மானித்திருக்கிறார்கள்.

---

சென்ற மாதம் கூடிய சென்னை சட்டசபைக் கூட்டத்தில், ஹிந்து தேவஸ்தான போர்டார் செய்யும் தீர்ப்புக்குமேல் கோர்ட்டுகளில் அப்பீல் செய்யக் கூடாதென்றும், போர்டார் அதிகாரத்தில் சர்க்கார் தலையிடக் கூடாதென்றும், போர்டார் தீர்ப்புக்குமேல் அப்பீல் செய்துகொள்ள விரும்பினால் போர்டு அங்கத்தினர் உத்தரவு பெற்று போர்டு புல் பெஞ்சு அப்பீல் செய்து கொள்ளலாமென்றும் சட்டத்தில் திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

சென்னை கவர்னராக நியமிக்கப் பெற்றிருக்கும் லார்டு எர்ஸ்கைன் 26-10-34-ல் லண்டனிலிருந்து புறப்பட்டு 11-ந்தேதி பம்பாய் வந்து சிலநாள் தங்கியிருந்து 15-ந்தேதி காலை 8-மணிக்கு சென்னை



வந்து சேர்ந்தார். அன்று மாலை 5-30 மணிக்குப் பழைய கவர்னர் ஜார்ஜ் ஸ்டான்லி கோட்டையினின்றும் புறப்பட்டதும் புதிய கவர்னர் கோட்டைக்குச் சென்று உத்தியோகத்தை ஏற்றுக்கொண்டார்.

---

திருவனந்தபுரத்திலுள்ள ஸ்ரீ பத்மநாப சுவாமி கோயிலில் 28-10-34-ந் தேதி இரவு தீப் பிடித்துக்கொண்டு 5-மணி நேரம் தீ ஓயாது எரிந்ததாம். சேதம் அதிகமாக ஏற்பட்டதால் கோயிலைப் புதுப்பிக்கும் செலவு ஒரு லக்ஷ ரூபாய் ஆகுமெனத் தெரிகிறது. ஜீரணோத்தாரண வேலை நடைபெற்று வருகிறது.

---

மைசூர் சமஸ்தானத்திலுள்ள எல்லா சர்க்கார் ஹைஸ்கூல்களிலும் ஏதாவது ஒரு வகுப்பில், ஒரு செக்ஷனுக்குமே லிருந்தால் ஒரு செக்ஷனில் மட்டும் கணக்கு, பூகோளம், சரித்திரம் இவைகளை இங்கிலீஷில் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்றும், மற்ற செக்ஷன்களில் கன்னடத்தில் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்றும் கல்வி இலாகா டைரக்டர் உத்தரவு பிறப்பித்துள்ளார். இது 1935—36-ம் வருடத்தில் அமுலுக்கு வரும்.

---

சென்னை, யுனைடெட் லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனியில் வேலையிலிருக்கும் ஸ்ரீ பி. ரங்கசாமி அய்யங்கார் அவரது மாமனார் ஸ்ரீ பி. என். வரதாச்சாரியார் மீது ரூ. 500-க்கு ஒரு வழக்குத் தொடர்ந்திருக்கிறார். பிராதில் தனக்குக் கல்யாணமான வருடத்தில் பண்டிகை காலங்களிலும் மற்றைய விசேட காலங்களிலும் செய்யவேண்டிய மரியாதைகளும், வெகுமானங்களும் தரவில்லையெனக் கூறி யிருக்கிறார். பிரதிவாதியாகிய மாமனார் தனது வாக்குமூலத்தில் மருமகனுக்கு வெகுமதி தருவது தனது இஷ்டத்தைப் பொருத்ததென்றும், கட்டுப்படுத்தி வெகுமதி பெற உரிமை இல்லை என்றும் கூறியிருக்கிறார். இம்மாதம் 23-ந்தேதிக்கு வழக்கு வாய்தா போடப்பட்டிருக்கிறது.

---

திருநெல்வேலி முனிசிபல் சேர்மனும், சட்டசபை மெம்பருமான ஸ்ரீ எம். டி. டி. ரங்கநாத முதலியார், அவரது சகோதரர்கள் குமாரசாமி முதலியார், பொன்னையா முதலியார் இவர்கள் பேரில் போலீசாரால் நன்னடக்கை ஜாமீன் வழக்கு தொடரப்பட்டு தலா ரூபா 2000-க்கு தற்காலீக ஜாமீன் பத்திரமும், இதே தொகைக்கு இரு நபர் ஜாமீனும் வாங்கப்பட் டிருக்கிறது.

---

இம்மாகாணத்தில் கூட்டுறவு முறையில் கைத்தறித் தொழிலை அபிவிருத்தி செய்யும் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்காக இந்திய சர்க்கார் சென்னை சர்க்காருக்கு 59000 ரூபா மான்யம் வழங்கி யிருக்கிறார்கள்.

---

சென்னை சர்க்கார் கார்பொரேஷனுக்கு ரூ. 3,75,000 கடன் கொடுத்திருக்கிறார்கள். சென்னையில் எரியும் மின்சார விளக்கு

களுக்கு கார்பொரேஷன் சொந்தத்தில் மின்சாரம் உற்பத்தி செய்யவே இந்தக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவரை எலக்ட்ரிக் டிராம்வே மின்சார சப்ளை கார்பொரேஷனுர் கார்பொரேஷனுக்கு மின்சாரம் சப்ளை செய்து வந்தனர்.

---

தென்னிந்தியாவில் அரிச்சந்திரனாக நடிப்பதில் நிகரற்ற ஸ்ரீ எஸ். சிதம்பராச்சாரி 1-11-34ல் காலமானார். அவர் மைசூர் மகாராஜாவிடம் வெள்ளித் தடியும், தங்கப் பதக்கமும் பரிசுபெற்றவர்.

---

மீனம்பாக்கம் ஆகாய விமானப் போட்டியில் 16 வயதுடைய ராஜாராமனுக்கு முதற்பரிசு கிடைத்தது. இப்போட்டியில் ஒரு பெண்மணியும் கலந்துகொண்டார்.

---

## இந்தியா சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்றவர்

### சென்னை நகரத் தொகுதி

| | |
|---|---|
| இத் தொகுதியிலுள்ள மொத்த ஓட்டுகள் | 15131 |
| பதிவு செய்யப்பட்ட ஓட்டுகள் | 12419 |
| ஸ்ரீ சத்தியமூர்த்திக்குக் கிடைத்த ஓட்டுகள் | 8758 |
| ஸ்ரீ ராமசாமி முதலியாருக்குக் கிடைத்த ஓட்டுகள் | 3351 |
| செல்லுபடியாகாத ஓட்டுகள் | 310 |

எனவே பெருமிதமான அதிக ஓட்டுகள் பெற்று காங்கிரஸ் அபேட்சகரான ஸ்ரீ சத்தியமூர்த்தி வெற்றிபெற்றார்.

### வர்த்தகர் தொகுதி

| | |
|---|---|
| வர்த்தகத் தொகுதியின் மொத்த ஓட்டுகள் | 1517 |
| பதிவு செய்யப்பட்ட ஓட்டுகள் | 1424 |
| ஸ்ரீ சாமி. வெங்கடாசலஞ் செட்டியாருக்கு | 757 |
| சர். சண்முகம் செட்டியாருக்கு | 665 |
| செல்லுபடி யாகாதவை | 2 |

காங்கிரஸ் அபேட்சகரான ஸ்ரீ சாமி வெங்கடாசலஞ் செட்டியார் இத்தொகுதியில் வெற்றி பெற்றார்.

### நிலச்சுவான்தார் தொகுதி

| | |
|---|---|
| இத்தொகுதியின் மொத்த ஓட்டுகள் | 625 |
| பதிவு செய்யப்பட்ட ஓட்டுகள் | 554 |
| கொல்லங்கோடு ராஜாவுக்குக் கிடைத்த ஓட்டுகள் | 317 |
| நீலாம்பூர் ராஜாவுக்குக் கிடைத்த ஓட்டுகள் | 223 |
| செல்லுபடியாகாத ஓட்டுகள் | 14 |

இத்தொகுதியில் கொல்லங்கோடு ராஜா வெற்றி பெற்றார். மற்ற தேர்தல்களின் ஓட்டுகள் இன்னும் எண்ணப்படவில்லை.



## சேர்மன் தேர்தல்கள்

### திருப்பூர்

12-11-34-ல் நடந்த திருப்பூர் முனிசிபல் சேர்மன் தேர்தலில் ஸ்ரீ K. R. ராயப்ப கவுண்டர் ஏகமனதாக சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### பொள்ளாச்சி

இவ்வூர் நகரசபைத் தலைவர் தேர்தல் 9-ந்தேதி நடைபெற்றது. ஸ்ரீ S. R. அளகப்ப கவுண்டர் பலத்த போட்டியி னிடையே சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### திருநெல்வேலி

9-11-34-ந் தேதி நடைபெற்ற இவ்வூர் நகரசபைத் தலைவர் தேர்தலில் ஸ்ரீ மேடை தளவாய் ரங்கநாத முதலியார் அவர்கள் அதிகப்படியான ஓட்டுகள் பெற்று வெற்றியுற்றார்.

### பாளையங்கோட்டை

8-11-34-ந் தேதி தலைவர் தேர்தல் நடைபெற்றது. ஸ்ரீ டேனியல் தாமஸ் சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### சேலம்

இவ்வூர் முனிசிபல் சேர்மன் தேர்தல் 9-ந்தேதி நடைபெற்றது. ஸ்ரீ எஸ். ஏ. ஐயாசாமி செட்டியார் அவர்கள் மிக அதிகமான ஓட்டுகள் பெற்று சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### விழுப்புரம்

9-11-34-ல் இவ்வூர் நகரசபைத் தலைவராக ஸ்ரீ ஜே. பி. தேவராஜால் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### காஞ்சிபுரம்

12-11-34-ல் நடந்த முனிசிபல் சேர்மன் தேர்தலில் ராவ்பகதூர் C. சாம்பசிவ செட்டியார் அவர்கள் சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

### கொச்சி

கொச்சி முனிசிபல் தலைவர் தேர்தல் 9-11-34-ந்தேதி நடைபெற்றதில் ஸ்ரீமதி ஜே. வி. பர்னாடு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### வேலூர்

இவ்வூர் முனிசிபல் சேர்மன் தேர்தல் 12-11-34-ல் நடைபெற்றது. நான்கு பேர்கள் போட்டி யிட்டனர். ஸ்ரீ V. M. ராமசாமி முதலியாரவர்கள் வெற்றி பெற்றார்.

### விருதுநகர்

12-ந் தேதி நடந்த இவ்வூர் நகரசபைத் தலைவர் தேர்தலில் ஸ்ரீ வே. வ. இராமசாமி நாடார் அவர்கள் போட்டியின்றி மீண்டும் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

### கும்பகோணம்

டாக்டர். சாம்பசிவ அய்யர் பெருவாரியான ஓட்டுகள் பெற்று 12-ந் தேதி சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

### திருவாரூர்

13-ந் தேதி நடைபெற்ற இவ்வூர் முனிசிபல் சேர்மன் தேர்தலில் வடபாதிமங்கலம் எஸ்டேட் ஸ்ரீ ஜி. ராமானுஜ முதலியார் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

### கோயமுத்தூர்

12-ந் தேதி இவ்வூர் முனிசிபல் சேர்மன் தேர்தல் நடைபெற்றது. ராவ் சாகிப் எஸ். என். பொன்னையா கவுடர் போட்டியின்றி சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

### நாகப்பட்டணம்

ஸ்ரீ வி. பி. கே. காயாரோகணம் பிள்ளை அவர்கள் 12-11-34-ந் தேதி ஏகமனதாக இவ்வூர் முனிசிபல் சேர்மனாகத் தெரிவு செய்யப் பெற்றார்.

---

## இந்தியச் செய்திகள்

ஆகாகானுக்கு 'லார்டு' பட்டம் கிடைத்த பிறகு அவரை இந்திய மாகாணமொன்றின் கவர்னராக்கப்போவதாக 'ரெனால்ஸ் வீக்லி' என்ற பத்திரிகை எழுதுகிறது.

---

வெள்ளை அறிக்கை திட்டத்தைப் பற்றி பிரிட்டிஷ் பார்லிமெண்டு செய்யும் தீர்மானத்தால் ஏற்படும் நிலையைப் பரிசீலனை செய்வதற்காக 1935-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஒரு ஸ்பெஷல் காங்கிரஸ் மகாநாடு கூட்டப்படலா மெனத் தெரிகிறது.

---

இரண்டு வாரங்களுக்கு முன் பம்பாயில் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டில் வாசற்படி வசூலும், காட்சிச்சாலை வசூலும் சேர்ந்து இரண்டே கால் லட்ச ரூபாய் வசூலாகி யிருக்கிறதாம். இரண்டு ரூபாய் டிக்கட்டுகள் மட்டும் நாற்பதாயிரம் டிக்கட்டுகள் விற்பனையாகி இருக்கின்றனவாம்.

---

வைசராய் பூகம்ப நிதிக்கு இதுவரை ரு. 59,95,411-5-8-ம் 1 பொன் 1 டாலரும் வசூலாகி யிருக்கிறது.



ஜப்பான் ஜவுளிகளின்மீது இலங்கை சர்க்காரில் கோட்டா விகிதம் ஏற்பட்டதி லிருந்து இந்தியாவிலிருந்து ஜவுளிகளும், செயற்கைப் பட்டுகளும் ஏராளமாக இலங்கையில் இறக்குமதியாகி வருகின்றன.

---

பிரிட்டன் தங்க நிர்ணயத்தை விட்டது முதல் 3-11-34-ந் தேதி வரை ரு. 202,13,56,036 மதிப்புள்ள தங்கம் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

---

கோலார் தங்க சுரங்கங்களிலிருந்து அக்டோபர் மாதம் பிற்பகுதியில் மட்டும் 12,59,239 அவுன்ஸ் நிறையுள்ள தங்கப்பாளங்கள் பம்பாய்க்கு அனுப்பப்பட்டன. அவற்றின் மதிப்பு ரூ. 11,69,934.

---

கீழ்க்கண்ட விஷயங்களைப்பற்றிய வியாசப் போட்டியை இந்திய சர்க்கார் ஏற்பாடு செய்துள்ளார்கள். ஆங்கிலத்திலும் ஹிந்தி அல்லது உருதுவிலும் வியாசங்கள் எழுதலாம். ஆங்கில வியாசப்பரிசு ரூ 200. ஹிந்தி அல்லது உருது வியாசப்பரிசு ரூ 100 வியாசம் எழுதவேண்டிய விஷயங்கள்.

(1) பொது உடைமைக் கொள்கை இயற்கையில் இந்தியாவுக்கு ஏற்றதா? (2) மதம் முதலாளி தத்துவத்திற்கு விரோதமானதா? (3) பொருளாதார தோரணையில் சமத்துவம் சாத்தியமா? (4) ரஷ்யாவில் பொருளாதாரத் துறையின் அப்ஜெயம் (5) பொது உடைமைக் கொள்கையால் இந்தியாவுக்கு சாஸ்வதமான நன்மை யுண்டா? (6) தொழிலாளர் விமோசனம் பொது உடைமைத் தத்துவத்தாலே சாத்தியமல்ல; டிரேட் யூனியன் தத்துவத்தாலே சாத்தியம் (7) புரட்சி இயக்கத்தால் இந்தியாவுக்கும் சிறப்பாக வங்காளத்திற்கும் ஏற்பட்ட பலன் என்ன? (8) புரட்சி இயக்கத்தில் அதிகமாக சாதிக்கலாமென்று சரித்திரம் கூறுகிறதா?

---

பிரெஞ்சு ஆல்பைன் சங்கத்தினர் ஹிமாலயத்தை ஆராய்ச்சி செய்வதற்காக ஏற்படுத்தியுள்ள கோஷ்டியார் 24,000 அடி உயரத்திற்குமேலுள்ள 13 சிகரங்களில் எந்த சிகரத்தை ஆராய்ச்சி செய்வதென யோசித்து வருகிறார்கள். விரைவில் இவர்கள் ஹிமயமலைமீது 15,000 அடி உயரத்திற்கு மேல் சென்று ஒரு மாதம் தங்கி இருந்து ஆராய்ச்சி செய்வார்கள்.

---

ஸ்ரீ காத்கார்ட் ஜோன்ஸ், ஸ்ரீ வாலர் இருவரும் டார்வினிலிருந்து சிங்கப்பூருக்கு ஆகாய விமானத்தில் 10 மணி 20 நிமிஷ நேரத்தில் பறந்து சென்றனர். அவர்கள் 1 மணிக்கு சராசரி 201 மைல் வீதம் பிரயாணம் செய்திருக்கிறார்கள்.

---

அரேபியாவில் மிக்க அழகு வாய்ந்த புராதனமான நகரமொன்று புதையுண்டு கிடப்பதாகவும், அதில் ஆராய்ச்சி பொக்கிஷங்கள் பல

# ஸ்தல ஸ்தாபன தேர்தல்களில் செங்குந்தர்களின் வெற்றி

## பாப்பாரப்பட்டி

பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டு தேர்தல் 7-11-34 பகல் 2-மணிக்கு ஸ்ரீமான் H. இராமசாமி செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதுவரையில் பிரசிடெண்டாக யிருந்துவந்த இவ்வூர் மிட்டாதாரும், பிரபல தனவந்தரும், ஜில்லா போர்டு மெம்பரும், ஜில்லா கல்விச்சபை மெம்பருமாகிய ஸ்ரீமான் M. A. கோவிந்தசாமி முதலியார் அவர்கள் பிரசிடெண்டாகயிருக்க வேண்டுமென ஸ்ரீமான் K. கோபாலகிருஷ்ண ராவ் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, ஸ்ரீமான் P. R. சுப்புசெட்டியார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதுடன் தீர்மானிக்கப்பட்டது. பிறகு கனம் முதலியார் அவர்கள் பிரசிடெண்டு ஸ்தானம் எடுத்துக்கொள்ள வைஸ்பிரசிடெண்டு தேர்தல் நடைபெற்றது. ஸ்ரீமான் H. இராமசாமி செட்டியார் அவர்களை வைஸ்பிரசிடெண்டாகக் கோபி ஸ்ரீமான் K.N. இராமசாமி முதலியார் அவர்கள் பிரேரேபிக்க ஸ்ரீமான் S. கந்தசாமி கவுண்டர் அவர்கள் ஆமோதிக்க ஏகமனதுடன் தீர்மானிக்கப் பட்டது.

தேர்தல் முடிந்ததும் பிரசிடெண்டவர்கள் தன்னை மதித்து இந்தப் பொருப்பை யளித்ததற்கு மெம்பர்கள் யாவருக்கும் வந்தனம் செலுத்தி, இதுவரையில் ஆதரவளித்து வந்ததைப் போலவே இனியும் ஒற்றுமையுடனிருந்து நிர்வாகம் திறம்பட நடைபெறச் செய்விக்கத்துணைபுரிய வேண்டுமென நன்றிகூறிய பிறகு, வைஸ்பிரசிடெண்டவர்களால் வந்தனங் கூறப்பட்டது. விஜயம் செய்திருந்த கனவான்களுக்கு சந்தண புஷ்ப தாம்பூலம், பழம், கற்கண்டுகள் வழங்கப்பட்டு கூட்டம் முடிவுற்றது. கூட்டத்தில் விசேட விஸிட்டர்களாகச் சேலம் அம்மாபேட்டை ஸ்ரீமான்கள் M.பெருமாள் முதலியார் S. பழனியாண்டி முதலியார், முனிசிபல் கவுன்சிலர் T. K. பழனியப்ப முதலியார், தர்மபுரி Dr. S. R. தர்மலிங்கம் பிள்ளை தேசபந்து கிளப் பிரசிடெண்டு P. D. பூஷணம் M. B. B. S. ஷை கிளப் செக்ரெடரி M. R. S. குப்புசாமி முதலியாரும் அதன் மெம்பர்களுடன் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

முக்கியமாக சேலம் ஜில்லாவிலுள்ள 56 பஞ்சாயத்து போர்டு (யூனியன்) களின் மெம்பர்கள், எலெக்ஷன்களில் ஒருவார்டுக்கேனும் போட்டியின்றி இந்த போர்டுக்குரிய 10 மெம்பர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டதைப்பற்றி ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸர் அவர்கள் இவ்வூர் பொதுஜனங்களின் ஒற்றுமையைக்கண்டு புகழ்ந்து கூறியது கவனிக்கத்தக்கது.

கா. நா. ருமசாமி முதலியார்.

## தாரமங்கலம் பஞ்சாயத்துபோர்டு எலெக்ஷன்

ஓமலூர்தாலுக்கா தாரமங்கலம் பஞ்சாயத்து போர்டு எலெக்ஷன் 22-10-34ல் வெகு மும்முரமாக நடந்தேறியது. ஷை போர்டுக்கு ஏற்பட்டுள்ள 11-வார்டுகளில் 8-வது வார்டுக்கு திரு. A. மாரிமுத்து முதலியார் அவர்களும், 10-வது வார்டுக்கு திரு. நாட்டாண்மை கந்தசாமி முதலியாரும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பெற்றனர். 1-வது வார்டுக்கு திரு. P. A. வடிவேல் முதலியாரும், 2-வது வார்டுக்கு திரு. K.S. அங்கமுத்து முதலியாரும், 3-வது வார்டுக்கு திரு. கா.மு. இடும்ப முதலியாரும், 4-வது வார்டுக்கு திரு. K. V. ஆறுமுக முதலியாரும், 5-வது வார்டுக்கு திரு. K. K. கந்தப்ப முதலியாரும், 6-வது வார்டுக்கு திரு. K. V. சாமிநாத முதலியாரும், 7-வது வார்டுக்கு திரு. T. M. கிருஷ்ணசாமி முதலியாரும், 9-வது வார்டுக்கு திரு. பி. வீ. சின்னு முதலியாரும், 11-வது வார்டுக்கு பே. அ. பழனியப்ப முதலியாரும் மும்முரமான போட்டியினிடையே தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள். எலெக்ஷன் நாளன்று ஓமலூர் சர்க்கில்போலீஸ் இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ துரைசாமி பிள்ளையவர்கள் கலகம் நடவாதபடி தக்க ஏற்பாடுகள் செய்திருந்தது போற்றத்தக்கது.

இவ்வாரத்தில் நடந்த தலைவர் தேர்தலில் திரு. K. S. அங்கமுத்து முதலியாரவர்கள் மூன்றும் முறையாக போர்டு தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

A. மாரிமுத்து முதலியார், தாரமங்கலம்.

## அம்பா சமுத்திரம்

8-11-34-ந் தேதி அம்பா சமுத்திரம் யூனியன் போர்டு தலைவர் தேர்தல் நடத்துவதற்காக ஸ்ரீ திருமலை செட்டியார் தலைமையில்

---

இருப்பதாகவும், ஆயிரக்கணக்கான டாலர்கள் உதவிசெய்தால் அந்நகரத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிக்க முடியுமென்றும் சிகாகோ சர்வகலாசாலையின் பண்டிதரான டாக்டர் மார்டின் ஸ்பிரிங் கூறுகிறார்.

---

லண்டனிலும், ஜப்பானிலும் மசூதிகள் கட்டுவதற்கு திட்டங்களை மகம்மதியர்கள் ஏற்பாடு செய்துள்ளார்கள். மிகவும் பிரகாசமுள்ள பளிங்குக் கற்களால் மிக அழகான வேலைப்பாடுடன் லண்டனில் பக்கிங்காம் அரண்மனைக்குப் பக்கத்தில் 1,70,000 பொன் (ரூ. 25,50,000) செலவிலும், ஜப்பானில் அநேக லட்ச ரூபாய் செலவிலும் மசூதிகள் கட்டப்படுமாம்.

---

இந்தியா ரிசர்வ் பாங்கி டிப்டி கவர்னர்களாக ஜே. பி. டெய்லரும், சர். சிக்கந்தர் ஹயாத்கானும் நியமிக்கப் பெற்றுள்ளனர்.

---

தற்போது தென்னாப்பிரிக்காவில் இந்திய சர்க்கார் ஏஜன்டாக இருக்கும் குன்வார் மகாராஜ் சிங்கிற்குப் பிறகு சையத் ரசா அலி அந்தப் பதவியில் நியமிக்கப் படுவாரெனத் தெரிகிறது.

கூடியது. ஸ்ரீ ராமச்சந்திர அய்யரும், ஸ்ரீ ஆர். வேலாயுத முதலியாரும் போட்டி யிட்டனர். அதிகப்படியான ஓட்டுகள் பெற்று ஸ்ரீ வேலாயுத முதலியாரவர்கள் வெற்றி பெற்ருர். பிரபல வர்த்தகரும், செங்குந்த குலப் பெரியாருமாகிய முதலியாரவர்கள் வெற்றி பெற்றது பெரிதும் பாராட்டத் தக்கதாகும். தென்னிந்திய செங்குந்தர் 6-வது மகாநாட்டை திருநெல்வேலி ஜில்லாவில் நடத்துவதற்கு விரும்பி அழைத்தவரும், அம் மகாநாட்டுச் செலவில் பெரும் பகுதியை எற்றுக்கொள்வதாகக் கூறியவரும் ஸ்ரீ முதலியாரேயாவார்கள்.

அன்றுமாலை நடைபெற்ற உபதலைவர் தேர்தலில் ஸ்ரீ எ.ஆர்.எம். வேலாயுத முதலியார் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## மணலைச்சநல்லூர்

11-11-34-ந் தேதி நடைபெற்ற இவ்வூர் யூனியன் போர்டு உபதலைவர் தேர்தலில் நமது சமூக இயக்கத்தில் மிக அதிகமான ஊக்கங் காட்டுகின்ற ஸ்ரீ வி. பொன்னுசாமி முதலியாரவர்கள் எகமனதாக உபதலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்-

## திருவாரூர்

சென்ற மாதம் நடைபெற்ற திருவாரூர் முனிசிபல் தேர்தலில் ஸ்ரீ T. N. சபாபதி முதலியார் அவர்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகச் சென்ற மாதம் அறிவித்திருக்கிரேம். அவர்களோடு நமது சமூக முன்னேற்றத்தில் மிக்க அபிமானமுடைய ஸ்ரீ T. K. N. நடேச முதலியார் அவர்களும் போட்டியின்றி கவுன்சிலராகத் தேர்ந்தெடுக்கப்பட் டிருக்கிருர்க ளென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிரேம்.

## சங்கரநயினர் கோயில்

சங்கரநயினர் கோயில் பஞ்சாயத்துப் போர்டு தேர்தலில் செங்குந்த சமூகத்தவருள் கீழ்க்கண்டவர்கள் போட்டியின்றி அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

(1) தி. மு. தி. சண்முக முதலியார், மிட்டாதார்.
(2) சி. பா. பிரமமுத்து முதலியார், ஜவுளி நூல் வியாபாரம்.
(3) தி. மு. தி. பழனி முதலியார்.

## அநுதாபம்

யாழ்ப்பாணம் முத்துத்தம்பி வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமை பார்த்து வந்தவரும், செங்குந்த குலதிலகரும், திரு. க. வேலுப்பிள்ளை முதலியாரின் ஏகபுத்திரருமான திரு. வே, கனகசபை முதலியார் அவர்கள் சென்ற புரட்டாசி 26உ (12-10-34) தமது 22-வது வயதில் இம்மண்ணுலக வாழ்க்கை நீத்தமை குறித்து மிக வருந்துகிரேம் என கரவெட்டிகிழக்கு S. S. கந்தையா அவர்கள் அறிவிக்கிருர்.

# கிளர்ச்சி

## திருநெல்வேலி ஜில்லா

### சங்கர நயினர் கோயில் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்

27-9-34 இரவு 6 மணிக்கு, தேவகோட்டை சைவத்திருவாளர் S. P. V. P. வாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் மாணவர்கள் T. M. சங்கரன், S. சங்கர நாராயணன் முறையே 'தெய்வம் பலியை விரும்புகிறதா?' 'பேய் பிசாசு என்பது உண்டா?' என்பது பற்றியும், திரு: M. திருவுடையா முதலியார் அவர்கள், 'தென் இந்திய ஜீவரக்ஷக பிரசார சபையின் அரும்பெருந் தொண்டும், பயனும்' என்பதுபற்றியும் பேசினர்கள். அவைத் தலைவர் அவர்கள் முகவுரை, முடிவுரையில் பலியின் கொடுமையைப்பற்றியும், பூசாரிகள், ஆவேசக்காரர்களின் பெரும் மோசங்களைப் பற்றியும் பேசி, ஐப்பசி மாதம் இறுதியில் இந்நகர் முப்புருறி அம்மன் ஆலயத்தில் நடைபெற யிருக்கும் பலியை நிறுத்துவதற்கு இந்நகரவாசிகளனைவரும் வேணும் பேருதவி செய்யவேணுமென்றும் வேண்டிக் கொண்டார்கள். ஜீவகாருண்ய சீலர்கள் பலர் தொண்டர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறி வந்தனோபசாரத்திற்குப் பின் கூட்டம் இனிது கலைந்தது.

### தீர்மானம்

(1) பண்டைப்புகழ் படைத்த பாரத நாட்டின்கண் அறநெறியையும், அன்பையும் பரப்ப அருந்தொண்டாற்றி வரும் சென்னை தென்னிந்திய ஜீவரக்ஷக பிரசார சபையினை இக்கூட்டம் பாராட்டுகிறது.

இங்ஙனம்,
S. பிச்சாண்டி முதலியார்.

### தலைச்சங்கப் பிரசாரகர் விஜயம்

25-10-34-ல் சென்னை தென் இந்திய செங்குந்த மகாஜன சங்க பிரசாரகர் திருவாளர் சு. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் விஜயம் செய்தார்கள். சங்கத்தினர்களால் வரவேற்கப்பட்டு உபசரிக்கப்பட்டு புகைப்படம் எடுக்கப்பட்டது. பெருமழையின் காரணமாக பொதுக்கூட்டம் நடைபெறவில்லை. 27-10-34-ல் இரவு 8 மணிக்கு குலஅபிமானி அ. வெ. ச. ஆறுமுக முதலியார் அவர்கள் இல்லத்தில், சங்க காரியக்கமிட்டி கூட்டம் தலைச்சங்க பிரசாரகர் அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றது. M. திருவுடையா முதலியார் அவர்கள் சமூக சீர்திருத்த சம்பந்தமாகவும், மித்திரன் அபிவிருத்தி சம்பந்தமாகவும் பேசினர்கள். தலைவர் அவர்கள் செங்குந்த மித்திரன் சம்பந்தமாகவும், போஷகர், பெரும்போஷகர், பரம்பரைச் சந்தா முதலியனபற்றியும் விளக்கமாகப் பேசினர்கள். கீழ்க்கண்ட தீர்மானங்கள்

நிறைவேறப் பெற்று வந்தனோபசாரத்திற்குப் பின் கூட்டம் இனிது கலைந்தது.

### தீர்மானங்கள்

(1) இந்நகரில் முதலாவதாக செங்குந்த மித்திரனுக்கு பரம்பரைச் சந்தாதாரராகச் சேர்ந்துள்ள திருவாளர் த. அ. த. சங்கர நமசிவாய முதலியார் அவர்களுக்கும், திருவாளர் தி. பா. திருநாவுக்கரசு முதலியார் அவர்களுக்கும் இக்கூட்டம் தனது மகிழ்ச்சியையும், நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறது.

(2) இந்நகர் செங்குந்த அபிவிருத்தி சங்கத்திற்கு செங்குந்த மித்திரனை இலவசமாக அனுப்பித்தர தலைச்சங்கத்தை மிகப் பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறது.

## கோயமுத்தூர் ஜில்லா

### ராக்கியாபாளையம்

5-10-34 காலை 10 மணிக்கு திரு. ம. ராயப்ப முதலியார் வீட்டில் திரு. செ. அ. முத்துச்சாமி முதலியார் அவர்கள் தலைமையில் செங்குந்தர் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அப்போது தலைவர் தமது முன்னுரையில் செங்குந்த மித்திரனை எல்லோரும் ஆதரிக்க வேண்டுமென்றும், உள்ளூர் சங்கத்தின் கூட்டம் மாதா மாதம் தவறாது நடைபெற வேண்டியது அவசியமென்றும் வற்புறுத்திப் பேசினார். தலைச்சங்கப் பிரசாரகர் திரு. ச. நா. குமரகுரு முதலியார் 'செங்குந்தர் பெருமை' என்பதுபற்றி பேசியபின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன.

1. செங்குந்த மித்திரனை ஆதரித்தல்.
2. சங்கக்கூட்டம் மாதா மாதம் தவறாது நடத்தல்.
3. சுபாசுபங்களில் தலைச்சங்கத்திற்கு நன்கொடை வழங்கல்.

11 மணிக்குக் கூட்டம் முடிந்தது.

**செ. அ. முத்துச்சாமி முதலியார், ஜவுளி.**

### மருதாபுரம்

15-9-34 இரவு 8 மணிக்கு மருதாபுரம் திரு. M. நஞ்சப்ப முதலியார் அவர்கள் வீட்டில் கூடிய கூட்டத்தில் தலைச்சங்கப் பிரசாரகர் திரு. ச. நா. குமரகுரு முதலியார் அவர்கள் 'செங்குந்தர் பராக்கிரமம்' என்பதுபற்றி சொற்பொழிவு நிகழ்த்தியபின், நம்மவர்கள் ஒவ்வொருவரும் மித்திரனை ஆதரித்தல், சுபாசுபங்களில் தலைச்சங்கத்திற்கு நன்கொடை வழங்கல், சிக்கனம் அநுஷ்டித்தல் என்பவை குறித்த தீர்மானங்கள் நிறைவேறின.

### வடவழி

16-9-34 இரவு 9 மணிக்கு வடவழி ஆசிரியர் V. P. மருதப்ப முதலியார் அவர்கள் வீட்டில் கூடிய பொதுக்கூட்டத்தில் ஷை முதலியார் அவர்கள் தலைமையில் தலைச்சங்கப் பிரசாரகர் திரு. ச. நா. குமரகுரு முதலியார் அவர்கள் 'செங்குந்தர் சீர்திருத்தம்' என்பதுபற்றி



நீண்ட சொற்பொழிவு ஆற்றினார். 'கல்வி அவசியம்' 'மித்திரனை ஆதரித்தல்', 'வீண் செலவை நீக்கிச் சிக்கனத்தை அநுஷ்டித்தல்', 'உலகப் போக்கறிந்து நடத்தல்' முதலியவை சம்பந்தமான தீர்மானங்கள் நிறைவேறின. 11 மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

### சிவகிரி செங்குந்தர் சன்மார்க்க சங்கம்

14-10-34 மாலை 6 மணிக்குக் காமாக்ஷியம்மன் கோயிலில் திரு. ச. நா. குமரகுரு முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய மாபெருங் கூட்டத்தில் திருவாளர்கள் சந்திரசேகர ஐயர், S. N. கிருஷ்ணசாமி ஐயர், ஆ. செங்கோட முதலியார், நா. இராமசாமி முதலியார் ஆகிய கனவான்கள் முறையே 'பெற்றோர் சங்கம்' 'ஆண்பெண் இருபாலர்க்கும் கல்வி அவசியம்' '**பத்திரிகையின் அவசியம்**' 'நமது வர்த்தகம்' என்பவை பற்றிக்கூறினர். நமது மித்திரனை ஆதரித்தல், சுபாசுபங்களில் தலைச்சங்கத்திற்கு நன்கொடை வழங்கல், பெற்றோர் சங்கம் நிறுவல், கிராம சுகாதாரம், காமாக்ஷியம்மன் கோயில் ரக்ஷணை, வியாபார ஒற்றுமை, பாவடிகுத்தகை முதலியவை சம்பந்தமான தீர்மானங்கள் நிறைவேறி அம்மனுக்கு தீபாராதனை நடத்தி, பஜனை பாடப்பெற்று கற்கண்டு முதலிய பிரசாதங்கள் வழங்கி ஆனந்த கோஷத்திடையே கூட்டம் இனிது முடிந்தது.

### ஆனங்கூர்

21-10-34 மாலை 7 மணிக்கு திரு. பு. ஆ. பழனியப்ப முதலியார் வீட்டில் கூடிய பொதுக்கூட்டத்தில் திரு. குமரகுரு முதலியார் அவர்கள் ஜீவகாருண்யம், சிக்கனம், நமது வீரம், நாம் இனிச்செய்ய வேண்டியவை ஆகியவைபற்றி இரண்டு மணிநேரம் பேசினார். 9-மணிக்குக்கூட்டம் இனிது முடிந்தது.

### திருச்செங்கோடு செங்குந்த வாலிபர் சங்கம்
### இரண்டாவது ஆண்டுவிழா

இச்சங்கத்தின் இரண்டாவது ஆண்டுவிழா நிகழும் பவஞு ஐப்பசி 11உ சனிக்கிழமை (27-10-34) மாலை 2-மணிக்கு எழுகரை செங்குந்தர் ஹாலில், சித்தோடு (ஈரோடு) திரு. லக்ஷ்மண முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஈரோடு பஞ்சாயத்து போர்டு மெம்பரும், சுதேசி ஜவுளி வர்த்தகச் சங்கக் காரியதரிசியும், முனிசிபல் கௌன்சிலருமான திரு. S. V. S. இராமலிங்க முதலியார் அவர்கள் கொடியேற்றுவிழா வாற்றினர். தலைவர் தேர்தலும் முகவுரையும் ஆனபிறகு சங்கத்தின் வருடாந்தர அறிக்கை காரியதரிசியால் வாசிக்கப் பெற்றது. பின்னர். திரு. ஈரோடு S. மீனாக்ஷிசுந்தர முதலியார் B.,A.,L.T அவர்களால் 'கல்வி' என்பது பற்றியும், உபாத்தியாயர் திரு. A. சோமசுந்தர முதலியார் அவர்களால் 'ஒற்றுமை' என்பது பற்றியும், திரு. K. A. காசிவிஸ்வநாதன் அவர்களால் 'உலகப்போக்கும் நமது கடமையும்' என்பது பற்றியும் உபந்யாசிக்கப் பெற்றன. சில தீர்மானங்கள் நிறைவேறின. தலைவர் முடிவுரைக்குப் பின்

சந்தன தாம்பூலம் வழங்கப் பெற்று வந்தனோபசாரத்துடன் கூட்டம் நிறைவேறிற்று.

### நிறைவேறிய தீர்மானங்கள்

1. நமது குலத்தவர்கள் மதுபானத்தை அறவே ஒழிக்க வேண்டும்.

2. கல்வியை எங்கும் பரப்ப முயற்சி செய்ய வேண்டும்.

மாலை 7-மணிக்கு சேலம் திரு. K. R. வேணுகோபால் அய்யர் அவர்களால் விகடக் கச்சேரி நடைபெற்றது.

ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விஷயங்களாவன :— "உலக முழுதும் பல துறைகளிலும் முனைந்து நிற்கும் இக்காலத்தில், நம் சமூகத்தவர் மாத்திரம் பின்னடைந்தே நிற்பதையுணர்ந்த நம் தலைவர்கள் ஆங்காங்கே பல சங்கங்களை நிறுவி உறங்கிக் கிடந்த நம் சமூக மக்களுக்கு ஊக்கமுண்டாக்கி வருகிறார்கள். இவ்வூரில் பல வாலிபர்களிருந்தும் சமூக விருத்தியைக் கவனியாதிருக்கிறார்கள். ஆயினும் சமூக சேவை செய்துவரும் ஸ்ரீ திருஞான சம்பந்த சுவாமிகள் பக்தஜன சபையாரோடும், செங்குந்த பஞ்சாயத்து பேர்டாரோடும் நமது முன்னேற்றங் கருதி ஒத்துழைப்பதே இச்சங்கத்தின் நோக்கமாகும். எல்லா வாலிபர்களும் சங்கத்தில் சேர்ந்து உழைத்தால் பெரும் பயனுண்டாகும். இவ்வூரிலுள்ள 2500 செங்குந்தர்களில் 500 பேர்களே எழுதப்படிக்கத் தெரிந்தவர்களா யிருக்கிறார்கள். இதற்குக் காரணம் வறுமையும், அசிரத்தையுமே யாகும். நம்மவர்களுக்கு இரவு பாடசாலையே அதிகப் பயன் தரும் என்பதையுணர்ந்து 11-6-34-ல் இச்சங்க ஆதரவில் இரவு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. பெற்றோர் அசிரத்தையால் 33 பிள்ளைகளே இதில் வாசிக்கிறார்கள். ஒவ்வொரு பிள்ளையையும் அனுப்புமாறு பெற்றோரை வேண்டுகிறோம். நம் சமூகத்தவர் உள்ள ஒவ்வோரிடத்திலும் ஒற்றுமை யின்மையைக் காண்கிறோம். சென்ற சில வருஷங்களாக நம்மவர் புனிதமான மண்டபக் கட்டளை தடைபட்டதற்கு நம்மிடை ஒற்றுமையின்மையே காரணம். சில வயோதிகர்கள் இத்தகைய சங்கம் நமது கட்டுப்பாட்டை உடைக்க முயல்வதாக தப்பபிப்பிராயம் கொள்ளுகின்றனர். இச் சங்கம் எத்தகைய தீங்கையும் யாருக்கும் இழைக்காமல் நமது சமூக முன்னேற்றத்திற்காகவே உழைத்து வருகிறதென்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்."

T. M. அருணாசல முதலியார், காரியதரிசி.

---

## அடுத்த ஜனவரி மாத முதல்

நமது மித்திரனுக்கு 1935-ம் ஆண்டு ஜனவரி மாத முதல் [illegible] வயது துவங்குகின்றது. அது முதல், உள்ளத்தைக் [illegible] கொள்ளும் உயரிய கட்டுரைகள், திடுக்கிடத் தக்க நாவல்கள், [illegible] மிகுந்த சிறு கதைகள், விநோதப் படங்கள் மிளிர புதிய உருவுடன் மித்திரன் வெளியிடப் பெறும்.

மாதிரிக் [illegible]க்கு உடனே எழுதுங்கள்.